www.padippakam.com



# உலகமயமாதலும் தமிழ் இலக்கியமும்
## - கட்டுரைகள், நூல் திறனாய்வுகள்

# தமிழ்நேயம் - 2

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# உலகமயமாதலும் தமிழ்க்கவிதையும்

## தமிழ்நேயம் - 2 முன்னுரை

தமிழ்நேயம் அதிர்வுகள் - அசைவுகள் என்ற பெயரில் வெளிவந்த முதல் இதழைத் தொடர்ந்து நண்பர்கள் ஒத்துழைப்போடு இரண்டாம் இதழ் வெளிவருகிறது.

உலகமயமாதலின் கொடிய விளைவுகளை எதிர்கொள்ளும் முறையில் தமிழ் மக்கள் தங்கள் வாழ்வையும், வரலாற்றையும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். இதற்குரிய முறையில் தமிழ் இலக்கியம், வரலாறு முதலியவற்றை மறு ஆய்வுக்கும், மறு மதிப்பீட்டிற்கும் உட்படுத்திக் கொள்ள வேண்டும். புதியதாக வரும் தமிழ் படைப்புக்களையும், புதிய நோக்கில் பயில்வதில் நாம் பின்னடைந்து விட இயலாது.

இத்தகைய உணர்வுகளை முன்நிறுத்தி இந்த இதழில் படைப்புக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில அசலானத் தமிழ் ஆய்வுகளாகவும் இருப்பதை நண்பர்கள் புரிந்து கொள்ள முடியும். தமிழ் ஆன்மா என்றும், தமிழ் மெய்யியல் என்றும் நண்பர்கள் பேசுகிறார்கள். மேற்கத்திய சூழலில் கீழ்த்திசையில் இருந்து சென்றவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்தும் ஒரு கட்டுரை ஆராய்கிறது.

தமிழ் ஆய்வறிஞர்களில் மயிலை சீனி வேங்கடசாமி அவர்களின் நூற்றாண்டு விழா நினைவாக அவரது வரலாற்று ஆய்வுகள் குறித்து ஒரு கட்டுரை இங்கு வெளியாகிறது. நூற்றாண்டு விழாக்காணும் சாமி சிதம்பரனார் மற்றும் பாலாணர் பற்றிய கட்டுரைகளும் அடுத்துவரும் தமிழ்நேயங்களில் வெளிவரும்.

தமிழ்நேயம் தொடர்ந்து பெற கண்டு நன்கொடை ரூ. 100/- மட்டும் அனுப்புங்கள். மரியாதை கருதி இதழ் அனுப்புவது சாத்தியமில்லை. இதழ் கிடைத்தவுடன் இந்த இதழுக்குரிய தொகையை உடனடியாக அனுப்புங்கள்.

- தங்கள்

*ஞானி, மே 2001*



படிப்பகம்

www.padippakam.com

# உள்ளடக்கம்

பக்கம்

கோரமுகத்தோடு உலகமயம் - மேதா பட்கர் 3

இருபத்தொன்றைத் தமிழ்க்கவிதை
எப்படி எதிர்கொள்ளும்? - ஞானி 10

தமிழ்வானின் விடிவெள்ளி
- மயிலை சீனி வேங்கடசாமி - இரணியன் 18

நுண்கவிதை - தமிழ்நாடன் 29

சித்தர் இலக்கியங்களே தமிழ் ஆய்வின் அடித்தளம்
- மருத்துவர் கோபி 37

இந்திரா பார்த்தசாரதியின் நாடகங்கள் - ஆ.ராமசாமி 45

புது உலகப் பெண்கள் - இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் 51

பெண்ணியப் பார்வையில் விவிலியம் - சுதாகர் 56

தமிழி கவிதைகள் 61

நூல் திறனாய்வுகள் 63

அ) இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு
ஆ) கூளமாதாரி (நாவல்)
இ) காற்றாய் ... புயலாய் ...
ஈ) "குணாவின் ஆசிய விதம்".
உ) மார்க்சியம் தேடலும் திறனாய்வும்
ஊ) இந்தியாவில் தத்துவம் கலாச்சாரம்
எ) இருபது நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை -
இருபதாம் நூற்றாண்டு பார்வை
ஏ) பிணத்தின் முகங்கள்

தமிழ்நேயம் : அகமும் புறமும் 90

படிப்பகம்

www.padippakam.com

# கோரமுகத்தோடு உலகமயம்

*- மேதா பட்கர்*

உலகமயம் எனும் பேரபாயத்துடன் பொதுத்துறை அழிப்பு, விவசாய வீழ்ச்சி, மக்கள் விரோத வளர்ச்சிப் போக்கு, நீதித்துறையின் வீழ்ச்சி, ஊழலின் வளர்ச்சி, மதவெறி, ஜாதிவெறி அரசியல் கட்சிகளின் எழுச்சி என கேடுகள் பல சூழ்ந்த சூழலில் நாம் கூடியுள்ளோம். இவற்றை எதிர்த்துப் போராடி வெல்லும் லட்சியம் கொண்ட அனைவரையும் ஒருங்கிணைப்பதும், சேர்த்துப் போராடுவதும் அவசியம்.

உலகமயம் நமது கதவுகளைத் தட்டி நொறுக்கி உள்ளே நுழைகிறது. இது ஒன்றும் திடீரென வந்த புதிய கதையல்ல. இது கடந்த 50 ஆண்டுகளாகத் திட்டமிடப்பட்டு வருவது. ஆனால் நமது நாடாளுமன்றத்தில் இதனை விவாதிக்காமல், மக்களின் கருத்தைக் கேட்காமல், இதை நுழைய விட்டுள்ளனர். எந்த அரசியல் கட்சியும் மக்களுக்கு இதை உணர்த்தும் பொறுப்பை ஏற்கவில்லை.

விடுதலையின் பின் காந்தியப் பொருளாதாரம் கைவிடப்பட்டது. நேருவின் கலப்புப் பொருளாதாரம் ஏற்கப்பட்டது. சோசலிசப் பின்னணியில் பொதுத்துறை உருவானது. ஆனால் பின் அரசு கையெழுத்திட்டு வரவேற்ற உலகமயம், WTO ஆகியன நமது சுய ஆதிக்க உரிமையை, இறையாண்மையை கேள்விக் குறியாக்கியுள்ளன. மனிதநேயம், இயற்கைநேயம் என அனைத்தும் பலியிடப்படுகிறது.

இந்த ஆபத்தை எச்சரித்தவர்கள், எதிர்த்தவர்கள் வளர்ச்சியின் எதிரிகள் என இகழப்பட்டனர். ஆனால் இன்று பஞ்சாப், கேரளம், ஆந்திரம், நீலகிரி என நாடு முழுவதும் உள்ள உணவுத் தன்னிறைவைத் தந்த விவசாயிகளை தற்கொலை விளிம்பிற்குத் தள்ளிவிட்டது உலகமயம். கோவையில் பவுண்டரிகள் மூடப்பட்டு வருகின்றன. 300 பஞ்சாலைகள் மூடப்பட்டு விட்டன. சிவகாசியின் தீப்பெட்டித் தொழில் சிதைந்து போனது.

இந்தப் பேரழிவை நகர்ப்புறத்து, படித்த அரசு சம்பளம் பெறும், மேல்தட்டு மக்கள் துவக்கத்தில் வேடிக்கை பார்த்தனர். அக்கறையின்றி இருந்தனர். ஆனால் இன்று பொதுத்துறைகள் யாவும், லாபத்தில் நடப்பனவற்றைக் கூடத் தனியாருக்குத் தாரை வார்க்க முடிவு செய்துவிட்டது அரசு. இனியாவது அவர்கள் விவசாயிகளுடனும், உழைக்கும் கீழ்த்தட்டு மக்களுடனும் ஒருங்கிணைந்து போராட முன்வரவேண்டும். "சுதந்திர இந்தியா அடித்தட்டு மக்களின் நலன்களைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும்" என்றார் காந்தி. ஆனால் அரசின் வளர்ச்சித் திட்டங்கள் யாவும் அப்பாவி அடித்தட்டு மக்களின் வாழ்வுரிமைகளைப் பலியிட்டே எழுகின்றன.

www.padippakam.com

ஏப்ரல் முதல் கட்டுப்பாடற்ற இறக்குமதிக்கு நாட்டைத் திறந்து விட்டுள்ளனர். இது சமத்துவமற்ற போட்டிக்கு வழிவகுக்கும். தொழில் நுட்பத்திறனும், பொருளாதார பலமும் பெற்ற மேலை நாடுகளுடன், நூற்றாண்டுகளாகச் சுரண்டப்பட்ட நாடுகள் எப்படிச் சமத்துவமாகப் போட்டியிடுவது? இந்தப் போட்டிக்கு நமது மக்களை, தொழிற்சாலைகளைத் தயாரிக்காமல் சந்தையைத் திறந்து விட்டுள்ளனர். நமது சிறுதொழில்கள், கிராமத் தொழில்கள் ஏன் நடுத்தரத் தொழில்கள்கூட ஆதரவற்று மடியப் .போகின்றன.

சரத்ஜோஷி விவசாயப் பொருட்கள் ஏற்றுமதிமூலம் இந்திய விவசாயி பணக்காரனாவான் என்றார். ஆனால் அந்த எதிர்பார்ப்பு பொய்யாகி விட்டது. தன்னிறைவு பெற்ற உற்பத்திப் பொருட்களுக்குப் போட்டியாக இறக்குமதி நடக்கிறது. பருத்தி, கோதுமை, கொப்பரை, ரப்பர், எண்ணெய், பால், முட்டை, இறைச்சி, ஆப்பிள் என உற்பத்தி செய்த விவசாயிகள் வாழ்விழந்து நிற்கின்றனர்.

பசுமைப்புரட்சி வறுமை போக்கும் என்றார்கள். மக்கள் தொகையில் பாதி அரைப்பட்டினி. உணவுப் பகிர்வு சரியாக நடக்கவில்லை. மக்களிடம் வாங்கும் திறன் இல்லை. தன்னிறைவு பெற்ற கிராமங்கள், மலைப்புற மக்களின் வாழ்வு ஆதாரங்கள் அழிக்கப்பட்டன.

நகர்புற மக்களிடம் நுகர்வு வெறி வளர்க்கப்பட்டது. அலங்கார, ஆடம்பர, கவர்ச்சி விளம்பரங்கள் மூலம் மக்களைச் சுரண்ட புதிய புதிய யுக்திகளுடன் பன்னாட்டு நிறுவனங்கள் வருகின்றன.

நமது வேம்பையும், பாசுமதி அரிசியையும் வடிவுரிமை போட்டுத் தமதாக்கிக் கொள்ள முயன்ற அமெரிக்க, ஜெர்மனியக் கம்பெனிகளை. வழக்காடி வென்று விட்டோம். அத்துடன் நாம் நிறைவு பெற்றுவிட முடியாது. நமது மக்கள் காலம்காலமாக வளர்த்து அறிந்த மூலிகைகளைக் கொள்ளையிட வருகிறார்கள். அரசு இவற்றைப் பாதுகாக்க முன்வர வேண்டும். ஆனால் பாரம்பரியத்தைக் காப்பதாகக் கூறிக் கொள்ளும் இந்த அரசு அவை கொள்ளை போவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

மனிதநேயமுகம் கொண்ட உலகமயம் என்றெல்லாம் பேசுகின்றனர். ஆதிக்க வெறிகொண்ட மேலைநாடுகள் எப்படி சமத்துவமான மனிதநேயம் கொண்ட பொருளாதாரத்திற்கு அனுமதிக்கும்? எனவே உலகு தழுவிய மாற்றுப் பொருளாதாரச் சிந்தனைக்கு நாம் வித்திடுவது அவசியம்.

வளர்ச்சி பற்றிய இன்றைய சிந்தனைப் போக்கை நாம் மறுபரிசீலனை செய்தாக வேண்டும். தனியார் தொழில்கள் வளர


படிப்பகம்

www.padippakam.com

நிலம், மூலப்பொருள், போன்ற வசதிகள் தேவை என்பதற்காக குறுகிய கால லாப நோக்கில் - இயற்கை வளங்கள் சூறையாடப்படுகின்றன. நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் தர வேண்டும் என்ற அடிப்படை உரிமைகள் நிறைவேற்றப்படவில்லை பெயரளவில் இருக்கும். நில உச்சவரம்புச் சட்டத்தைக் கூட பெரிய கம்பெனிகளுக்காக பலியிடத் தயாராகி விட்டது அரசு. ரிலையன்ஸ் பெரும்பண்ணை நடத்த 6000 ஏக்கர் நிலத்தை கர்னாடக அரசு தருகிறது. மூலப்பொருட்களுக்காக காடுகள் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்குத் தந்து சிமெண்ட் தொழிற்சாலைகள் உருவாக்கப்படுகின்றன. இயற்கை வளங்களின் உண்மையான மதிப்பைக் கணக்கிட அரசு மறுக்கிறது.

நமது கல்வித்துறை இத்தகைய சுயநலக்காரர்களுக்குத் துணை நிற்பவர்களையே தயாரித்துத் தருவதாக உள்ளது. அடித்தட்டு மக்களே தொடர்ந்து வளர்ச்சியின் பலியாடுகளாக்கப் படுவதை நியாயப்படுத்துகிறது 'கல்வியறிவு'.

ஜார்கண்ட் மாநிலம் மலைவாழ் மக்களுக்காக உருவாக்கப் பட்டது. ஆனால் தமது வாழ்வுரிமைக்காகப் போராடிய பழங்குடியினர் 8 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அரசும், காவல்துறையும் மக்களுக்கு ஆதரவாக இல்லை என்பதையே நாம் ஒவ்வொரு இடத்திலும் கண்டுவருகிறோம்.

தஞ்சை கடற்கரை நெடுகிலும் இறால் பண்ணைகளுக்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை பெரிய கம்பெனிகளும், அரசியல்வாதிகளும் வாங்கிப் போட்டுள்ளனர். மீனவர்களின் வாழ்வைப் பாதிப்பதாக, விளைநிலத்தின் தன்மையைப் பாதிப்பதாக உள்ளதால் சிறு விவசாயிகள் வாழ்விழந்து போகின்றனர். இதற்கான நீண்ட போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர் காந்தியவாதிகளான ஜெகன்னாதனும் அவரது துணைவியார் கிருஷ்ணம்மாளும். 80 வயது கடந்த அவர்கள் பயங்கரமான ஆயுதங்களுடன் தாக்க முயன்றதாக வழக்குத் தொடுத்துள்ளது காவல்துறை.

கோவையை அடுத்த ஆணைகட்டியில் பொழுதுபோக்குக்காக விலங்கியல் பூங்கா உருவாக்க 200 பழங்குடிக் குடும்பங்கள் வெளியேற்றப்படுகின்றனர்.

மின்சாரம் தயாரிக்க ரிலையன்ஸ் கம்பெனி நர்மதா நதியில் மகேஸ்வர் அணை கட்ட அனுமதித்துள்ளனர். காலம் காலமாகத் தாங்கள் வாழ்ந்து வரும் பகுதியிலிருந்து மாற்று ஏதுமின்றி வெளியேற்றப்படுவதை பழங்குடிமக்கள் எதிர்க்கின்றனர். 300 மேல் குடியினரைக் கைது செய்து தலித்துக்கள்,- பழங்குடிகள் வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுத்துள்ளனர். காவல்துறை மக்கள் பக்கம் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான இடைவெளி அதிகமாகிக் கொண்டே வருகிறது. அதன் விளைவுதான் இத்தகைய போராட்டங்கள்.

பம்பாயில் மில் முதலாளிகள் தமது மில்களை மூடி தொழிலாளர்களை வேலையின்றி விரட்டினர். பின்னர் நகரில் மையத்தில் உள்ள அவற்றைப் பிரித்து விற்று பெரும் லாபம் சம்பாதித்து விட்டனர். இந்தத் தொழிலாளர் விரோதத்தில் பல அரசியல் கட்சியினருக்கும் பங்கு உண்டு.

பல பெரிய முதலாளிகளின் சம்பளப் பட்டியலில் நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் உள்ளனர். ஊதாரித்தனமான தேர்தல் செலவுகளுக்கு நிதி தருபவர்களும் இவர்களே. அங்கொன்றும், இங்கொன்றுமான தேர்தல் சீர்திருத்தங்கள் போதாது. ஜனநாயகத்தின் முகத்தையே மாற்றியாக வேண்டும். மக்களுக்கு அவர்களின் அதிகாரம், மக்களாட்சியின் வலிமை ஆகியவற்றைப் பயிற்றுவிக்க வேண்டும்.

அகண்ட நான்குபாதைச் சாலைகள், மேம்பாலங்கள், எனப்பல நவீன கட்டுமானங்கள் வருகின்றன. இவை வளர்ச்சியின் சின்னம் என்ற மயக்கம் மக்களிடம் உள்ளது. இதற்காகப் பெரும் கடன் உலக வங்கியிடம் வாங்கப்படுகிறது. கடன் வட்டி யாவும் நாளை மக்கள் தலையில். இந்த சாலைகள், பாலங்கள் வாழ்விட மற்றவர்களுக்கு வீடாகுமா? கம்ப்யூட்டர் டிஸ்க்குகளைச் சாப்பிட முடியுமா? பெருவாரி மக்களைப் புறம்தள்ளிய வளர்ச்சி இது.

நாம் மனித நீதிக்கு உட்பட்ட வளர்ச்சியை ஆதரிக்கிறோம். ஒரு சிலரான மேல்தட்டுமக்கள் ஆடம்பர வசதிகளுக்காக அடித்தட்டு மக்களை பலியிடும் வளர்ச்சி சிந்தனையை எதிர்க்கிறோம். இயற்கை வளம், மனிதவளம் இவற்றைத் தவறாகப் பயன்படுத்தும் வளர்ச்சிப் போக்கை நாம் எதிர்க்கிறோம்.

நகர்ப்புற அறிவுஜீவிகள் இனியும் மேடையேறி பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. அவர்கள் உழைக்கும் மக்களின் போராட்டத்திற்குத் துணை நிற்க வேண்டும்.

இன்று அரசியல் மக்களின் மரியாதைக்குரியதாக இல்லை. தெஹல்கா நமது அரசியல்வாதிகளின் அசிங்கமான முகத்தின் சிறுவெளிப்பாடு. நேர்மையாளர்கள் என வேஷமிட்டவர்கள் முகத்திரை கிழிந்து நிற்கின்றனர். இன்னும் எத்தனை திருடர்கள் அங்கு உள்ளனரோ? மக்கள் மாற்றத்துக்காகப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. திரு மார்கண்டன் அவர்களின் எழுச்சிப்பயணம் இதற்கு வழிவகுக்கும்.

தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் இடையிலான

படிப்பகம்

www.padippakam.com

இடைவெளி பெரிதாகி வருகிறது. எல்லா அரசியல் கட்சிகளிலும் இது நடந்து வருகிறது. உலகமயம் நமது அரசியல்வாதிகளையும், அரசியல் கட்சிகளையும் பெரும் ஊழலுக்கு உட்படுத்திவருகிறது. அவர்கள் பலியாகிறார்கள். நாம் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களும் அல்ல வெறுப்பவர்களோ, எதிர்ப்பவர்களோ அல்ல. மக்களின் நம்பிக்கைக்குரிய நலன் நாடும் அரசியல் தேவை என்கிறோம்.

துவக்க காலத்திலிருந்தே நாம் என்ரான் ஒப்பந்தத்தை எதிர்த்து வருகிறோம். தற்போதைய நிகழ்வுகள் நாம் சரி என்பதையே நிரூபித்துள்ளது. பிஜேபியும் சிவசேனையும் என்ரானை எதிர்த்தனர். ஆனால் கட்சிக்கு வந்தவுடன் என்ரானை ஏற்று எதிர்த்த நம்மைத் தாக்கினார்கள். காவல்துறையும் அதற்குத் துணை நின்றது. என்ரான் மின்சாரம் இல்லாமல் மகாராஷ்டிரம் முன்னேற முடியாது என்று மக்களை நம்ப வைத்தனர். சரத்பவார் முதல் பால்தாக்ரே வரை என்ரானிடம் பணிந்தனர். என்ன விலை பெற்றனர் தெரியாது. இன்று என்ரானிடம் போட்ட ஒப்பந்தப்படி பணம் கட்டமுடியாது. மின்சாரக் கட்டணம் அதிகம், தேவையில்லை என்கின்றனர். அரசுத்துறை மின்சாரம் ரூ. 1.50 ஆனால் என்ரான் மின்சாரம் ரூ. 8 இது போகப் போக உயரும். மின்சாரத்தைக் கொண்டு செல்வதில் உள்ள பயணத்தில் கடத்தல் இழப்பு அதிகம். தனியாரிடம் மின்துறையை விட்டுவிட்டால் சரியாகி விடும் என்கின்றனர். மருந்தே விஷமாகும் நிலைபற்றி அவர்கள் சிந்திக்கத் தயாராக இல்லை. மக்களே பாதிப்புக்கு உள்ளாவார்கள். நாம் நுகர்வோராகக் கூட போராட வேண்டியுள்ளது.

இத்தனை மின் திட்டங்கள் போட்டும் 60% வீடுகள் இருளில். சேரிகளுக்கு வெளிச்சம் என்பது சூரிய ஒளி மட்டுமே. போட்ட திட்டங்கள் செய்த செலவு உற்பத்தியான மின்சாரம் யாருக்குப் போய்ச் சேர்ந்தது?

சுதேசியம் பேசி ஆட்சிக்கு வந்த இந்த அரசு நமது அரசின் எண்ணெய் வளத் துறையை என்ரானுக்குத் தாரை வார்க்க முடிவெடுத்து விட்டது. தனியார்மயமாவது எதுவரைப் போகும் என்பது தெரியவில்லை. மார்க்சிஸ்ட்டுகள் ஆளும், கோல்கத்தாவில் கூட தண்ணீர் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. இனி குப்பை அள்ளுவது கூட தனியார் வசம் ஒப்படைக்கப்படும். மக்கள் ஒவ்வொன்றுக்கும் பணம் தந்தாக வேண்டும். நாட்டின் கல்விக் கொள்கையை வடித்துத்தரும் பொறுப்பைக்கூட அம்பானிகளிடம் விட்டுவிட்டது இந்த அரசு.

நர்மதா பள்ளத்தாக்கில் என்ன நடக்கிறது என்பதை நீங்கள் வந்து பார்க்க வேண்டும். எங்கள் போராட்டம் தொடர்கிறது. எங்கள் மக்கள் மரங்களை வெட்டி மாளிகை கட்டவில்லை. யானைகளைக்


படிப்பகம்

www.padippakam.com

கொன்று வீட்டை அலங்கரிக்கவில்லை. இயற்கையால் வாழ்பவர்கள். அவர்கள் இயற்கையைக் காப்பவர்கள். அவர்கள் தங்கள் லாபத்திற்காக நதிகளை மாசுபடுத்தவில்லை. ஆனாலும் அவர்கள் தங்கள் வாழ்வின் ஆதாரமான வனங்களிலிருந்து விரட்டப்படுகின்றனர். இந்த வளர்ச்சி மோகக்காரர்களுக்கு இயற்கை பற்றி அக்கறையில்லை. மனிதர்கள் பற்றி அக்கறை இல்லை. பத்திரிக்கைகளும், ஊடகங்களும் கூட அவர்களின் சொத்து. அவை மக்களின் போராட்டம் பற்றி வெகுவாகப் பேசுவதில்லை.

நாங்கள் தொழில்நுட்ப உத்திகளுடன் போராடுவதில்லை. புத்திசாலித்தனமான, அறிவு சார்ந்த உத்திகளுடன் திட்டமிட்டுப் போராடுவதில்லை. எங்கள் போராட்டம் தேவையால் எழுவது. உணர்ச்சியால் வளர்வது. நாங்கள் வெல்கிறோமா தோற்கிறோமா என்பதல்ல பிரச்சனை. எதுவானாலும் எங்கள் மக்கள் தங்கள் மண்ணை விட்டு ஓடமாட்டார்கள்.

கடைசியாக நான் ஒரு முக்கியமான விஷயத்தைப் பேசியாக வேண்டும். உச்சநீதிமன்றத்தை அவமதித்தோம் என என் மீதும், அருந்ததிராய் போன்றோர் மீதும் தொடுத்த வழக்கு அடுத்த சில நாட்களில் விசாரணைக்கு வர உள்ளது. நாங்கள் வெளியே பேசுவதை நீதிமன்றத்தினுள்ளும் சென்று நீதிமான்கள் முன் பேச ஒரு வாய்ப்பெனவே இதைக் கருதுகிறோம். மக்களின் நிலையை, அவர்கள் வஞ்சிக்கப்பட்டதை வதைக்கப்பட்டதை நாங்கள் சொல்ல ஓர் வாய்ப்பு. நடப்பு எத்தனை கோரமாக உள்ளது என்பதை அவர்கள் அறிந்தாக வேண்டும். 5 லட்சம் அப்பாவி பழங்குடி மக்களின் வாழ்வைப் பாதிக்கும் திட்டம். மறுவாழ்வுக்குத் தர இடமில்லை என மத்தியபிரதேச அரசு மறுத்தபோதும் மேலே கட்டுங்கள் என, உத்தரவிட்ட தீர்ப்பை நாங்கள் எப்படி நீதி என்று ஏற்பது? பெரிய அணைகள் பற்றிய உலகளாவிய ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கச் சில நாட்களே உள்ள நிலையில் அவசர அவசரமாக வாசிக்கப்பட்ட இத்தீர்ப்பு மக்களுக்கு எதிரானது என்பதை நாங்கள் எப்படிச் சொல்லாமல் இருக்க முடியும்?

பெரிய அணைகள் பற்றிய உலகளாவிய ஆய்வை உலக வங்கி நடத்தியது. அதில் அணை கட்டுபவர்கள், கடன் தருபவர்கள், உலக வங்கிப் பிரதிநிதிகள், அணையை ஆதரிப்பவர்கள் எங்களைப் போல அணையை எதிர்க்கும் சிலர் எனப் பல தரப்பினரையும் கொண்டது அந்த ஆய்வுக்குழு. அந்த ஆய்வுக் குழுவை இந்திய அரசு அனுமதிக்கவும் மறுத்தது. அந்த ஆய்வின் முடிவு நெல்சன் மண்டேலாவால் வெளியிடப்பட்டது. அது பெரிய அணைகள் பற்றி உருவாக்கப்பட்ட பல நம்பிக்கைகளைப் பொய்யாக்கியுள்ளது. பெரிய அணையால் உயர்ந்த உணவு உற்பத்தி 12% மட்டுமே. அவை வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் என்பது முற்றிலும் சரியல்ல.

www.padippakam.com

மூழ்கடிக்கப்படும் காடுகள், இழக்கும் இயற்கை வள மதிப்பு மிக அதிகம். பாசனம் பெறும் பகுதியில் நீர்கோப்பு, உவர்ப்பாதல் மூலம் பயனற்றுப் போகும் நிலம் ஏராளம். செலவு செய்யும் பணத்துக்கு ஏற்ப லாபம் தருவதில்லை என்பன போன்ற உண்மைகளை பெரிய அணையின் ஆதரவாளர்களே பெரிதும் கொண்ட அக்குழு பதிவு செய்துள்ளது. இதை உச்சநீதிமன்றம் கணக்கிலெடுக்காதது தீர்ப்பு சொன்னது தவறு என்று கூறுவது நீதியை அவமதிப்பதாகுமா?

அரசு, காவல்துறை, நிர்வாகம், நீதி என யாவும் மக்கள் சார்பாக இருக்க வேண்டியவை. ஆனால் உண்மை நிலை அப்படி இல்லை. அதிகார வர்க்கம் தனது அறிவால் மக்களை ஏமாற்றுகிறது. முட்டாளாக்கி வருகிறது. நல்ல அதிகாரிகள் கூட எதுவும் செய்யமுடியாத இந்த மோசமான இயந்திரத்தின் உதிரிபாகமாகச் செயல்பட நேர்கிறது. அதிகார வர்க்கம் பணக்காரர்களுக்கும், பன்னாட்டுக் கம்பெனிகளுக்கும், மேல்தட்டுக்காரர்களுக்குமே ஆதரவாக உள்ளது உழைக்கும் அடித்தட்டு மக்களுக்கு எதிராகவே உள்ளது. அவர்களுக்குத் தங்கள் பிள்ளைகள் அமெரிக்கா போனால் சரி, ரிட்டயர் ஆனபின் உலவங்கியில் ஒரு வேலை கிடைத்தால் சரி. நாடு பற்றி மக்கள் பற்றி இவர்களுக்கு அக்கறையில்லை. பொதுத்துறைகளுக்கு எதிரான மாற்றங்களுக்குச் சாதுரியமாக சட்டத்தில் வழிசெய்து முடிக்கும் திறமை பெற்றவர்கள் இவர்கள்.

நீங்கள் நர்மதா பள்ளத்தாக்குக்கு வாருங்கள். எங்கள் போராட்டத்தைப் பாருங்கள். பங்கெடுங்கள் நாங்கள் பல முனைகளில் போராடி வருகிறோம். நாங்கள் எங்கள் போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை. காயப்பட்ட நீதியைச் சரிசெய்யும்வரைப் போராடுவோம். நவம்பர் மாதத்தில் காலவரையற்ற தொடர் போராட்டத்தை மேற்கொள்ளப் போகிறோம்.

நம் பிள்ளைகளுக்கு எத்தகைய உலகத்தை நாம் விட்டுச் செல்லப் போகிறோம்? மாசுபட்ட மண்ணை, விஷமான நீரை, நோய்தரும் காற்றை, ஊழல் மிகுந்த அரசியலை, மனிதாபிமானமற்ற வர்க்கத்தை, இயற்கையைச் சூறையாடும் வளர்ச்சி சிந்தனையை இவற்றைத்தான் நாம் விட்டுச் செல்லப் போகிறோமா?

இதைத் தடுத்து நிறுத்துவது, எதிர்த்து வெல்வது மாற்றுவது இதுதான் நம் போராட்டம் இது தொடரும். இதில் இணக்கம் உள்ள ஒவ்வொருவரையும் இணைக்க வேண்டும். நாம் ஒன்றுபட்டுப் போராடுவது காலத்தின் தேவை. மாற்றத்திற்கான நமது போராட்டத்தை வலிமைபெறச் செய்வோம். ஒற்றுமையுடன் தொடர்வோம்!

குறிப்பு : கோவையில் மேதா பட்கர் அவர்கள் ஆற்றிய உரையை தமிழில் தொகுத்தவர் டாக்டர் ஜீவானந்தம்.



படிப்பகம்

www.padippakam.com

# இருபத்தொன்றைத் தமிழ்க்கவிதை எப்படி எதிர்கொள்ளும்?

- ஞானி

1. இருபது நூற்றாண்டுகளுக்கு மேல் பலவகைப் பரிமாணங்களோடு வளர்ச்சி பெற்ற தமிழ்க் கவிதையை, இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் வைத்து நாம் சுவைக்கிறோம், புரிந்து கொள்கிறோம், பாராட்டுகிறோம், மதிப்பீடு செய்கிறோம். இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் தமிழியம் என்றும், பகுத்தறிவு என்றும், சமதர்மம் என்றும் நாம் பெற்றிருக்கும் பார்வைகளின் வழியே முந்திய நூற்றாண்டுகளின் கவிதையை நாம் படிக்கிறோம். பக்தி இலக்கியமும், புராண இலக்கியங்களும், பிரபந்தம் என்று சொல்லப்படும் பலவகை இலக்கியங்களும் நமக்கு எப்படியோ உவப்பாக இல்லை. யமகம், திரிபு என்ற முறையில் எழுதப்பட்ட கவிதைகளையும் நம்மால் சுவைக்க முடியவில்லை. எதுகை, மோனை, சீர், தளை, யாப்பு என்ற முறையில் எழுதப்பட்ட கவிதைகள்கூட நமக்குள் கேள்விகளை எழுப்பின. புதுக்கவிதை என்ற முறைக்கு நாம் வந்து சேர்ந்திருக்கிறோம்.

கவிதை குறித்து இப்பொழுது கூடுதலாக அறிந்திருக்கிறோம். கவித்துவம் பற்றி இப்பொழுது பேசுகிறோம். கவிதை இல்லாமல் மனிதன் இல்லை. ஒற்றைப் பரிமாணத்தில் மட்டும் கவிதைகள் வெளிப்படுவதில்லை. மனிதனின் ஆக்கத்திறன்களில் ஒன்று கவிதை.

கண், காது, நுரையீரல், இதயம் போலவே கவிதையும் மனிதனுக்கு ஓர் உறுப்பு. காலந்தோறும் கவிதைக்குரிய இலக்கணம் மாறுபட்டு வந்திருக்கிறது. பகுத்தறிவு என்ற பார்வையை முன்நிறுத்தினால் தமிழ் நெடுங்கவிதையில் சில அற்புதங்கள் வெளிப்படும் என்பது உண்மைதான். ஆனால் அதேசமயம் தமிழ்க் கவிதையில் ஒரு பெரும் பகுதியை நாம் இழக்க நேரும். மனிதன் என்ற கருத்தாக்கத்தை முதன்மைப்படுத்தி புராணங்கள் முதலியவற்றையும் இன்று நம்மால் வாசிக்கமுடியும், புரிந்து கொள்ள முடியும். யமகம், திரிபு முதலியவற்றையும் ஒதுக்க வேண்டியதில்லை. பக்தி ஒரு பேருணர்வு. எல்லாக் காலங்களிலும் என்ன என்னவோ வடிவங்களில் பக்தி என்ற பேருணர்வு மனிதனுக்குள் செயல்பட்டுள்ளது? கடவுள், பல்வகைப் பிறப்பு, மேலுலகம், கீழுலகம், பாவ, புண்ணியங்கள் முதலியனவும் வரலாற்றுச் சூழலில் மனிதனுடைய படைப்புக்கள். எந்தச் சூழலில் இவ்வகைக் கருத்தாக்கங்கள் முன்னுக்கு வந்தன என்று இன்று ஆராய முடியும். இன்றைய சமகால


படிப்பகம்

www.padippakam.com

உணர்வுகள் தேவைகள் முதலியவற்றை முன்நிறுத்தி பழங்கவிதைகள் கற்பது தவறில்லை. இப்படிக் கற்கும்பொழுது நம் உணர்வுக்கு ஒத்துவராத கருத்துக்கள், செய்யுட்கள், கலை முதலியவற்றை மனித வரலாற்றிலிருந்து ஒதுக்கி வைப்பதற்கான நியாயங்கள் இல்லை. நிதானமாகத்தான் இவற்றை எல்லாம் பார்க்க வேண்டி இருக்கிறது. நமது அவசரத் தேவைகள் எல்லாவற்றுக்குமான அளவுகோள்களாக இருக்க முடியாது.

நாட்டார் வழக்காற்றியல், தலித்தியம், பெண்ணியம், சூழலியம், நவீனத்துவம், பின்-நவீனத்துவம் என்றெல்லாம் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நமக்குள் புதிய பார்வைகள் எழுந்துள்ளன. இவை எல்லாம் காலத்தின் தேவைகள் என்பதில் ஐயமில்லை. கவிதைக்குள்ளும் இவ்வகைப் பார்வைகள் பேசப்படுகின்றன. நெடுங்காலத் தமிழ்க் கவிதைக்குள்ளிருந்து இப்புதுவகைப் பார்வைகளின் வழியே சிலவற்றைப் பாராட்டுகிறோம். சிலவற்றை ஒதுக்கவும் செய்கிறோம். ஓர் அரசியல்வாதிக்கு இவ்வகை ஒதுக்கல்கள் தேவையாக இருக்கலாம். ஓர் இலக்கிய மாணவனுக்கு இவ்வகைப் போக்குத் தேவை இல்லை. இப்படிச் சொல்வதனால் நமக்குச் சமகால உணர்வு தேவை இல்லை என்பது பொருள் அல்ல. சமகால உணர்வின் இன்றியமையாத தேவையை இங்கு நான் வற்புறுத்திச் சொல்ல வேண்டியதில்லை.

நாம் வாழும் உலகம் மிகச் சிக்கலான உலகம். பல திசைகளிலிருந்தும் நம்மை ஊடுருவி நம்மைப் பிளக்கிற உலகம். இப்படிப் பிளவுபட்ட நிலையில் நமக்கான தளம் எது என்றுகூட நம்மால் தீர்மானிக்க முடியவில்லை. முன்னைய உலகம் நம்மைக் கைவிட்டுப் போகிறது. முன்னைய உலகம் சார்ந்த எல்லாமே இன்று கேள்விக்குரியனவாக மாறிவிட்டன. இருபத்தோராம் நூற்றாண்டுக்குள் நாம் நுழைந்திருக்கிறோம்.

உலகமயமாதல், சந்தைப் பொருளாதாரம் என்றெல்லாம் இப்பொழுது பேசுகிறோம். உயிரித் தொழில் நுட்பங்கள் உயிரினங்களை மட்டுமல்லாமல் மனிதனையும் இனி என்னவோ செய்யமுடியும். கணிணி, இணையம் முதலியவை தொலைதூர உலகங்களையும் நம் கண்முன் ஒரு புள்ளியில் கொண்டுவரும். உலகமயம் என்ற முறையில் இனி மூலதனத்திற்குத்தான் உலகம் சொந்தம். நாடுகளுக்கு இடையில் எல்லைக் கோடுகளுக்கு இனி அர்த்தம் இல்லை. எந்த ஒரு நாட்டின் இறையாண்மையும் தன்னளவில் முழுமையான இறையாண்மையாகவும் இருக்க முடியாது.

உலகளவில் நடைபெறும் தொழில் பெருக்கம், வர்த்தகம், நவீன



படிப்பகம்

www.padippakam.com

அறிவியல் தொழில் நுட்ப ஆய்வுகள் முதலியவற்றில் ஏழை நாடுகள் பெருத்த முதலாளிய நாடுகளோடு போட்டிபோடுவது எந்த வகையிலும் சாத்தியமில்லை. கணிதம், கணிணி முதலிய கலைகளில் தேர்ந்த இளைஞர்களை தொழில் துறையில் மேம்பட்ட நாடுகள் ஈர்த்துக் கொள்கின்றன. அந்த நாடுகள் மேலும் மேலும் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. நம்மை அறியாமல் நாமும் ஒத்துழைக்கிறோம். பொருளியல் முதலியவற்றில் இதுவரை வளர்ச்சி பெற்ற நாடுகளின் ஆதிக்கம் இனியும் அதிகரிக்கும் இந்தக் கடுமையான போட்டிச் சூழலில் தாக்குப் பிடிக்க முடியுமென்று நாம் கனவுகள் காண முடியாது.

தமிழுக்கு இன்று கடுமையான நெருக்கடி நேர்ந்துள்ளது. தமிழ் மக்களுக்கு இன்று நேர்ந்துள்ள நெருக்கடிகளில் ஒரு கூறுதான் தமிழுக்கு நேர்ந்துள்ள நெருக்கடி. இந்த நெருக்கடி தீவிரப்படுவதற்கான காரணங்கள் நிறையவே உள்ளன. அந்நியர்களுக்கு நாம் அடிமைப்படுவது இப்பொழுது அதிகரித்திருக்கிறது. நம்மவர்களும் நம்மை அடிமைப்படுத்துவதில் முந்துகின்றனர். இந்தியாவில் கூட்டாட்சிக்கு இடம் இல்லை. மைய அரசே எல்லாவற்றையும் நிர்ணயம் செய்கிறது. மைய அரசைத் தட்டிக் கேட்கும் மன உறுதியை நாம் இழந்துவிட்டோம். நம் தலைவர்கள் நம்மை ஏமாற்றுகிறார்கள். நமக்கு எதிர்காலம் உண்டு என்று கூசாமல் பொய் சொல்லுகிறார்கள். இந்தப் பொய்யை நம்பாதவர்களும் அவர்களோடு சேர்ந்து கொள்வதில் தம்மை வாழ்வித்துக் கொள்ள முடியுமென்று நம்புகிறார்கள். இந்தச் சூழல்பற்றி இன்னும் விரிவாகச் சொல்வதற்கில்லை.

3. இந்த இருபத்தியோராம் நூற்றாண்டுச் சூழலில் வைத்து தமிழ் பற்றி, தமிழ் இலக்கியம் பற்றி, தமிழ் வரலாறு பற்றி, தமிழ் மெய்யியல் பற்றி, தமிழ்க் கவிதை பற்றி நாம் பேச வேண்டி இருக்கிறது. கவிதைகள் இல்லாமல் நமக்கு முடியாது. இலக்கியம் இல்லாமல் முடியாது. சமூகப் பார்வை, சமதர்மப் பார்வை என்றெல்லாம் இல்லாமல் முடியாது. தமிழ் இல்லாமல் நமக்கு வாழ்வு இல்லை. தமிழைப் போலவே தமிழ் வரலாறு, தமிழ்க் கவிதை முதலியவற்றையும் நமக்குள் காப்பாற்றி வைக்க வேண்டும்.

கவிதை இல்லாமல் மனிதனுக்கு வாழ்வில்லை என்று கூறுவதன் அர்த்தம் என்ன என்று கொஞ்சம் ஆராய்வோம். மனிதனின் எந்தப் பண்பிலிருந்து, எந்தத் தளத்திலிருந்து, எந்தப் பார்வையிலிருந்து, எந்த மூலத்திலிருந்து கவிதை பிறக்கிறது என்று ஆராய்வோம். மனிதனுக்குள் வானமும், பூமியும் கலந்திருக்கின்றன என்பதைக் காட்டிலும் கரைந்திருக்கின்றன என்று சொல்வது பொருந்தும்.

படிப்பகம்

www.padippakam.com

உயிர்களோடு மனிதன் நெருக்கமான உறவு கொண்டுள்ளான். நீரோடும், நிலத்தோடும், காடுகளோடும், மலைகளோடும், கடல்களோடும் மனிதன் உறவு கொண்டுள்ளான். மனிதர்களோடு, சமூகத்தோடு அப்புறம் வரலாற்றோடு மனிதன் உறவு கொண்டுள்ளான். கதிரவனும், நிலவும் இல்லாமல் மனிதன் இல்லை. மழையும், வெய்யிலும், காற்றும், கனலும் இல்லாமல் மனிதன் இல்லை. பறவைகளோடு சேர்ந்து பாடுகிறான். தனக்குள் பறக்கிறான். குழந்தைகள் இல்லாமல் இவனுக்கு முடியாது.

தன்னைத்தானே கடந்து செல்பவன் மனிதன். இன்னும் இவனுக்குள் ஆதிமனிதன் இருக்கிறான். உழைப்பும், பகிர்வும் இவனது உயிர்க் குணங்கள். போட்டி, பொறாமை, வம்பு, வழக்குகள் இவனைக் கூறுபடுத்துகின்றன. போர்கள் இவனை அழிக்கின்றன. அடிமைத்தனம் என்றும் இவனுக்கு உவப்பாக இல்லை. உலகிற்கு அழகு தருபவன் இவன். வாழ்வுக்கும், வரலாற்றுக்கும் அர்த்தம் சொல்பவன் இவன். கற்பனைகள், இலட்சியங்கள் இல்லாமல் வாழ்ந்ததில்லை. உலகைத் தொடர்ந்து புதியதாகப் படைக்கிறான். ஆதிக்கத்தை இவன் ஒப்புக் கொண்டதில்லை.

வரலாறு இவனுக்குள் வாழ்கிறது. பேரண்டம் தழுவிய உயிரியக்கத்தின் ஒரு கூறு இவன். அண்டத்தோடு இவன் சிலசமயம் கரைந்து விடுகிறான். காலங்கள் இவனுக்குள் கரைந்து விடுகின்றன. காலமற்றதை இவன் தனக்குள் உணர்கிறான். உள்ளொளி என்றும், தரிசனங்கள் என்றும் இவன் பேசுகிறான். பேருணர்வு, பேரறம் என்றெல்லாம் இவன் பேசமுடியும். இவன்தான் காவியங்கள் படைத்தான். மதங்களைப் படைத்தவனும் இவன். பிறகு எல்லாவற்றையும் இவனே கலைத்துப் போடவும் செய்கிறான். இயக்கத்தில் இவன் இருக்கிறான். ஆதிக்கங்களோடு அடிமைப்பட்ட நிலையில் இவன் புழுங்குகிறான். எப்பொழுதும் இவன் இப்படியே இருந்ததில்லை. பிறகு தனக்குள் வெடித்துக் கிளம்புகிறான். உலகத்தை மாற்றுகிறான். இயற்கையைத் தழுவிக் கொள்கிறான். இவனுக்கு அன்பு இல்லாமல் முடியாது; அருள் இல்லாமல் முடியாது; அறம் இல்லாமல் முடியாது. தன்னை இழக்கவும் இவனுக்குத் தெரியும். இதன்மூலமே தன்னை இவன் பெறுவதையும் செய்கிறான்.

4. இப்பொழுது கவிதை பற்றிப் பேசலாம். இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் பொருளியல் முதலிய ஆதிக்கங்களுக்கு இவன் வசப்பட்டு அழிந்து போகமுடியாது. தமிழன் தன்னைத் தக்கவைத்துக் கொள்வதற்கான ஆற்றல்களைத் தமிழ்க் கவிதைகளுக்குள்ளிருந்தும் பெறமுடியும். சங்க இலக்கியம் இவனுக்குள் என்றைக்கும் சாகமுடியாது. வள்ளுவரின் அறம்,



படிப்பகம்

www.padippakam.com

இளங்கோவின் புரட்சி மணிமேகலையின் தவம் முதலியவற்றை இவன் எதற்காகவும் விட்டுத்தர முடியாது.

அன்பும், சிவமும் ஒன்று எனக் கண்டவன் இவன். சாதி மதங்கள் கடந்த சித்தர்களை இவன் தனக்குள் தாங்கி இருக்கிறான். இவனுக்குள் படைப்பியக்கம் பெருமளவில் செயல்பட்டிருக்கிறது. பாரதி கூறியதுபோல வள்ளுவரையும், இளங்கோவையும் கம்பனையும் தனக்குள் கொண்டிருக்கும் இவன் அமரத்துவம் வாய்ந்தவன். இறைவனைச் சாடவும், நேசிக்கவும் கற்றவன் இவன். எளிய வாழ்க்கை இவனுக்குப் போதும். எத்தகைய சக்திகள் உலகத்தை அழித்தாலும் உலகை வாழ்விக்கும் மகத்துவம் தெரிந்தவன் இவன். இவன்தான் தமிழ்க் கவிதையின் உள்ளடக்கம். சமத்துவம் இல்லாமல், சமதர்மம் இல்லாமல் இவனுக்குள் இயக்கம் இல்லை. கவிதை என்பது சொற்களில் இல்லை; வரிகளில் இல்லை, யாப்பில் இல்லை, கதை சொல்வதில் இல்லை. இவற்றை எல்லாம் உள்ளடக்கி அப்புறம் இவற்றையும் கடந்த கவித்துவத்திலிருந்து பொங்குவது கவிதை. அந்தக் கவித்துவம் என்பது இந்த மனிதனின் படைப்பியக்கம். எல்லாவற்றையும் புதியதாக அழகுபடுத்துவது, அர்த்தப்படுத்துவது, படைப்பது இந்தக் கவித்துவம். ஒரு விஞ்ஞானிக்குள் இயங்குவது இந்தக் கவித்துவம். ஒரு தச்சனுக்குள்ளும் கவித்துவம் உண்டு. கோலமிடும் பெண்ணுக்குள் இருப்பதும் இந்தக் கவித்துவம், குழந்தைக்குள்ளும் கவித்துவம் உண்டு. இது அழியாது. அதை அழியவிடக் கூடாது. கவிஞன் தனக்குள் செயல்படும் கவித்துவத்தின் மூலம் இதைக் கண்டுகொள்ள முடியும். உயிரியக்கம் இந்தக் கவித்துவம். பேரண்டத்தை நிறைத்திருப்பது இந்தக் கவித்துவம். கடவுள் என்று இதைக் குறைத்துப் பேசுகிறது மதம்.

புராணங்கள் என்னதான் பொய்க்கதைகள் சொன்னாலும் இந்த உயிரியக்கத்தை மறைத்துவிட முடியாது. இந்தக் கவித்துவம் என்ற பேரியக்கம் தமிழுக்குள் நிறைந்து வழிகிறது. தமிழ் அறிந்தவன் / தமிழாய்ந்தவன் பேறுபெற்றவன். தமிழின் பேரியக்கம் பன்முகப் பரிமாணங்கள் உடையது. இந்தப் பேரியக்கத்தை சாதி முதலிய குறுகிய எல்லைகளில் முடக்கிவிட முடியாது. பெண்ணுக்கு நீதி வழங்குவது இந்தப் பேரியக்கம். இது எப்பொழுதும் தன்னை நவீனப்படுத்திக் கொள்ளும்.

நாட்டார் குடிசைகளில், வயல் வெளிகளில் கைவினைஞர்களின் கைகளில் நடமிடுவது இந்தப் பேரியக்கம். காலந்தோறும் இந்தப் பேரியக்கத்தை தம் நலன்களுக்காக வகை, வகையான ஆதிக்கங்கள் முடக்கிவைத்தன. ஆதிக்கங்கள் இன்றும் அழியவில்லை, பெருகவும் செய்கின்றன. வள்ளுவர், இளங்கோ வழியில் வந்தவன் இந்த


படிப்பகம்

www.padippakam.com

ஆதிக்கங்களுக்கு சேவை செய்யமுடியாது. வள்ளுவரை நெஞ்சில் குடிவைக்க வேண்டும். கைகளில் இளங்கோவை ஏந்த வேண்டும். இத்தகைய உரத்தினை தமிழ்க் கவிதை நமக்குத் தரும். இந்த உரத்தை காண்பதற்காகத்தான் நாம் கவிதைகள் கற்கிறோம், புரிந்து கொள்கிறோம். வள்ளுவரும், இளங்கோவும் நமக்குள் வாழ்கிறார்கள். பாரதியும், பாரதிதாசனும் நமக்குள் வாழ்கிறார்கள். இவர்களைத் தான் நாம் மீண்டும், மீண்டும் நமக்குள் புதுப்பித்துக் கொள்கிறோம். புதுமைப்பித்தனின் ஒரு கூறு புதுக்கவிதை, இன்னொரு கூறு திறனாய்வு, இன்றுமொரு கூறு உலகைப் புதுப்பித்தல்.

5. அண்மைக் காலத்தில் தமிழில் பேரலையாக வளர்ந்துவரும் நவீன கவிதைகள் குறித்து இங்கு சுருக்கமாகச் சொல்ல வேண்டும். உலகம் நொறுங்கிவிட்டது. மனிதன் தனக்குள் பல துண்டுகளாகச் சிதைந்து விட்டான். இவனுக்குள் பல நான்கள், பல குரல்கள் செயல்படுகின்றன. இவன் தன்னை இழந்து விட்டான். வாழ்வுக்கு அர்த்தம் இல்லை. வாழ்க்கையை மீண்டும் ஒரு முழுமை என்ற முறையில் திரட்டிக் கொள்ள முடியாது. எந்த ஒரு தத்துவமும் இவனுக்கு இனி வழிகாட்ட முடியாது. தற்கொலைகள் கூட தவறில்லை; வாழ்க்கையில் சீர்மை இல்லை. ஒழுங்கு இல்லை. அறம் இல்லை இப்படிப் பேசுபவர்கள் இவற்றை வைத்துத் தமக்கான ஆதிக்கத்தைக் கட்டமைத்தார்கள். கலகங்கள் மட்டுமே இனி சாத்தியம் மற்றும் தேவை. பேய்த்தன்மை உடையது இந்த உலகம். பதற்றத்தோடு தான் நாம் வாழ வேண்டி இருக்கிறது. மரபு நம்மைக் காப்பாற்ற முடியாது. வரலாறு துண்டு துண்டாகத்தான் சிதறிக் கிடக்கிறது. நெடுங்காலத்தை உள்ளடக்கி வாழ்வென்றும், வரலாறென்றும், வளர்ச்சி என்றும் பேசுவதில் அர்த்தமில்லை. புள்ளிகளில்தான் நாம் வாழ்கிறோம். வாழ்வென்பதற்கு வரையறை சொல்வதும்கூட ஒரு வகையில் ஆதிக்கம் ஆகிவிடும். இனி எல்லாவற்றையும் உடைத்துப் பார்க்க வேண்டும். பின்னங்களில் கிடக்கிறது வாழ்க்கை.

நவீன கவிதையின் ஆற்றல் மிக்க குரல் இப்படித்தான் கவிதைகளில் வெளிப்படுகிறது. கதைகள், நாவல்கள், திறனாய்வுகளிலும் இக்குரல் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இந்தக் குரலின் வீரியத்தை நாம் ஒப்புக் கொள்ள முடியும். உலகளவில் பெருகிவரும் ஆதிக்கங்கள் நமக்குள்ளும் புகுந்து நம்மைச் சிதைக்கவே செய்கின்றன. நம்மிடமிருந்து தேசத்தை, நிலங்களை, இயற்கையை, கல்வியை, பண்பாட்டை, தொழில் திறன்களை பறித்துக் கொள்வதன் மூலம் ஆதிக்கங்கள் தம்மை வலுப்படுத்திக் கொள்கின்றன. இப்போக்கின் விளைவுதான் நமக்குள்ளான தகர்வுகள், மரபு நாசங்கள். தகர்வுகளுக்கு உட்பட்ட மனிதன் துடிக்கிறான், துயரப்படுகிறான்.



படிப்பகம்

www.padippakam.com

பசிக்கொடுமையால் அவதிப்படுகிறவனுக்கு வானம் தெரியாது. சாதி முதலிய சகதிக்குள் அமிழ்த்தப்பட்டவனுக்கு கடவுள் இல்லை, அறம் இல்லை. இந்த மனிதனை - இவன் மனிதனாகவும் இல்லை என்று நாம் புரிந்து கொள்ளவும் முடியும். ஆதிக்கங்களுக்கு உலகத்தை விட்டுத்தர முடியாது. ஆதிக்கவாதியும் தனக்குள் அழிந்து கொண்டுதான் இருக்கிறான். எதுவும் என் கையில் இல்லை என்று கூறி நம்மை நாமே இழந்து விடமுடியாது. இந்த பூமி நமக்குச் சொந்தம். பல்லாயிரம் ஆண்டுகளாக நாகரிகங்களைப் படைத்தவர்கள் நாம். இயற்கை இன்னும் மிச்சமிருக்கிறது. மரபு நமக்குள் வாழத்தான் செய்கிறது. இழந்த உலகத்தை நம்மால் கைப்பற்ற முடியும்.

நாம் நமக்குள் நம்பிக்கை அற்றுப் போக வேண்டியதில்லை. சிதைவுகளிலிருந்தும், நம்மைத் திரட்டிக் கொள்ள முடியும். வள்ளுவர், இளங்கோ, பாரதி முதலியவர்களை நாம் இழந்துவிடவில்லை. மலர்கள் இன்னும் அழகாகத்தான் இருக்கின்றன. பட்டாம் பூச்சிகள் இன்னும் பறக்கின்றன. தரை இன்னும் நமக்குத் தட்டுப்படுகிறது. அவலம் நம்மை ஆட்கொள்ள வேண்டியதில்லை.

நவீனக் கவிதையின் வெளிப்பாடுகளை நாம் மறுக்க வேண்டியதில்லை. மொழியை இந்தக் கவிஞர்கள் புதுப்பிக்கிறார்கள். இவர்கள் கவிதைகளில் நுட்பங்கள் கூடியிருக்கின்றன. தமிழ்க் கவிதையில் இவர்களது சாதனை அற்புதமானவை. இவர்கள் இளைஞர்கள். இவர்கள் பழமையை, வரலாற்றை, வாழ்க்கையை புரட்டிப் பார்க்கிறார்கள். வாழ்வுக்கான அர்த்தங்களை இவர்களும்தான் தேடுகிறார்கள். தகர்க்கப்பட்ட நிலையில் வாழ்வின் அர்த்தங்கள் உடனடியாகக் கைகளுக்குக் கிட்டுவதில்லை. இன்னும் ஆழத்தில் இவர்கள் தேடமுடியும். விளிம்புகளில், எதிர்நிலைகளில் இருந்தும் வாழ்க்கையை இவர்கள் பார்க்கிறார்கள். வாழ்க்கையைப் பற்றி இதுவும் ஒரு புதிய கோணம்; நாமும் கற்றுக் கொள்ள முடியும். மறு ஆய்வு என்பது வரலாற்றின் சில முக்கிய கட்டங்களில் தேவைப்படத்தான் செய்கிறது. அப்படி ஒரு கட்டத்தில் இன்று நாம் வாழ்கிறோம். மீண்டும், வரலாறென்றும், மரபென்றும், கவிதைகள் என்றும் பேசுகிறோம்.

6. தமிழுக்கு மட்டும்தான் இந்த மரபு சொந்தம் என்று நாம் கருதுவதற்கில்லை. இந்த மரபு மனித மரபு. உலகில் எந்த மொழி பேசுபவனும் இந்த மரபுக்குள் தான் இருக்கிறான். இது ஆதிக்கவாதியின் மரபு அல்ல. இது உழைப்பவனின் மரபு. வரலாற்றை வாழ்விக்க காலந்தோறும் செத்தவனின் மரபு. வரலாற்றுக்கு இவன் தான் உரம் சேர்த்துள்ளான். எந்த ஒரு மொழியினுள்ளும் இந்த வரலாற்றைக் காணமுடியும், கண்டடைய முடியும். மனிதனுக்குள்


படிப்பகம்

www.padippakam.com

செயல்படும் இந்தப் பேரியக்கத்தைக் கண்டுகொண்டவர்கள் பெருங்கவிஞர்கள், மெய்யியலாளர்கள். 21-ஆம் நூற்றாண்டு, நமக்கு ஒரு பெரும் சவாலை முன் நிறுத்துகிறது. மனிதனின் வரலாற்றைத் தீர்மானிப்பது இந்த நூற்றாண்டு. மனிதர்களுக்கு இயற்கை தேவையா? இல்லையா? மனிதனுக்கு வரலாறு தேவையா இல்லையா? மனித வாழ்வுக்கு அர்த்தம் உண்டா இல்லையா? என்பதை எல்லாம் தீர்மானிப்பது இந்த நூற்றாண்டு. இந்த மாபெரும் போராட்டத்தில் நாம் இணைந்திருக்கிறோம்.

நம்மை அழிக்கும் சக்திகள் நமக்குள்ளும், வெளியிலும் ஊடுருவி இருக்கின்றன. இவர்களை நாம் இனம் கண்டு கொள்ளமுடியும். பணம்தான் வாழ்வு, அதிகாரம் தான் வாழ்வு என்று அலைபவர்கள் இன்று தமிழுக்கு மட்டுமல்ல, மனித வாழ்வுக்கு எதிரிகள், இயற்கையின் எதிரிகள். இவர்களோடு நாம் சமரசம் செய்து கொள்ள முடியாது. இவர்கள் தமக்குள் மனிதப் பண்பை இழந்தவர்கள், அறத்தை இழந்தவர்கள், இவர்கள் அரக்கர்கள்.

இவர்கள் எத்தனையோ வடிவங்களில் செயல்படுகிறார்கள். அரசியலில், நிறுவனங்களில் இறுக்கமாக அமர்ந்திருப்பவர்கள் இவர்கள். நம் சமூகத்தின் வறுமை, கல்லாமை தொடங்கி எல்லாவகை நோய்களுக்கும் இவர்கள்தான் மூலங்கள். இவர்களுக்குள் கவிதை இல்லை, இசை இல்லை, கலைகள் இல்லை. இவர்கள் தம்மைத் தாமே அழித்துக் கொண்டவர்கள். மனிதனை இவர்கள் தமக்குள் புதைத்துக் கொண்டவர்கள். மதங்கள் இவர்களுக்குள் புதைக்கப் பட்டிருக்கும் மனிதனை உயிர்ப்பிக்க முடியாது. இவர்கள் இராவணர்கள். இவர்கள் எதையும் தமக்காக அபகரித்துக் கொள்வார்கள். கம்பனோ, வள்ளுவனோ இவர்களுக்குச் சேவகம் செய்யமுடியாது.

திரும்பவும் சொல்லலாம். நமக்குள் கவிதை இருக்கிறது. கவிதை இயக்கம் இருக்கிறது. இது தமிழுக்கு மட்டும் சொந்தமில்லை. எந்த மொழிக்கும் இது சொந்தம். மனிதனுக்கு இது சொந்தம். மனிதனை இந்த இயக்கம் தான் வாழ்விக்கிறது, உயிர்ப்பிக்கிறது. இந்த உயிரியக்கத்தின் தூண்டுதலில் நாம் படைப்பது கவிதை. இந்தக் கவிதை நாம் வாழும் மட்டும் நமக்குள் தழைப்பது அமரத்துவம்.

குறிப்பு : சாகித்திய அகாடமியும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் மார்ச்சு இறுதியில் சென்னையில் நடத்திய மலையாளம் - தமிழ்க் கவிதைக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்வானின் விடிவெள்ளி :
# - மயிலை சீனி. வேங்கடசாமி

*- இரணியன்*

"ஒரு நாட்டு வரலாறு எழுதப்பட்ட வரலாறு, எழுதப்படா வரலாறு என இருதிறப்படும். எழுதப்படா வரலாறு - அறியப்பட்ட வரலாறு, அறியப்படாத வரலாறு என இருதிறப்படும். எழுதப்பட்ட வரலாறும் - மெய் வரலாறு, பொய் வரலாறு என இருவகைப்படும்" என்பார் மொழி ஆய்வறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர்.

தமிழ் இனத்திற்கு முறையான வரலாற்றுணர்வு இருந்ததில்லை. வரலாற்றுணர்வு இல்லாததால் அவர்கள் வரலாற்றின் சேமிப்புகள் பலவற்றை இழந்துபோயிருக்கிறார்கள்; விலைமதிக்க முடியாத புதையல் மேட்டின்மீதும் இரவலர்களாகவே நின்று களைத்து இருக்கிறார்கள்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இத்தமிழினத்தின் வரலாற்றைத் திரட்ட முயன்றோர் பலரும் எழுதப்படா வரலாற்றிலிருந்தே தங்கள் எழுத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அதுவும், அறியப்பட்டதாகவும் அறியப்படாததாகவும் நீண்டு கிடந்திருக்கிறது.

எனவே வரலாற்றை அகழ்ந்து நோக்கவேண்டிய தேவை வரலாற்றறிஞர்களுக்கு வாய்த்தது.

***<u>மொழி அகழ்வு :</u>***

கல்லும் மண்ணுமாய்க் கிடக்கும் இடிபாடுகளைத் தோண்டி எடுப்பது மட்டும் அகழ்வாய்வு இல்லை;

சொல்லும் தொடருமாய்ப் புதைந்துகிடக்கும் வரலாறுகளைத் தோண்டி எடுப்பதும் அகழ்வாய்வுதான்.

'திசை தெரியாதவன்' என்பதைத் தெற்கு வடக்குத் தெரியாதவன் என்கிறார்கள், 'திசை தெரியுமா?' என்பதைத் 'தெற்கு வடக்குத் தெரியுமா?' என்கிறார்கள். இதுபற்றிக் கூறவந்த தேவநேயர், "தமிழ் முன்னோர் முதலில் வாழ்ந்தது தெற்கில்; பிறகு ஏகியது வடக்கில். தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அவர்கள் பரவியதால். திசையையே 'தெற்கு வடக்கு' எனக் கூறுகிறார்கள்" என்கிறார். வழக்காற்றினுள் மறைந்து கிடக்கும் ஒரு வரலாற்றை அவர் அகழ்ந்து காட்டுகிறார்.

கொங்கு நாட்டின் கிழக்குப் பகுதி ஊர்களில், கூச்சலும் குழப்பமுமான நிலைகளைத் "தலையாலங்கானமாய்க் கிடக்கிறது" என்கிறார்கள். இத்தொடரைப் பயன்படுத்தும் எவருக்கும்


படிப்பகம்

www.padippakam.com

தலையாலங்கானம் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் ஒரு சமூகத்தின் நினைவில் தலையாலங்கானப் போர் இன்றும் நிலைத்திருக்கிறது என்று கூறலாமல்லவா?

அமரும் களமும் பற்றி நாம் நேராக ஒன்றும் அறியோம். ஆனால், 'அமர்க்களமாய்' இருப்பதாக நாம் அடிக்கடி கூறிக்கொள்கிறோம்.

எனவே சொற்களுக்குள்ளிருந்தும் வரலாற்றைத் தோண்டி எடுக்கமுடியும் என்பது தெரிகிறது.

சொற்களுக்குள்ளேயே வரலாறு புதைந்து கிடக்கிறதென்றால், தொடர்களுக்குள், பழமொழிகளுக்குள், கதைகளுக்குள், பாடல்களுக்குள் எத்தனை வரலாறுகள் புதையுண்டிருக்கும்!

இவற்றுள் எது மெய் வரலாறு, எது பொய் வரலாறு? கதையே வரலாறா? கதைகளுக்குள் வரலாறா? உண்மையை அறிய உதவுவதே அகழ்வாய்வாகும்.

***திராவிட அறிவியக்கச் சிந்தனைப்பள்ளி :***

ஆங்கிலர் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த இரண்டு நிகழ்வுகள் இந்திய வரலாறு பற்றிய உலகின் பார்வையில் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சின.

ஒன்று சிந்துவெளியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகங்கள். இரண்டு, அறிஞர் கால்டுவெல் வெளியிட்ட 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'.

இவை இரண்டின் வரவால் இந்தியா ஆரிய வர்த்தம் அன்று என்பது வெளிச்சமானது. ஆரியருக்கு முன்பு தொன்முது நாகரிகம் ஒன்று இங்கே வாழ்ந்திருந்தது என்பது தெளிவுபட்டது. அவர்க்குச் சொந்த மொழி இருந்தது; அம்மொழிக்கு வரிவடிவம் இருந்தது. இலக்கியங்கள் இருந்தன; உயர்ந்த பண்பாட்டை அவர்கள் எட்டியிருந்தார்கள்; கலைகள் செழிப்புற வாழ்ந்திருந்தார்கள். வேளாண்மையில், கைத்தொழிலில், வாணிகத்தில் அவர்கள் சிறப்புற்றிருந்தார்கள். குறிஞ்சியிலும் முல்லையிலும் மருதத்திலும் நெய்தலிலும் அவர்கள் பரந்து வாழ்ந்தார்கள். புதிய படையெடுப்புகள் மூலம் இந்த நாகரிகம் சிதைவுற்றது ! உருத்திரிந்தது ! கலப்படைந்தது! மொழி, இலக்கியம், கலைகள், வாழ்க்கை யாவும் புனைவுகளுக்கு ஆட்பட்டன ! இவ்வுண்மைகளை அறிவுலகம் உணர்ந்தபோது, உலகிற்கு உணர்த்திய போது, இம்மண்ணின் 'தொல்குடிகள்' எனக் கருதிய சமூகங்கள் விழிப்புணர்வு பெற்றன. தம் வரலாற்றை மீட்டெடுக்க முயன்றன. தம் கடந்த கால வாழ்வின் சுவடுகளைத் தேடி அவர்கள் பயணம் செய்தார்கள். தமது வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

நடு இந்தியாவிலும் வட இந்தியாவிலும் இந்த மீட்டுருவாக்க முயற்சி பெரும்பாலும் தாழ்த்தப்பட்டோர் எழுச்சியாகவே நிகழ்ந்திருக்கிறது. அல்லது வைதீக சனாதன நெறிக்கு மறுப்பாகத் தோன்றிய சீர்திருத்தச் சிந்தனைகளாக வெளிப்பட்டிருக்கிறது. மகாத்மா ஜோதிராவ் புலேயின் சிந்தனைகளில், செயலாக்கங்களில் தோன்றும் குரலும் முகமும் இதன் வெளிப்பாடே எனலாம்.

தென்னகத்தில் - தமிழகத்தில் இந்த மீட்டுருவாக்க முயற்சி தேசிய இன எழுச்சியாக வெளிப்பட்டதைப் பார்க்கிறோம். இந்தியப் பண்பாட்டில், கலைகளில், மொழிகளில் வாழ்வியலில் காணலாகும் தமிழிய அடையாளங்களை மீட்பதும் அதன் உயர்ந்த சிந்தனைத் தடங்களைக் கண்டறிவதும், தமிழர்தம் இலக்கியங்கள். வரலாற்று அடையாளங்கள் மூலம் அவர்தம் மேன்மையை அவர்க்கு உணர்த்துவதும், வரலாற்றுப் பெருமிதத்துடன்கூடிய உளவியல் பாங்கினை அவர்க்குள் - கெட்டிப்படுத்தி, ஏற்றத்தாழ்விற்கு எதிரானதும் சமன்மையை நாடக்கூடியதுமான சமூக அமைப்பை நிறுவ முயல்வதுமான இலக்குகளுடன், திராவிட அறிவியக்கச் சிந்தனை பற்றி ஒன்று தமிழகத்தில் வலுவாகக் கால்கொண்டபோது, அதன் ஆசான்மார்களாய் சூரியநாராயண சாத்திரி என்னும் பரிதிமாற்கலைஞர், மறைமலை அடிகளார், பி.டி. சீனிவாச ஐயங்கார், வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர், மனோன்மணீயம் சுந்தரனார், பூரணலிங்கனார், கனகசபைப்பிள்ளை, ந.சி. கந்தையா, மயிலை சீனி வேங்கடசாமி, அப்பாத்துரையார், தேவநேயப் பாவாணர் முதலியோர் வந்து நின்றதைப் பார்க்கிறோம். தமிழக வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்ததில் இவர்கள் ஆற்றிய பணிகள், நல்கியுள்ள பங்களிப்புகள் அளப்பரியவை ஆகும்.

## *மயிலை சீனி. வேங்கடசாமி :*

20 ஆம் நூற்றாண்டில் 80 ஆண்டுகள் வாழ்ந்த மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள், தம் முழு வாழ்நாளையும் ஆய்வுக்காகவே ஒப்படைத்துக் கொண்டவர். பொது வாழ்வையே நாடியதால் மணவாழ்வைத் தவிர்த்துவிட்டவர். வளாகம் சாராத ஆய்வறிஞர் (Non Campus Research Scholar) என்று அறிஞர்களால் போற்றப்பட்டவர்.

கல்வெட்டு, தொல்லெழுத்தியல், தொல்பொருள் ஆய்வு, மாந்தநூல், கலைவரலாறு, சமய வரலாறு, இலக்கிய வரலாறு, மன்னர் வரலாறு, உறை ஆய்வு எனப் பலவற்றிலும் புகழொடு தோன்றிப் பொலிந்தவர் சீனி வேங்கடசாமி.

கிடைக்கும் தரவுகள், அவற்றால் அடையும் உய்த்துணர்வு, இவற்றுக்குத் தேவையான சான்றடிப்படைகள் எனப் படிப்படியாகச் சென்று தம் முடிவுகளை முன்வைப்பார்.


படிப்பகம்

www.padippakam.com

சிலப்பதிகாரம் சங்க இலக்கியங்கள் ஆகியவற்றுக்குள்ளிருந்து வரலாற்றுச் செய்திகளை அகழ்ந்தெடுத்து, அவற்றுக்குத் தேவையான புறச் சான்றுகளையும் முன்வைப்பது மயிலையாரின் ஆய்வு நெறியாகும்.

துளு நாட்டு வரலாறு, களப்பிரர் ஆட்சியில் தமிழகம், சங்ககாலத் தமிழர் வாணிகம், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் முதலிய நூல்கள் இவரது அறிவாராய்ச்சிக்கு ஆதாரங்களாய் உள்ளன.

***மயிலையாரின் ஆய்வுகள் :***

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தமிழர் தம் அடையாளத்தை, வரலாற்றை முற்றும் மறந்திருந்தனர். உலகம் 56 தேசம் என எண்ணினர். அவர்கள் கூறிய உலகம் இந்தியத் துணைக் கண்டத்திற்கு அப்பால் நீளவில்லை; விரியவில்லை. புராணக்கதைகள், இராமாயணம், பாரதம் இவற்றையே கல்வியாகவும், கலைகளாகவும், நாடகமாகவும் கைக்கொண்டிருந்தனர். சமூக வாழ்வில் சூத்திரராகவும், பஞ்சமராகவும் வாழ்ந்தனர். சாதி ஒழுக்கங்களில் மூழ்கி, உடைந்து சிதறி, ஒருவருக்கொருவர் கடித்துக் கொண்டும் மிதித்துக் கொண்டும் இருந்தனர்.

அக்காலத்தில், மயிலையாரின் ஆய்வுகள், சாதிப் பெருமைகளுக்கும் சாதி இழிவுகளுக்கும் வெளியே தமிழரை இழுத்து வந்தது. அவர்களின் உண்மையான வரலாற்றை அவர்களுக்கு உணர்த்தியது. அவர்களது வாணிகம், அரசு, கல்வி, சமயம் பற்றி எடுத்துரைத்தது; புராணச் சிந்தையிலிருந்து வரலாற்றுச் சிந்தைக்குத் தமிழரை இட்டுவந்தது.

பழந்தமிழ் மக்களின் வாழ்க்கைமுறை, அக்காலத்தில் நிலவிய பண்டமாற்று முறை, அன்றைய பெருவழிகள், போக்குவரத்து, உள்நாட்டு வாணிகம், கடல்வழி நடந்த பன்னாட்டு வாணிகம், அயல்நாட்டு வாணிகர் தமிழகத்தில் மேற்கொண்ட வாணிகச் செய்முறைகள், துறைமுகப் பட்டினங்கள், விளைபொருள்கள், செய்பொருள்கள், தமிழகத்தின் அரசியல் நிகழ்வுகள் எனப் பல செய்திகளையும் தொல்லிலக்கியங்களிலிருந்து அகழ்ந்தெடுத்து 'பழந்தமிழர் வாணிகம்' என்னும் நூலாகத் தொகுத்தளிக்கிறார் மயிலையார். சங்ககால நாகரிகத்திற்கும் அரப்பா நாகரிகத்துக்கும் உள்ள உறவுகளைத் தொல்பொருள் அகழ்வாய்வுச் சான்றுடன் எடுத்துரைத்துச் செல்கிறார். சங்க இலக்கியத்தில் பயிலும் அரபுச் சொல்லைக் கொண்டு அரபிய வாணிகர் தமிழகத்தில் பெற்றிருந்த செல்வாக்கை விளக்குகிறார்.

"பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்" (8 ஆம் பத்து 4 - 5 - 6) அங்காடி என்ற பொருள்தரும் அரபுச் சொல் 'பந்தர்'. இதன் ஆளுமையைக் கொண்டு அரபிய வணிக ஆளுமையை உணர்த்துகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

தமது கடந்த காலம் பெருமைக்குரியது என்றும், தமக்கென்று முகமும் முகவரியும் உண்டென்றும் தமிழரை எண்ணச் செய்கிறார் மயிலையார்.

***களப்பிரர் பற்றி :***

தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம் என்பது இருண்ட காலம் எனப் பொதுவாகக் கூறப்பட்டுவந்தது. களப்பிரர் தென்னகத்திற்கு உரியவர் அல்லர் என்றும் நம்பப்பட்டுவந்தது. ஆனால் மயிலையார் தக்க ஏதுக்களுடன் இதனை மறுக்கிறார்.

களப்பிரர் களப்பு நாட்டினர் என்றும், கன்னடர் என்றும் இது கருநாடகத்தில் சரவண எப்லிகொள எனப்படும் சரவண வெளிர்குளம் உள்ள பகுதியே என்றும், களபப்பு நாடு, கோலார் எனப்படும் கோலால புரம் வகையில் பரவி இருந்ததென்றும் இங்குள்ள நந்திமலை களப்பிரரின் மலை என்றும் கூறுகிறார்.

"நந்தி மால்வரைச் சிலம்பு நந்தி" என்று தமிழ் இலக்கியங்கள் புகழ்வதைச் சுட்டிக் காட்டுகிறார். கி.பி. 250க்கு மேல், தமிழகத்திற்குள் நுழைந்து வெற்றி பெற்றவர் இவர்கள் என்றும், களப்பிரரும் முத்தரையரும் ஒருவரே என்றும் கூறுகிறார். கன்னட, தமிழ்க் கல்வெட்டுகளையும், தமிழ் இலக்கியச் சான்றுகளையும் முன்வைத்துத் தம் கருத்தை நிறுவுகிறார்.

களப்பிரர் சைவ வைணவ சமயங்களை வெறுத்தவர் அல்லர் என்றும், களப்பிரர் பலர் வைணவராக இருந்துள்ளனர் என்றும் கூறுகிறார். ஆனால், களப்பிரர் காலத்தில் சமணம் செழித்து வளர்ந்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகிறார். பவுத்த மத வளர்ச்சி பற்றியும் கூறுகிறார்.

களப்பிரர் காலத்தில்தான் தமிழ் இலக்கிய இலக்கணங்கள் செழித்து வளர்ந்துள்ளதை விரிவாக எடுத்து விளக்குகிறார். பிராமி எனப்படும் 'தமிழி' எழுத்து வரிமுறை வட்டெழுத்தாக மாற்றமடைந்தது இக்காலப் பகுதியே என்றும் கூறுகிறார்.

புறப்பொருள், அகப்பொருள் நூல்கள், அவிநயம், காக்கைபாடினியம், நத்தத்தம், பல்காப்பியம், நரிவிருத்தம், பல்காயம், சீவகசிந்தாமணி, எலிவிருத்தம், கிளிவிருத்தம், விளக்கத்தார் கூத்து, பெருங்கதை, மூத்த திருப்பதிகங்கள், திருவிரட்டை மணிமாலை,அற்புதத் திருவந்தாதி, கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி, திருஈங்கோய்மலை எழுவது. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெரு கூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோபப் பிரசாதம், போற்றிக் கலி வெண்பா, திருக்கண்ணப்ப தேவர் திருமவும், நான்மணிக் கடிகை இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி


படிப்பகம்

www.padippakam.com

நானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி, கார்நாற்பது ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுவது போன்ற எண்ணற்ற நூல்கள் களப்பிரர் காலத்தில் தோன்றியவையே என நிறுவுகிறார்.

கட்டடம், சிற்பம், ஓவியம், இசை என்றும் நுண்கலைகள் களப்பிரர் காலத்தில் செழித்திருந்தன என்பதை விளக்கப்படுத்துகிறார்.

'இருண்ட காலம்' என்னும் கருத்தியலை முதன்முதலாகக் கேள்விக்கு உட்படுத்தியவர், மறுப்புகளைத் தக்க சான்றடிப்படைகளுடன் வெளிப்படுத்தியவர் மயிலை சீனி வெங்கடசாமி அவர்களே ஆவார்.

கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வச்சிரநந்தி ஏற்படுத்திய திரமிள சங்கமே கடைச்சங்கம் எனப் பேராசிரியர் சிலர் கூறியதைத் தகுந்த சான்றுகள் காட்டி மறுத்தவரும் மயிலையாரே. திரமிள சங்கம் என்பது சமணத்துறவிகளுக்கான சமயச் சங்கமே என்பதைத் தெளிவுபடுத்தலானார்.

களப்பிரர் பற்றிய மயிலையாரின் ஆய்விலிருந்து நாம் அறிந்து கொள்வது :

களப்பிரர் தமிழினக் கிளையாகிய பழங்கன்னட மரபினர்; தமிழர்க்கு அணுக்கமானவர்; சமணம் நன்கு காலூன்றியிருந்த பகுதியிலிருந்து வந்ததால் தமிழகத்தில் சமண சமயத்திற்குப் பேராதரவு நல்கியுள்ளனர். ஆனால் சைவ வைணவத்தையும் ஆதரித்துள்ளனர். என்றாலும், பிராமண - நிறுவனங்களையும், வேதியப் பண்பாட்டையும், உள்ளூர் ஆதிக்க வல்லமைகளையும் அவர்கள் ஏற்கவும் வணங்கவும் இல்லை. இதுவே அவர்கள் வீழ்ந்ததற்குக் காரணம் ஆகும்.

***திராவிட சமயமும் அதன் அழிவும் :***

இந்திய வரலாற்றில் அமைப்பு நெறிப்பட்ட சமயங்கள் என்பன சமணமும் பௌத்தமுமே ஆகும்.

இவை தமிழகம் வந்தடைவதற்கு முன் தமிழகத்தில் சேயோன், மாயோன், வேந்தன், வாரணன், கொற்றவை வழிபாடுகளே நிலவின. இந்த வழிபாட்டு முறையை மயிலையார் திராவிட சமயம் எனக் குறிப்பிடுவார்.

மாபெரும் படையெடுப்புகள்மூலம் நுழைந்த வேதமதம் சமூகத்தில் நால்வருண முறையை நிலைநாட்டியது; பிறப்பில் உயர்வுதாழ்வைக் கற்பித்தது. சூத்திர அடிமைத்தனத்தை நீதிநெறிப்படுத்தியது. சடங்குகளாலும் கொலை வேள்விகளாலும் புதுவித வழிபாட்டு முறையைக் கொண்டுவந்தது. இதன்மூலம்



படிப்பகம்

www.padippakam.com

மண்ணின் மைந்தர் பெரும்பாலும் ஒதுக்கப்பட்டோரும் ஒடுக்கப்பட்டோரும், கல்வியும், உடைமையும் மறுக்கப்பட்டோரும் ஆயினர். சமன்மை அற்ற சமூக அமைப்பு நிறுவனப்படுத்தப்பட்டது. இச்சமயத்தில்தான் அறிவு நெறிச் சமயங்களாக சமணமும் பவுத்தமும் தோன்றின. உயர்வு தாழ்வுக் கருத்தியலை அவை மறுத்தன. அனைவருக்கும் கல்வித் தொண்டு புரிந்தன! மருத்துவப் பணியை மேற்கொண்டன. சமத்துவ உணர்வைப் புகட்டின. தமிழகத்தின் அறிவுலகில் இச்சமயங்கள் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றன.

வேதமதம், தன் கருத்தியலுக்கு நேர்மாறான சமண-பவுத்த மதங்களை எதிர்ப்பதற்குத் தொல்குடி வழிபாட்டுச் சமயங்களைத் தன்னுள் இழுத்துக்கொண்டது. இந்த முயற்சியில் இந்தியத் துணைக்கண்டம் முழுமையிலும் வேத மதத்திற்குப் பெரும் வெற்றி கிடைத்தது. தமிழகத்தின் பழம்பெரும் தமிழ்ச்சமயம், வேதமதக் கலப்பால் சைவம் என்றும், வைணவம் என்றும் கிளைத்தன. சேயோன் ஒரு புறம் சிவனாகவும் மறுபுறம் சிவனது மகன் முருகனாகவும் பன்மைப்படுத்தப்பட்டான். மாயோன் விற்றுவாக்கப்பட்டாள்; வேந்தன் இந்திரனானான். வாரித் தலைவன் வாரணன் வருணன் ஆனான். பின்னர் முருகன் கார்த்திகேயன் ஆனான்; அவனுக்கு அண்ணன் விநாயகர் கொண்டு வரப்பட்டான். கொற்றவை பார்வதியானாள். வேதச் சடங்குகள் வேள்விகள் உள்நுழைந்தன. மாமன்னர்கள் வேதியர் கால்களின் கீழ் அமர்ந்தனர். வேதநெறிக்கு மாறான சமணமும் பவுத்தமும் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் கருத்து வேகமாகப் பரப்பப்பட்டது.

## *சமண மதத்திற்கு எதிரான தாக்குதல் :*

சமணத்திலும் பவுத்தத்திலும் விளங்கிய உயர்ந்த சிந்தனைகள் சைவ வைணவச் சமயங்களால் உள்வாங்கப்பட்டன. சமண பவுத்தர்கள் மிகவும் கீழ்த்தரமாக இழிவுபடுத்தப்பட்டனர். அவர்களின் நூல்கள், நூலகங்கள் தீயிடப்பட்டன. சமணமுனிவர்கள் கழுவேற்றிக் கொல்லப்பட்டனர். சமணப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். பவுத்த கோயில்கள் இடிக்கப்பட்டன. இடிபாடுகளை அள்ளிவந்து வைணவக் கோயில்கள் கட்டப்பட்டன. வேத நெறிப்பட்ட சைவ வைணவம் அரசின் பேராதரவுக்கு உட்பட்டது. சமண பவுத்தர்கள் அச்சத்திற்கும் கலக்கத்திற்கும் உள்ளாயினர். சமணத்தைத் துறந்து பலர் சைவராயினர்; பவுத்தத்தைத் துறந்து பலர் வைணவராயினர். அரச வன்கொடுஞ் செயல், உச்சநிலை அடைந்தது. மதம் மாறியோர் 'சிவாயநம' எனச் சொல்லிக் கொண்டே வெளியில் நடமாட வேண்டியவர்களானார்கள். 'சிவாயநம எனச் சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளுமில்லை' என்றும் வழக்காறு இச்சூழலில் உருவானதே ஆகும்.

படிப்பகம்

www.padippakam.com

மயிலை சீனி வேங்கடசாமி அவர்களின் 'சமணமும் தமிழும்' சமண சமயம் பற்றியும், சமணத் தமிழ் இலக்கியங்கள் பற்றியும் கூறுவதோடல்லாமல், இந்திய வரலாற்றின் மறைக்கப்பட்ட செய்திகள் பலவற்றையும் பல்வேறு நூல்களிலிருந்து அகழ்ந்தெடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

## சமணத்தின் செழிப்பு :

சமணர் என்றால் துறவிகள் என்று பொருள். ஜினர் என்றால் புலன்களை வென்றவர் என்று பொருள். சமணசமயத்தின் 24ஆம் தீர்த்தங்கரர் மகாவீரர். முதலாம் தீர்த்தங்கரர் ஆதிபகவன் அல்லது ஆதிநாதன். முதல் 22 தீர்த்தங்கரர்களைக் கற்பனைப் பெரியோர் என வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். ஆதி, ஆதிபகவன், ஆதிநாதன் எனும் சொற்கள் ஞாயிற்றைக் குறிப்பனவாகவும் திகழ்வதை நாம் நோக்கவேண்டும்.

பந்தத்திலிருந்து விடுபட்டு மோட்ச நிலை அடைந்த உயிரே கடவுள் என்பது சமணக்கருத்து. இவ்வகைக் கடவுளை அவர் அருகன் என்பர்.

இன்னா செய்யாமை, அருளுடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல், தீயன பேசாமை, களவு செய்யாமை, இனியன கூறல், எளிமை என்பன இச்சமயத்தாரின் அடிப்படைக் கொள்கைகள். உணவு, அடைக்கலம், மருந்து, கல்வி என்னும் நான்கு தானங்கள் செய்தல் சமணரின் பேறறமாயிருந்தது. சமணர் மக்களின் தாய்மொழி மூலம் தம் நற்கருத்துகள் அனைத்தையும் பரப்பி வந்தனர். மக்களுக்கு விளங்காத மொழியில் நூல்களை எழுதிவைத்தல் பாவம் என அவர்கள் கருதினர்.

வேதமதத்தார் விளங்கா அயல்மொழியில் நூல் எழுதினர். எழுதியதை மற்றவர் படிக்கத் தடைவிதித்தனனர். மக்கள் படித்தால் நாக்கை அறுக்கவும், படிக்கக் கேட்டோர் காதில் ஈயம் காய்ச்சி ஊற்றவும் கட்டளை இட்டனர். இதற்கு மாறாக தாய்மொழி மூலம் அறிவுப்பணி புரிந்த சமணர் தமிழகத்தில் செழிப்புப் பெற்றனர்.

## தமிழகத்தில் மத வன்கொடுஞ் செயல்கள் :

சமண பவுத்தத்தை வேரறுப்பது புதிய பேரரசுகளுக்குத் தேவையாகிறது. ஏதேனும் ஒன்றை வரம்பு மீறி வெறுத்து, ஒன்றை நிறுவுவதன்மூலம் புதிய அரச வல்லமைகள் உருப்பெறுவது வரலாற்றில் நிகழ்ந்துள்ளது. அத்தகைய அரச வல்லமைகளின் உயிர்ப்பாகத் தோன்றிய பக்தி இயக்கம், சமண பவுத்தத்தின்மீது அரச வன்கொடுமையை ஏவிவிட்டது.


படிப்பகம்

www.padippakam.com

கொடுமை செய்தல், கழுவேற்றுதல், கொலைபுரிதல், கலகம் செய்தல், நிலபுலம் கவர்தல் என்பன சமணருக்கு எதிராக நிகழ்ந்துள்ளன.

இவை நிகழ்ந்தமைக்கான சான்றுகளைப் பக்தி இலக்கியங் களிலிருந்தே வெளிக் கொணர்கிறார் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள்.

"வெறுப்பொடு சமணர் முண்டர் விதியில்சாக் கியர்கள்நின்பால்
பொறுப்பரி யனகள்பேசிப் போவதே நோய தாகிக்
குறிப்பெனக் கடையு மாகில் கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமம் கண்டாய் அரங்கமா நகர்உ ளானே".

என்பது தொண்டரடிப் பொடியாழ்வார் பாடல்.

திருவிளையாடற் புராணம், பெரியபுராணம், தக்கயாகப் பரணி நூல்கள் கழுவேற்றம்பற்றிக் கூறுகின்றன. மதுரைப் பொற்றாமரைக் குளத்து மண்டபச் சுவரில் கழுவேற்றும் காட்சி ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. மதுரைக் கோவிலில் ஐந்துநாள் கழுவேற்றும் உற்சவம் நடந்து வருகிறது.

சோழ நாட்டில் பழையாறையில், சிவபெருமான் கட்டளைப்படி, அரசன் சமணர்மீது யானைகளை ஏற்றிக் கொன்றான்.

மற்றோரிடத்தில் அரசன் சமணர்களைத் துரத்தினான்; அவர்களின் பாழிகள் பள்ளிகளை இடித்து, அங்கே குளம் தோண்டிக் கரை அமைத்தான்.

"அன்ன வண்ணம் ஆரூரில் அமணர் கலக்கம் கண்டவர்தாம்
சொன்ன வண்ண மேஅவரை ஓடத் தொடர்ந்து துரந்ததற்பின்
பன்னும் பாழில் பள்ளிகளும் பறித்துக் குளத்துக் கரைபடுத்து
மன்னன் அவனும் மனமகிழ்ந்து வந்து தொண்டர் அடிபணிந்தான்"

என்பது பெரியபுராணச் செய்யுள்.

கொடுமை தாழாத சமணர் மதம் மாறினார்கள். அன்றைய மேட்டுக்குடிகள் எல்லாப் பழியையும் சமணர்மேல் சுமத்தினர். "போம் பழியெல்லாம் அமணர் தலையோடே" என்றும் பழமொழியே தோன்றியது.

சமய வன்முறையின் ஊற்றுக்கண் தமிழ்நாட்டில் இருப்பதைக் கண்டு விளக்கியவர் மயிலையார் அவர்களே. அரச ஆதரவுடன் சமயவன்முறை நகரும்போது எவ்வளவு கொடுமைகள் நிகழும், சமூகத்தை அச்சம் எவ்வாறு பிடித்தாட்டும் என்பதையெல்லாம் தோண்டியெடுத்துக் காட்டுகிறார் மயிலையார். சமய வரலாற்றைச் சமூக வரலாறாகவும் அமைத்திருக்கிறார்.

www.padippakam.com

## சமணத்திலிருந்து பெற்ற கடன்கள் (களவாடல்கள்) :

இந்து சமயப் பிரிவுகள் பலவும் வலியுறுத்தும் ஊன் உண்ணாமை சமணத்திலிருந்து பெறப்பட்ட சிந்தனைதான். 'அந்தணர்' என்பதே ஆதியில் சமணமுனிவரைக் குறித்த சொல்தான்.

'ரிஷிகள் யாகம்புரிந்தபோது அரக்கர்கள் அதைத் தடுத்தனர்' எனப் புராணங்களில் வரும் செய்திகளை ஆராய்ந்து, 'ரிஷிகள்' என்போர் உயிர்க்கொலை யாகம் புரிந்தோர் என்றும் அரக்கர் என்போர் சமண சமயத்தார் என்றும் தெரிவுபடுத்துகிறார். புராணங்களில் அரக்கர் எனப்பட்டோர் சமண நூல்களில் வித்யாதரர் எனப்படுகின்றனர். வித்யாதரர் என்றால் கல்வியாளர் என்பது பொருள்.

தீபாவளி என்பது மகாவீரர் வீடு பேறெய்திய நாளே! நரகாசுரன் எனப் புராணிகள் பழித்துக் கதைத்துக் கூறிய அரக்கன் மகாவீரரே.

முதல் தீர்த்தங்கரராகிய ஆதிபகவன் திருக்கயிலையில் வீடுபேறடைந்த நாளே சிவராத்திரி ஆகும். மோட்சத்தைச் சிவகதி என்பதும் அருகதேவனைச் சிவன் என்பதும் சமணர் கொள்கை.

"போக்கறு சுடர்வெள்ளி மாக்கயிலை மிசைநாப்பண்" ஆதிநாதர் எழுந்தருளியதால் திருக்கயிலை சமணரின் புனிதப்பதி ஆகும். பிறவா யாக்கைப் பெரியோனும் ஆதிநாதனே.

சமண சமயத்தில் தீர்த்தங்கரர் இருபத்து நால்வர்; சக்கரவர்த்திகள் பன்னிருவர்; பலதேவர் ஒன்பதின்மர்; வாசுதேவர் ஒன்பதின்மர்; பிரதிவாசுதேவர் ஒன்பதின்மர்; ஆக அறுபத்து மூவர். இவ்வறுபத்து மூன்று சமணப் பெரியோர் வரலாறு கூறும் நூல் "திரிசஷ்டி ஸலாகா புருஷர் சரித்திரம்" எனப்படும். அதாவது 63 பெரியார்களின் வரலாறு என்பதாகும். இதை அடிப்படையாகக் கொண்டே சைவத்திலும் 63 நாயன்மார்கள் ஏற்படுத்தப்பட்டு, பெரியபுராணம் எழுதப்பட்டது.

எனவே அறிவு மதங்களாக விளங்கிய சமணத்திலிருந்தும் பவுத்தத்திலிருந்துமே ஏராளமான கருத்துகளைச் சைவ வைணவ மதங்கள் கடன்பெற்றன; கருத்துகள், கதைகள், நூல்கள் அனைத்துக்கும் அம்மதங்களையே முன்காட்டுதலாகக் கொண்டு இவை தம்மை வடிவமைத்துக்கொண்டன. கடும்முயற்சியுடன் இவற்றைத் தேடிக் கண்டறிந்து காட்டுகிறார். அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## ஏன் வென்றது வேதமதம்?

ஒப்புரவு, மனிதநேயம், சமூகத் தொண்டு, கல்வித் தொண்டு, அறிவு நெறிச் சிந்தனை என்பன அன்று தோன்றிய பேரரசுகளுக்கு இடையூறாக இருந்திருக்க வேண்டும். 'கேள்வி கேட்காதே - நம்பு' 'இம்மையில் துன்பப்படு' 'ஆண்டவனுக்கும் அரசனுக்கும் அடிபணி' 'உழைப்பாளிக்குக் கல்வி வேண்டாம்' என்பன நிலக்கிழமையிலிருந்து தோன்றிய வல்லரசுகளுக்கு உயிர்க்கொள்கை. எனவே அவர்கள் புத்தசமணத்தை அழித்து வேதமதத்தை நிலைநிறுத்தினார்கள்.

புத்த சமண மதங்களின் பதிவுகள் இந்தியத் துணைக் கண்டம் முழுமையும் விரவிக் கிடக்கின்றன. அவர்களுக்கு எதிரான பதிவுகள், சைவ வைணவ நூல்களில் ஏராளமாய் உள்ளன.

## தமிழ்வானின் விடிவெள்ளி :

உயர்ந்ததன் வீழ்ச்சியைக் கவலையோடு விளக்கிக் கூறுகிறார். உயர்ந்ததன் வாழ்வைப் பெருமிதத்தோடு விளம்புகிறார்.

தமிழர் இருந்த நிலை என்ன? இழந்தவை என்னென்ன? வந்தவர்கள் யாவர்? மாறியன யாவை?

ஆய்ந்து அகழ்ந்து உண்மைகளை வெளிக் கொணர்கிறார் மயிலையார்.

கல்லையும் மண்ணையும் தேடி, சொல்லையும் தொடரையும் திரட்டி, வரலாற்றை அகழ்ந்து காட்டுகிறார்.

பொய் வரலாற்றினுள் புதைந்து கிடக்கும் மெய் வரலாற்றை வெளிக் கொணர்கிறார். அறியப்படா வரலாற்றுப் புலத்தில் அறிவொளி பாய்ச்சுகிறார். எழுதப்படா வரலாற்றைத் தக்கஏதுக்கள் கொண்டு எடுத்தெழுதுகிறார்.

வீழ்ந்து புதைந்த வரலாற்றுச் சிதைவுகளை அகழ்ந்தெடுத்து மீளச் சமைத்த மயிலையார் தமிழ்வானில் விடிவெள்ளையே.

*(பாரதியார் பல்கலைக்கழகம் தமிழியல் துறை 23-3-2001 இல் நடத்திய ஆய்வறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி நூற்றாண்டு விழாக் கருத்தரங்கில் படிக்கப்பட்டது)*



படிப்பகம்

www.padippakam.com

# நுண் கவிதை

- தமிழ்நாடன்

## *1. கவிதை : நுண்கலை*

இலக்கியம் நுண்கலைகளில் ஒன்று. கலைகள் எனும் பட்டியலில் முதலாவது. சொல்லப் போனால் மற்ற கலைகளுக்கு ஆதாரமானது. இலக்கியத்தின் சிறப்பு வகை. கவிதை எழுத்தின் எழுத்து. நுண்கலை என்பது போல நுண் கவிதை என்று எவரும் அழைப்பதில்லை.

அளவில் சிறியதும் கருத்தில் நுட்பமானதும் நுண்மையாம். கவிதையில் நுண்மை என்பது அளவில் சிறியது அல்ல. ஆதலின் குறள், ஹைகூ, வெண்பா, குறும்பா போன்றன நுண்கவிதை அன்று. போன்று எண்ணி வரி குறுக்கி எழுதப்படுபவையும். கருத்தியலில் நாம் அறியாதது நுண்மையாம். கடவுள், நாம் அறியாதது ஆதலின் நுண்மையாம். கவிதை அறிவியல் அன்று. கற்பனை நவிற்சி. மெய்யியல் நுண்மையாம். ஆனால் அதுவே பல பிரிவுகளாய். ஒவ்வொரு ஞானிக்கும் தனித்தனி விளக்கம், மெய்யியல் எப்போதும் தொடரும் ஒரு தேடல். தீர்மானம் அற்றது.

வாசகன் / ரசிகன் அறியாதது அதே நேரம் படைப்பாளியோ ஒரு சில வியாக்யானிகளோ விளக்கவல்லது நுண்கவிதை என்று சிலர் கருதுவர். அவ்வாறானது நுண்கவிதை அன்று, வன் கவிதை.

கவிதையில் நுண்கவிதை என்று தேர்ந்து துய்க்கும் வழக்கம் மறந்தோம். பழம் விமர்சன, வியாக்யான முறைகள் அந்நியம் என்று விலக்கினோம். சமஸ்கிருதம் பகைவரது என்றபடி, மாற்றாக அய்ரோப்பிய அமெரிக்க இலக்கணங்கள் ஏற்றோம்.

மேலை இலக்கியப் புதுமைகளில் ஒரு பொதுமை உண்டு. எனினும் ஒவ்வொரு மொழி கவிதையிலும் அதனதன் தனித்துவம் தனியாக சிறப்பாகத் தெரியும். இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் ஆங்கிலம்தான் மொழி என்றாலும் கவிதைப் பண்புகள் வேறு வேறு. இங்கிலாந்து மன்னரை மதித்து வாழும் நாடு. அதன் கலைகளில் மரபின் வேர்கள். அமெரிக்காவில் புதுமையே அதன் வேர்கள். தற்காலத் தமிழ்க்கதையில் நுண்கவிதை எனப் பெருமை கொள்ளத் தக்கது உண்டா? அந்நிய இலக்கண, விமர்சன முறைகளைக்



படிப்பகம்

www.padippakam.com

காட்டிலும் இந்திய இலக்கண விமர்சன மரபுகளே இதற்கு விடை தரமுடியும். வழிகாட்ட இயலும்.

## 2. கவிதை : நிகழ்கலை :

கவிதை கருத்தால் அமைவதா? ஒலியால் அமைவதா? கருத்தால் எனல் புதுக்கவிதை. முன்நாட்களில் கவிதை ஒலியால் தான் இயங்கிற்று. இயக்கப் பெற்றது.

கவிதையின் ஒலி எழுத்தின் வாசிப்பன்று, செய்யுள் சந்தம் அன்று. யாப்பின் வண்ணம் அன்று. கவிதை ஒலி உண்மையாக வாசிப்பிற்கும் செய்யுளுக்கும் இடையிலான ஓசையில் இயங்கும்.

புதுக்கவிதை பேச்சோசையை முன்னிலைப்படுத்தும். அவ்வொலி பேச்சிற்கும் செய்யுளுக்கும் இடைப்பட்டதாம்.

ஒலியே கவிதையின் அடிப்படை எனக் கொண்டு கவிதையை பலவகையாக அவதானிக்கலாம். கவிதை, செய்யுள், யாப்பு, பாட்டு, கீர்த்தனை, சினிமாப் பாட்டு இப்படி. இவ்வாறான கவிதை ஒவ்வொன்றினும் அதனதனின் ஒலி அலகும், அளவும் வெவ்வேறு. சில விதிக்கு உடன்படும், அடங்கும். ஒரு சில விதி மீறும். விதியை துவம்சிக்கும். அளவில் போலவே ஒலியைப் பயன்படுத்துவதில் ஒவ்வொன்றும் வேறானவை.

செய்யுள் யாப்பால் அமைவது. யாப்புக்கு ஒலி அளவு உண்டு. விதிக்கு அடங்கிய பா வகைகளே வெண்பா முதல் விருத்தம் வரை.

பாட்டு குரலெடுத்துப் பாடுவதாம். நாட்டுப்புறப்பாட்டில் பாடுகிறவனின் மன அதிர்வே குரலின் உட்சம் நீட்சம். இசைவிதிகளுக்கு அடிமைப்படாத ஒலிப்பாடு இங்கே. நாட்டுப்புறப்பாட்டு மக்கள் மனசுள் நிலைத்த சொற்களையேப் பயன்படுத்தும். அவற்றை உள்ளவாறு வழங்கும். இனிமை வேண்டி சொல்லின் ஒலியைக் கொல்லாது. இனிமை வேண்டும் இடத்திலே - தான்தானே, தன்னானே அளபெடை போன்றவை தனியே.

பாட்டு இசைவிதிகளுக்கு இணங்கக் கட்டப்படுவது. இசை ஒலியின் ஏற்ற இறக்கத்திற்கு ஏற்ப சொல்லின் ஒலி உயரும் தாழும். அவ்வாறாக சொல்லின் இயல்பொலி மாயும். கீர்த்தனை பாட்டின் பாடத்தை அதிகம் சார்ந்துள்ள இசை வடிவம். கீர்த்தனைக்கு ஏராளமாய் விதிகள். பாடுபொருள், பாடுவோர், பாடும் இடம், உகந்த ராகம், பண் இப்படி..



படிப்பகம்

www.padippakam.com

சினிமாப்பாட்டு - ஒரு காலத்தில் செய்யுள், பின்னர் யாப்பு சுத்தமான கவிதை இசையமைக்கப்பட்டு சினிமாவில் கோர்க்கப்பட்டன. நீண்ட செய்யுள், அதற்கு துணை நிற்கும் அளவான இசை. இப்போது நீண்ட இசைக்கோலம். அதற்குத் துணை நிற்கும் சில வரிகள். செய்யுளின் இடத்தில் இசை. அதனிடத்தில் செய்யுள்.

பாபநாசம் சிவன் காலம் செய்யுளுக்கும் அதன் இசைக்கும் ஒரு காலவிகிதம் இருந்தது. கண்ணதாசனுக்குப் பிற்காலம் பாட்டின் வரிகளுக்கும் அதற்கு இணைக்கப்படும் இசைக்கும் வரையறுக்கப்பட்ட காலவிகிதம் எதுவும் இல்லை. தொடக்க கால சினிமாப்பாட்டில் செய்யுள் செய்தோர் இசையும் அறிந்தவராய் இருந்தனர். இப்போதைய இசை அமைப்பாளர் பலரும் அவ்வளவாய்க் கவிதைக்கலை கைவரப் பெறாதவர்.

தற்கால மேற்கத்திய பாப் பாடல்களும் இத்தோடு பேசத்தகும். இவை ராக், ராப், ஹிப் - ஹாப் எனப் பல பெயர்களில். இவை நாட்டுப்புறப்பாடல்கள், நகரச் சேரிப் பாடல்கள், கறுப்பர் பாடல்கள், உலக வாழ்க்கைச் சூழலில் தனித்து விடப்பட்ட சின்னஞ்சிறு தீவு மக்களின் பாடல்கள்.

சாதாரணர்கள் வழங்கிய இசைக்கொடை இது. இவற்றுக்கான இசைக்கருவிகள் அம்மக்களின் கலைப்பண்பாடு சேர்ந்ததாம். நாட்டார் இசைக்கருவிகளின் இடத்தில் இன்று கம்ப்யூட்டர்கள். சமுத்திர ஓங்காரத்தை மவுனப்படுத்தும் அளவு பேரிசைக்கு இடையில் பாட்டு பெய்யப்படுகிறது. அப்பாட்டெழுதிகளுக்குப் பாட்டுக் கட்டுவோர் என்று பெயர்.

பாப் / பாட்டெழுதிகள் கவிஞர் என்று தம்மை அழைத்துக் கொள்வதில்லை. ஆனாலும் இவர்கள் பாட்டில் கவித்துவம் உள்ள வரிகள் பல காணலாம். பாட்டு வரியைப் பிரித்தெழுதினால் புதுக்கவிதை ஆக்கலாம். பாப் பாடல் நிகழ்கலையாக கவிதையை உயர்த்துகிறது. பன்முக கலை பரிமாணம் உள்ளதாக்குகிறது. ஒருகாலைக் கவிதைரசிகன் கவிதையைப் படித்து அது சித்தரிக்கும் காட்சிகளை மனத்திரையில் வரைந்து பார்த்தான். நிகழ்கலைக் கவிதை ரசிகனுக்கு புதிய புலனின்பங்களை வழங்குகிறது. கேட்புப் பாடல் - நுட்பன் கவிதை ஆகுமா? பாட்டு வெளிப்படுத்தும் கருத்துக்களை ஒலிச்சமுத்திரம் விழுங்கி விடுகிறது.

## 3. கவிதைக்கலை : பாரம்பரியம்

இந்திய நுண்கலைகள் குரு சீட மரபில் பயிற்றுக்கப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

பயில்ப்பட்டன. இலக்கியத்தில் சங்க காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரை பல குரு சீட பரம்பரைகளைக் காணலாம். இப்போது தமிழ்க்கவிஞர் பலதிறத்தினர். அவர்கள் -

தமிழ்வழி / மரபுக் கவிஞர்
தம் முயற்சி வழி பிரபலமானோர்
ஊடகங்கள் ஊதிப் பெருக்க வைத்தோர்
சார்ந்த இயக்கங்களின் 'பராக்' பெறும்
பெருமையுடையோர்

புதிய சோதனைகள் மேற்கொள்வோர்
தமிழ்ப்பயிற்றுநர்களே கவிஞரானோர்
ஆங்கிலம் பயிற்றி அத்தாக்கத்தால்
கவிதை படைப்போர்.

மூத்த கவிஞர் சிலரது ஆசி பெற்ற வளர் கவிஞர்
பிறர் கவிதைகளைப் படித்துப் படித்து தாமும் போலச்
செய்யும் கவிஞரானோர்.

தமிழரது இலக்கிய வரலாற்றில் இரண்டாயிரம் ஆண்டு பண்பாட்டு அடிமை வாழ்வு, இருநூறு ஆண்டுகளுக்கு மேலான அரசியல் அடிமை வாழ்வு. தற்காலத்தில் பின்னதே உயர்வாகப் போயிற்று. அதுவே வழிகாட்டி என கை கட்டிப் பின்தொடர்ந்தோம். தமிழ்க்கவிஞர் இலியட், மாயோகவ்ஸ்கி போன்றோரை தம் குருக்களாக வரித்தனர். சுயத்தேர்வு திறந்தவெளிப் பல்கலைக்கழகம், இணையவழிக் கல்விக்கு முன்னால் நேரில் ஆசிரியனற்றப் படிப்பு.

விடுதலைக்கு முன்னரே விட்மனைக் கொண்டு, பாரதி ஆதர்சமாக பசுவய்யா, பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், மயன், கு.ப.ரா. முதலானோர் யாப்பிலா கவிதை யாத்தனர். தமிழ்ப் புதுக்கவிதையின் தோற்றுவாய் காலம் இது. வசன கவிதையே எனத்தக்கப் புதுக்கவிதையாளர் இவர். இவரே மரபுக்கும் புதுமைக்கும் ஆன எல்லை கோடு.

சி.மணி, ஞானக்கூத்தன், தருமு சிவராமு போன்றோர்தாம் உண்மையாகத் தமிழ்ப் புதுக்கவிதையின் தலைச்சன்பிள்ளை எனத்தக்கவர். இது முதலாம் தலைமுறை. அறுபதுகள் இவர்கள் காலம். மேலைப்புதுக்கவிதை இயக்கத்தின் கோட்பாடுகளை உணர்ந்து, உள்வாங்கிக் கொண்டு தமிழ்ச்சோதனையில் கால்வைத்தவர்கள் இவர்கள். இவர்கள் கவிதை உயர்தரம். பிறமொழிக் கவிஞரில் சிறந்தவர் எவரோடும் இவர்களை இணைத்து நிறுத்தி மகிழலாம் நாம். இவர்களது கவிதைக் கலையின் தொழில்நுட்பச் சிறப்பு இன்னும் குறிப்பிடத்தக்க சாதனையே.



படிப்பகம்

www.padippakam.com

புதுக்கவிதையின் இரண்டாம் தலைமுறை எழுபதுகளில், மாயகோவஸ்கி போன்ற முற்போக்கினரை குருவாக ஏற்று இன்குலாப், காமராஜன், தமிழன்பன், புவியரசு, மீரா என இன்னும் பலர் தமிழ்க்கவிதை படைத்தனர். செய்யுளும் இல்லாமல் உரைநடையும் இல்லாமல் கூறுகெட்ட நிலையிலிருந்த வசன கவிதைக்கு புதுக்கவிதை எனும் தோற்றம் தந்தவர் இவர்களே. தோற்றம் உடல் என்று மட்டும் பொருள் அல்ல. எனில் முதல் தலைமுறையினர் உயிர்தந்ததால் உயர்வாகி இது தாழ்வுறும். அது முறையன்று.

தோற்றுவாய் காலத்தவர்க்கு புதுக்கவிதை என்பது யாப்பு மாற்றம். முதல் தலைமுறையினர்க்கு யாப்பு மறுப்பு. மாற்றம் எனில் பேச்சு வார்த்தை. மறுப்பு எனில் பிணங்கி நிற்றல். இரண்டாம் தலைமுறை இரண்டையும் விடுத்து புதிய நிலைப்பாடு ஏற்றது. தனியாட்சி தன் ஆட்சி அமைத்தது. இவர் தம் கவிதா மண்டலம் பரந்து விரிந்த தமிழ் உலகம், ஆழம் கடல் கடந்தும். இதை இன்னொரு மாதிரியாக விளக்கலாம். வசன கவிதைக் காலம் புதுக்கவிதை என்பது ஒரு கருத்துரு (Hypothesis). முதல் தலைமுறைக் காலம் ஒரு சமன்பாடு (Equation). இரண்டாம் தலைமுறைக்காலம் புதுக்கவிதை ஓர் இலக்கியக் கோட்பாடு (Principle). அறிவுத்துறையும் பண்பாடும் சேர்ந்த வளர்முகப்பாங்கு. எண்பதுகளில் மூன்றாம் தலைமுறை. இக்காலம் புதுக்கவிதை வெகுமக்களின் நுகர் / பயன்பொருளாகப் பெருக்கம் பெற்றது. பொருள் மலிந்தால் தரம் மலியும், இலக்கியத்திலும், தொண்ணூறுகளில் புதியவர், இளையவர் நிறைய. இவர் தம் படைப்பு தனிக்கவிதைகள், 'மினி' கவிதைகள். தனிமனிதரின் அன்றாட வாழ்வின் சின்னஞ்சிறு செய்திகள்.

தோற்றுவாய்க் காலத்தவர் இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தைச் சார்ந்தவர்கள். காந்தியமோ, நேருவியமோ அவர்களது கவிதை தாம் வாழ்ந்த காலத்தின் பிரதிபலிப்பு இவர்கள். முதல் தலைமுறைக் கவிஞர்கள் இறக்குமதியாளர்கள். நமக்கு இது தேவைப்படும் என்று ஆசைப்பட்டு தம் மனதை மேற்குலகில் அலையவிட்டவர்கள். இரண்டாம் தலைமுறை (பொதுவாக) சடுதியில் நலம் காணும் மருந்து மார்க்சியம் சோசலிசம் என்பது போல ஆவேசமுற்றவர்கள். மூன்றாம் தலைமுறையினர் இவை யாவற்றையும் குழைத்தெடுத்து 'கொலாஜ்' செய்து பார்த்தவர்கள், வெற்றி, தோல்வி மரபு குறித்து மறுபரிசீலனை என்று தடுமாறுதல், தடுமாறுதலோடு.

பின்வந்தோர் கவிதையில் இமாலயக் கனவுகள் அரிது. அவருக்கு அதைவிடப் பெரிது வழியில் தம் சைக்கிளில் இருந்து கழன்று விழுந்த நட்டு, தேசம், கட்டுமானம், ஒற்றுமை இவற்றை விடவும் இவர் கவிதைகளில் அலுவலகம், வீடு, நட்பு, தம் மன உளைச்சல்.



படிப்பகம்

www.padippakam.com

முதல் தலைமுறைக் கவிதையின் குரல் ஆவேசக்குரல், இரண்டாம் தலைமுறைக் குரல், கடும் சத்தம், மூன்றாம் தலைமுறையில் தொடங்கிய குரல் மாற்றம் பின்னர் மெலிதாயிற்று. தனித்தனி முனகலாய்.

வாழும் இளங்கவிஞர்கள் ஏகலைவர்கள். குருமுகம் அறியாதவர்கள். தம் எழுத்தெல்லாம் படைப்பு எனும் கருத்தினர். பரம்பரைக் கலையில் போல வழிகாட்டும் மூத்தோர் அற்றவர்கள். குரு அற்ற குறையை நல்ல திறனாய்வு முறை குறைக்கும். கவிதைத் திறனாய்வை செழுமைப்படுத்தினால் தமிழ்ப்புதுக்கவிதை நுண்கவிதையாகப் புதிய பரிமாணம் பெறும்.

## *4. நுண்கவிதை : சில எதிர்ப்பாடுகள் :*

மண் இல்லாமல் செடியில்லை
தாய் இல்லாமல் பிள்ளையில்லை
குரு இல்லாமல் கலைஞன் இல்லை

என்று சொல்லப்பட்டாலும் ஒரு படைப்பாளிக்கு குருவை மிஞ்சிய சுயம், தலித்துவம் வேண்டும். ஆனால் தமிழின் வமிசாவழிக் கவிஞர்களுக்கு அத்தகையக் காத்திரம் உண்டா?

காந்தியின் ஆட்சி என்றார் நேரு. நேருவின் ஆட்சி என்றார் இந்திரா. தமிழகத்தில் அண்ணாவின் ஆட்சி என்கிறது ஒரு கட்சி. எம்.ஜி.ஆருக்கு உயிர்தர சபதம் செய்கிறது இன்னொன்று. அது பின்பற்றுதல், சுயம் இன்மை, தமிழ்க் கவிஞர்கள் பாரதி வாரிசு, பாரதிதாசன் பரம்பரை என்று சொல்லிக் கொள்வதும் இப்படியானதே. சுயம் மறந்ததே.

பாரதியே இலக்கணமாகப் பாட்டெழுதுகிறவர் இன்னும் உண்டு. பாரதப் பண்பாட்டு மீட்சிக்கும் விடுதலைக்கும் கவி பாடினார் பாரதி. பாரதியைப் பின்பற்றி எழுதுவோர் எழுதுவது எதற்கு?

பாரதிதாசன் தாய்மொழியை தம் உடல், உயிர், வாழ்வு என்றெல்லாம் கவித்தார். 1965 மொழிப்போர். 1999-2000 தாய்மொழி வழிக் கல்வி உரிமை மறுப்பு. இச்சூழலில் பாரதிதாசன் போல சிலர் எழுதக்கூடும். ஆனால் பாரதிதாசனிடமிருந்த கவிதை வீறாண்மை என்னவானது? நுண்கலைக்குப் பொருந்துவது போல குரு சீடப் பரம்பரை தமிழ்க் கவிதைக்குப் பொருந்தவில்லை. பாரதி பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களின் தமிழ்க் கவிதையாக்கம் இதற்கு சான்று.

அபி, ஆத்மாநாம், கலாப்பிரியா, தேவதேவன், பிரம்மராஜன், விக்ரமாதித்தன் போன்றோர் யார் மாதிரியும் இல்லாத கவிச்சித்தர்கள். இவருள் சிலரது கவிதைகள் பூடகமானவை. சில இருண்மையின்



படிப்பகம்

www.padippakam.com

உச்சம். சிலரால் இந்தப் பண்புகள் கவித்துவத்தின் தனித்துவம் எனப்படலாம். மாறாக இவை நுண் கவிதை அன்று. பொருள் புரியாமை நுண்மை ஆகாது. வாசகர் மனத்தை அறிவுஜீவித்தனம் செய்யும் வதை அது. நுண்கலைகளான சித்திரமோ, சிற்பமோ அதனதன் பண்பில் கலை எனப் பெயரும், பெருமையும் பெறும், கவிதையும் அவ்வாறு சிறப்பு பெறுவதே முறை, சரி. ஆனால் கவிதையோ தனக்குப் புறம்பான பல இசங்களை சுமந்தவாறு காட்சி தருகிறது. அபி, பிரம்மராஜன், போலும் சிலர் கவிதைகளில் படிமம். அப்துல் ரகுமான், நீலமணி போன்றோர் கவிதைகளில் சர்ரியலிசம், நகுலன் போன்றோர் கவிதைகளில் குறியீடு.

குறியீடும் / படிமமும் கவிதையின் உத்திமுறை. உத்தி ஒன்றே கவிதை ஆவதில்லை. தமிழ்ப் புதுக்கவிதையில் முதலாவது படிமக்கவி தருமு சிவராமு என்று பேசப்பட்டது. அடிக்கு ஒரு படிமம் எனப் போட்டியிட்டது தமிழன்பன் கவிதை.

சிறுமையிலிருந்து பெருமை காண்பது, பிண்டத்திலிருந்து அண்டத்தை உணர்வது - இவை தேடும் ஞானமுள்ளவர்க்கு சாத்தியமே. அறிவியலில்கூட நுண்ணுயிர் ஆய்வும் அண்டவெளி ஆய்வும் ஒரே உணர்வுக் கிளர்ச்சியை வழங்குவதாக அறிவியலார் பேசுவர். ஆய்வில் மூழ்கிய அறிஞர்களுக்கு அந்த அனுபவம் சாத்தியமே. நம் கவிஞர்கள் பலரது வாழ்நிலையைப் பார்க்கையில் நுண்ணியத் தேடல்களுக்கு அவர்களுக்கு அவகாசமே இல்லை. என்றாலும் அவர்கள் ஞானாசிரியர்களாய்க் காட்சியளிப்பர்.

ஓர் உண்மை அறியும் கருவியே இவர்கள் உள்மனசை வெளிப்படுத்தவல்லது. என்றாலும் வரலாறே பொருத்தமான சோதனையாளன். கவிப்பர். தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்ளும் இவர்களது ஞானக்கவிதை நுண்கவிதை ஆகாது.

ஹைக்கூ கவிதையை நுண்கவிதை என்று மேலைப் புதுக்கவிதை முன்னோடிகள் போற்றினர். ஆங்கிலம் வழி தமிழுக்கு வந்தது ஹைகூ. தமிழ் ஹைகூ குறும்பா ஆகவே இருக்கிறது. ஜப்பானியக் ஹைகூ ஆதிகவிகளின் மனநிலை, வாழ்வுப் பின்புலம் நம் கவிஞர்களுக்கு இல்லை. பாஷோ முதலானவர்கள் வாழ்க்கையே கவிதை போலத் தோற்றம் தர வாழ்ந்தவர்கள். தமிழ்க் ஹைகூக் கவிஞர்கள் சராசரி மக்கள். ஆதலின் தமிழ் ஹைகூக்களும் சராசரி குறுங்கவிதைகளாகவே உள்ளன. இன்றைய ஜப்பானியக் ஹைகூவும் இலக்கணம் தளர்ந்து ஆழமும் அழுத்தமும் குறைந்து காண்கிறது. அது தனிச் செய்தி. அது அவர்கள் பாடு.

அரசு மணிமேகலை, கனிமொழி, கிருஷாங்கணி தாமரை, திலகவதி, பெருந்தேவி, பிருந்தா, மித்ரா, இரா.மீனாட்சி, வத்சலா எனப் பல பெண் கவிகள்.



படிப்பகம்

www.padippakam.com

பெண்மை மென்மையானது என்பது மரபு. பெண்மை மென்மை எனும் கூற்று பெண்களின் ஆற்றலைத் தாழ்ச்சி செய்வதாம்.

தமிழ் எழுத்துக்களில் மெல்லினம் பெண் எழுத்து. சொற்களில் பெண்பால் சொற்கள், வண்ணப் பாடல்களில் ஆண்கலை, பெண்கலை என்றிரு பிரிவுகள். ஆங்கில யாப்பிலும் ஆண்சந்தம் பெண்சந்தம் என்றிரண்டு, புதுக்கவிதையின் வருகையே இப்பழம் வழக்கத்தை ஒழித்தது.

நுண்மை மென்மையாகவும் அமையும். ஆனால் நம் பெண்மணிகள் எழுதும் மென்மையான, கவிதைகளை நுண்கவிதைகள் என்று கருதுவதற்கு இயலாது. உளவியல் சார்ந்து எவ்வளவோ சாதிக்க முடிந்த நம் பெண் கவிகள் ஆழமாய்ச் சிந்திக்க ஆயாசப்படுகின்றனர் போலும்.

வெளிப்பாட்டு வகையாக, கவிஞர்களது சிலமுறைகள் - முன் வழக்கமிலா புது உவமைகளைக் கண்டறிந்து கவிதை செய்வார் ஒருவர். அவரது ஆளுமைக்கு அது இயல்பு, அழகு. அவர் வகையினர் தாமும் உவமைத் தேட ஆரம்பித்து தாம் ஒரு வனத்திற்குள் அகப்பட்டனர்.

ஒரு கவிஞர் கவிதைத் தலைப்பையொட்டி வரலாற்றில் நிகழ்ந்த யாவற்றையும் பட்டியலிடுவார். இன்னொருவர் வரலாற்று நாயகர்களின் சாதனைகளை அடுக்கி, தம் கவிதையின் உயர்வு காட்டுவார். பிறிதொருவர், இதனால் இது நிகழ்ந்தது / நிகழும் எனக் காலம் காட்டுவார். நாட்காட்டி, பெயர்ப் பட்டியல், வாய்பாடு இவை கவிதை ஆகா.

வாழ்வு முழுவதும் கவிதை. அண்மைக்கவிதையின் போக்கு வாழ்வின் சிறு சிறு நிகழ்வுகளை, தம் அனுபவமே போன்றவற்றை கவிதையாக்குவது, படிமம், குறியீடு இவை இல்லாமல் எளிய மொழியில், நடையில், தற்பேச்சில் இத்தகையக் கவிதைகள். அதனாலேயே இதிலொரு புதுமைச் சாயல். இவற்றைப் படிக்க சுயபதிப்பே போல ஒரு பாதிப்பு. மெல்லிய சுகம்.

இலக்கியம் என்னும் பெரும்பரப்பில் ஒரு பகுதி கவிதை. ஆனால் வானின் கிழக்கே மேற்கே கவிதை என்பது போல ஒதுக்கிவிட முடியாது. ஒரு பால்செம்பில் சுவை தனியொரு இடத்தில் அல்ல. உயிர் வாழ்வு முழுவதும் கவிதை.

வாழ்வு உண்மை - எளிமை - தெளிவு சேர்மானமே நுண்கவிதை. இதுவே இலக்கியம் வளர்க்கும்.



படிப்பகம்

www.padippakam.com

# சித்தர் இலக்கியங்களே தமிழாய்வின் அடித்தளம்

- *மருத்துவர் கோபி*

ஏறத்தாழப் பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே குமரிமுதல் இமயம்வரைப் பரவியிருந்த திராவிடப் பெருநாட்டில் பல்லாயிரக் கணக்கான சித்தர் பெருமக்கள் வாழ்ந்ததாகத் தெரியவருகின்றன. ஆரியர்கள் வருகைக்கு வெகுகாலம் முன்னரே இந்த நாட்டின் ஞான விஞ்ஞானிகளாக அவர்கள் உலவினர்.

இமயத்தை ஆண்ட சிவபெருமான் முதல் வடலூர் வள்ளல் பெருமான் வரை அந்தப் பழஞ்சித்தர் வரிசையில் அடங்குவர். இன்று நாம் வழிபடுகின்ற உருவங்கள் எல்லாம் சித்திபெற்ற மனிதர்களே தவிர, கடவுள்கள் அல்லர்.

சன்மார்க்கக் கொள்கை தொடர்பான இராமலிங்க வள்ளலாரின் கருத்துக்களையே நாம் மேற்கோளாக ஏற்கலாம் :

"சர்வ சித்தியை உடைய தனித்தலைமைப் பதியாகிய ஆண்டவரை வேண்டித் தபசுசெய்து சிருட்டிக்கும் சித்தியைப் பெற்றுக் கொண்டவன் பிரமன். சிருட்டி, திதி, ஆகிய சித்தியைப் பெற்றுக் கொண்டவன் விஷ்ணு. சிருட்டி, திதி, சங்காரம் ஆகிய சித்தியைப் பெற்றுக் கொண்டவன் ருத்திரன். இவர்கள் ஏற்படுத்திய சமய மார்க்கங்களை அனுட்டிக்கின்றவர்கள், இவர்களை அந்தந்தச் சமயங்களுக்கு தெய்வங்களாக வணங்கி வழிபாடு செய்து வந்தார்கள். இம்மூர்த்திகளுடைய சித்திகள் சர்வ சித்தியையுடைய கடவுள் சித்தியின் இலேசங்கள்; அதில் ஏகதேசங்கூட அல்ல. ஆகையால் இவர்கள் அந்த சர்வ சித்தியையுடைய கடவுளுக்கு ஒப்பாகார்கள். கோடி கோடிப் பங்கு தாழ்ந்த தரத்தில் இருக்கிறார்கள்."

எனவே, மகாசக்தி பெற்ற மும்மூர்த்திகள் என்று மக்களால் மதிக்கப் பெற்று வழிபடுகின்ற இவர்கள், சில சித்திகள் பெற்ற சமயத் தலைவர்களே என்பது புலனாகிறது. இருப்பினும் இவர்களும் இவர்களை ஆசான்களாக ஏற்று கடுமையான முயற்சியுடன் பயிற்சிகள் மேற்கொண்டு இறைசக்தியைப் பெற்றவர்களே சித்தர்கள்.

தமிழ்ச் சமுதாய வரலாற்றில் இன்று ஒரு பின்னடைவுக் காலமாகக் கருதப்பட வேண்டும். கணிணியில் தமிழ், பள்ளிகள், கல்லூரிகளில் கணினி மூலம் கல்வி மய்ய அரசிலும், அய்க்கிய நாட்டு அவையிலும் செம்மொழியாம் தமிழுக்கு அங்கீகாரம் என்றெல்லாம்



படிப்பகம்

www.padippakam.com

பேசியே தமிழ் எங்கோ உயரத்திற்குப் போய்விட்டதாகவும், இதை உணராமல்தான் தமிழ் தாழ்ந்து விட்டதாகச் சிலர், தங்கள் தாழ்வுணர்வை வெளிப்படுத்துவதாகவும் அதிகாரவர்க்கம் ஆணவத்துடன் சொல்லுகிறது.

உண்மையில் ஒரு மொழியின் வளர்ச்சி என்பதும் ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி என்பதும் மக்களின் வாழ்வுத் துறைகள் அனைத்திலும் அவர்களின் தாய்மொழி இரண்டறக் கலந்துறவாடி வளர்வதாகும். ஆங்கில மொழியிலேயே ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி நிகழுமானால் அது ஆங்கில சமுதாயமாகவே விரைவில் மாறிவிடும். எங்கும் எதிலும் ஆங்கிலத்தையும் இந்தியையும் பயன்படுத்திவிட்டு, நான் தமிழன்தான் என்று கூறுவதில் பொருளே இல்லை. மெக்காலே கருதியபடி இன்று நிறத்தில் மட்டுமே தமிழன்? உள்ளடக்கத்தால் தமிழன் ஆங்கிலேயனாக உருமாறிக் கொண்டிருக்கிறான்!

இந்த இருண்ட காலத்தைக் கடந்து ஒளிமிகுந்த ஒரு காலத்தை நோக்கி நாம் விரைந்து மாறி, முன் செல்ல வேண்டாமா? ஆம்! இன்றையக் காலத்தின் முதல் தேவையிது. அதற்காக நாம் நமது பாரம்பரியமான - வழி வழி வந்த சிந்தனைகளின் மனிதநேய வாழ்நெறிச் சாரங்களை முன்நிறுத்திப் பயணிக்கவேண்டும். தமிழினத்தின் தேசிய மூலங்கள் அல்லது தமிழ்ச் சமுதாயத்தின் பெருமைக்குரிய சாதனைகள் என்ன? அவைகள் எவ்வாறு சாத்தியமாயிற்று? என்பவை பற்றியெல்லாம் சலித்துப் பார்க்காமல் சொந்தக் காலில் நின்று தன்மானத்துடன் முன்செல்ல முடியாது! பெருமைக்குரிய தமிழனின் சாதனைகள் சேமிக்கப்பட்டிருப்பது நமது சொந்தம் தாய்மொழியான தமிழில்தானே தவிர ஆங்கிலத்தில் அல்ல. எனவே,

<u>தமிழாய்வு இன்று தலையானது</u>

தமிழாய்வு என்று மேம்போக்காகப் பார்த்தால் மொழித் தொடர்பான ஆய்வு மட்டுமே. ஆனால் தமிழினத்தின் வாழ்க்கை வரலாறே அந்த மொழியில்தானே உள்ளடங்கியிருக்கிறது? வரலாற்றுக் காலத்தில் தமிழன் உலகின்கண் எப்படித் தலைநிமிர்ந்து நின்றான்? அவனது வாழ்முறை - தொழில், வணிகம், கல்வி, கலாச்சாரம், செய்தித் தொடர்பு, தத்துவங்கள், மருத்துவம், அறிவியல், ஆத்மீகம், விளையாட்டு போன்ற ஏனையத் துறைகளிலும் எவ்வாறு ஒளிர்ந்தான்? இந்த உலகத்திற்கு தமிழனின் பங்களிப்பு என்னவாக இருந்தது? இன்று பிறர்காட்டும் நெறிகெட்ட திசையில் செம்மறியாட்டுக் கூட்டமென எவ்வாறு தடந்தவறிச் சென்று கொண்டிருக்கிறோம்? என்பவற்றிற்கான தடயங்களை ஏராளமாக நம்மால் காணமுடியும்!



படிப்பகம்

www.padippakam.com

நமது பழம் பெருமை வாய்ந்த இலக்கியங்களும், இதிகாசங்களும் ஒரு சமுதாயத்தின் இடையீடில்லாத வளர்ச்சியை விரிவாக விளக்கியிருக்கின்றன. அன்னியர்களின் ஆக்கிரமிப்பு நிகழும் வரை தடங்கலற்ற வளர்ச்சியாகத் தொடர்ந்திருப்பதை அறியலாம். நமது சமுதாயம் முன்னேறிச் செல்வதற்கான இலட்சியங்கள் - நோக்கங்களை நமது முன்னோர்கள் தெளிவாகவே வகுத்தளித்திருக்கிறார்கள்.

மார்க்சீயம், மாவோயியம், காந்தியம் இன்னும் புத்தயியம், நபிகளியம், யேசுயியம், மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்காக எவ்வெந்தத் தத்துவங்கள் வெளிவந்திருக்கின்றனவோ அவைகளையெல்லாம் படித்தறிய வேண்டியது மிக மிகத் தேவையானதாகும்.

ஆனால் நமது வழிகாட்டு நெறிகளை தேசிய மூதறிஞர்களின் கொடைகளிலிருந்தே வடிகட்டியெடுக்கப்பட வேண்டும். நமது வாழ்வியல் தத்துவங்களுக்கு பிறநாட்டு நல்லறிஞர் தத்துவங்களைச் சான்றாகக் காட்டலாம். ஆனால் பிற தத்துவங்களை ஏற்றுக்கொண்டு அதற்குச் சான்றாக - மேற்கோளாக நமது தத்துவங்களை எடுத்தியம்பிச் சிறுமைப்படுத்தக்கூடாது! இவைகளையெல்லாம் புதிய நோக்கோடு நுணுகி ஆய்வது இன்றையத் தேவையாகும்.

தமிழாய்வுக்கு முதன்மையானது மட்டுமல்ல, முழுமையானதும் சித்தர்கள் இலக்கியங்கள் ஆகும். மொழி ஆய்வு என்பது வாழ்வியலைச் செழுமைப்படுத்தவே. தமிழனுக்கு ஒரு அழகிய முகத்தையும், அழுத்தமான முகவரியையும் அளித்தவர்கள் சித்தர்களேயாவார்கள்.

***சித்தர் இலக்கியமே மொழி ஆய்வின் நுழைவாயில் :***

வள்ளுவனும், கம்பனும், இளங்கோவடிகளும், பாரதியும் தமிழினத்தின் பெருமைகளாகக் கருதுகிறோம். இவர்களெல்லாம் சித்தர்களைப் பின்பற்றி யோகா, தியானம் முதலியவைகளை மேற்கொண்டு மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனத் துணிந்து செயலாற்றியதாலல்லவா அன்னவர்களின் இலக்கியச் செல்வங்களை நம்மால் பெற முடிந்தது!

அறிஞர்களில் பலர் சித்தர்களைப் போலிச் சாமியார்கள் என்றும், செத்த மருத்துவம் கண்டவர்கள் என்றும் தரக்குறைவாகக் கருதுகிறார்கள். இந்தக் கருத்தை மனங்கொண்ட எட்டப்பன்கள் வெள்ளைப் பறங்கியருடன் கூட்டுநின்று சித்தர் பரம்பரையை அழிக்கக் காரணமாயினர்.

எக்காலத்தும், எவ்விடத்தும் போலிகள் ஆடம்பரமாகக் காட்சியளித்திருப்பது வெள்ளிடைமலை போன்றது. போலிச் சித்தர்கள்



படிப்பகம்

www.padippakam.com

தொடர்பாக 14 பாடல்களுக்கு மேல் சிவவாக்கியர் பாடியுள்ளார். உண்மையான சித்தர்களுக்கு இழுக்குவரக் கூடாது என்பதற்காகவே மன்னர்களை எச்சரித்தும் சில சித்தர்கள் போலிகளை அம்பலப்படுத்தியுள்ளனர்.

## சித்தர்களின் மருத்துவ முறை :

மனித சமுதாயம் மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறவேண்டும் என்பது சித்தர்களின் நோக்கம். அதற்காகவே அவர்கள் யோகம், தியானம், தவம் முதலிய வழிகளைக் கடைபிடித்தனர். அந்த மார்க்கத்தில் செல்லுகிறபோது இடையூறாக சுகநலம் பாதிக்கப்பட்டு, தொடரமுடியாத நிலையை உணர்ந்தனர். எனவே மருத்துவத்தில் காயகல்பமுறை தேவை என்பதைக் கண்டு அதற்கான மூலிகை ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு, வெற்றி கண்டனர்.

இன்றைய உலகம், எய்ட்ஸ் (நச்சுவெட்டை), காசம் மற்றும் பல தொத்து நோய்களால் பாதிக்கப்பட்டு பீதியடைந்து காணப்படுகிறது.

அறிவியலின் கூர்முனை மனிதனை எதிரிகளாக்கி, அழித்தொழிக்கும் ஆய்வுகளில் சென்று கொண்டிருக்கிறது. ஏகபோக மருந்துற்பத்தியாளர்கள் மனிதனின் நோய்த்துன்பத்தைப் பயன்படுத்தி, தங்களது சுரண்டற் பசிக்குத் தீனி தேடுகிறது. ஒரு நோயாளி சாகும்வரை அவர்களது மருந்துகளை அதிகபட்சமாக அருந்தியே சாகவேண்டும் என்பது ஆய்வுகளின் நோக்கம்!

ஆனால் சித்தர்கள் மனிதநேயத்தின் சிகரங்கள்! அவர்களது ஆராய்ச்சிக்கு உட்படாத நோய்களே இல்லை என்று துணிந்து சொல்லமுடியும். எய்ட்ஸ் என்ற பெயரிட்டு அதற்கு எச்.அய்.வி. என்ற கிருமிகளே காரணமென்பதைத்தான் இன்றைய அறிவியல் கண்டு சொல்லியுள்ளது. ஆயினும் இந்தக் கிருமிகளும், நோயும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னரே, ஆண்டான்களின் ஆணவ சமுதாய அமைப்பிலேயே தோன்றியுள்ளன. மன்னர்களின் மைத்துனர்களும், அரண்மனை வாழ்வின் கொழுப்பேறிய காமக் களியாட்டங்களும் இந்தக் கொடிய நோய்களுக்கு அன்றே துவக்கஞ் செய்துள்ளன. நச்சுவெட்டை என்று சித்தர்களால் குறிப்பிடப்பட்ட அந்த நோயினை அவர்கள் குணப்படுத்தவும் செய்திருக்கிறார்கள்.

இன்று மக்கட்தொகை, புற்றீசல் போல் பெருகியதுடன், மன்னர்களின் போகவாழ்வை விஞ்சிய மனிதக் காட்டேரிகள் தங்களது செல்வச்செழிப்பில் ஏழைச் சமுதாயத்தைப் பொருளாதாரச் சுரண்டலுக்குப் பயன்படுத்துவது மாத்திரமல்லாமல், காம இச்சைகளுக்கும் இலக்காக்கி மனித உறவுகளையே கொச்சைப்படுத்தி வருகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

சித்தர் இலக்கியங்கள் இந்தச் சமுதாய மாற்றத்திற்கும், மனிதனைத் தாக்கியழிக்கும் நோய்களைப் போக்குவதற்கும், தடுப்பதற்கும் வழிமுறை கண்டிருக்கின்றன. அதனை வெளிக் கொணருவதும் தமிழாய்வின் நோக்கமாக இருக்கவேண்டும்!

***சாதி - சமய வேற்றுமைகளைக் கடந்தவர்களே சித்தர்கள் :***

இங்கே நாம் மற்றொரு உண்மையைப் பார்க்காமல் இருக்க முடியாது. சாதாரண மனிதர்களிலிருந்தே சித்தர்கள் உருவாகிறார்கள் என்பதை நாம் அறிவோம். எனவே, சித்திகளை முழுமையாகப் பெறுவதற்கு முன்னுள்ள இடைக்காலங்களில் மனிதர்களுக்கிருக்கின்ற தீயகுணங்கள் உட்பட அனைத்தும் அவர்களிடமும் இருக்கத்தான் செய்தன என்பதை மறுப்பதற்கில்லை. வருணாசிரமத்தை ஆதரித்த சித்தர்கள் இருந்தார்கள். அட்டமாசித்தி என்பதும் முத்தி சித்தி என்பதும் சித்திகள் என சொல்லப்பட்டுள்ளன. இதில் அட்டமா சித்தி பெற்றவர்களிலும் மனிதனிடமுள்ள தீய குணங்கள் இருக்கவே செய்யும். ஆனால் முத்தி சித்தி என்பதுதான் முழுமையான சித்தியாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்கள்தான் இறைச் சக்திக்கு இணையானவர்கள். அவர்களின் எண்ணங்கள், சொல், செயல் ஆகிய அனைத்தும் வேற்றுமைகள் கடந்ததாக இருக்குமெனத் தெரியவருகிறது.

எனது உள்ளத்தில் மறைந்திருந்த சாதி, சமய, வேற்றுமை உணர்வுகள் முழுமையாக மறைந்த பிறகுதான் என்னால் முத்தி சித்தியைப் பெற முடிந்தது என்று வள்ளர்பெருமான் கூறியிருக்கின்றார்கள். பிராமணீயத்தையும், சாதி மத வேற்றுமைகளையும் மிகக் கடுமையாக எதிர்த்தவர்கள் சித்தர்கள். அந்த எதிர்ப்பின் முன் வரிசையில் நின்றவர் சிவவாக்கியர் என்று குறிப்பிடுவதில் பிழை இல்லை என்று கருதுகிறேன்? அதற்காகவே சில வரிகளை இங்கு எடுத்துக் காட்டுகிறேன் : திருமூலர் போன்ற பல சிறப்பு வாய்ந்த சித்தர் பெருமக்கள் வாழ்வியலை மெருகூட்டியிருப்பதை நாம் பிரித்துக் காண்பதுவும் இன்றையத் தேவை! சிவவாக்கியர் :

"பறைச்சியாவதேதடா பணத்தியாவ தேதடா
இறைச்சி தோலெலும்பிலு மிலக்கமிட்டிருக்குதோ
பறைச்சி போகம் வேறதோ பணத்தி போகம் வேறதோ
பறைச்சியும் பணத்தியும் பகுத்துபாருமும் முளே.

பிறந்தபோது கோவண மிலங்கு நூல் குடுமியும்
பிறந்துடன் பிறந்ததோ பிறங்கு நாற் சடங்கெலா
மறந்த நாலு வேதமும் மனத்துளேயுதித்தவோ
நிலம்பிளந்து வானிடிந்து நின்ற தென்னவல்லிரே.


படிப்பகம்

www.padippakam.com

சட்டையிட்டு மணிதுலக்குஞ் சாத்திரச் சழக்கரே
பொத்தகத்தை மெத்தவைத்து வேதமோதும் பொய்யரே
நிட்டையேது ஞானமேது நீரிருந்த அட்சரம்
பட்டையேது சொல்லிலே பாதகக் கபடரே" இத்தகைய கபடதாரிகளான பார்ப்பனர்களை மேலும் கடுமையான சுடுசொற்களால் தழலிட்டு வறுத்தவர் சிவவாக்கியர். பக்தி, ஞான மார்க்கங்களில் அவர்கள் ஆழ்ந்தபோதும், துன்புறும் மக்களை மறந்தாரில்லை.

'சங்கடந் தீர்க்கும் சனிபகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சாவின்றிச் சாகா நெறியில்
இச்செகம்வாழ இன்னருள் தா தா'! சனிபகவானை வழிபடுகின்ற ஒரு சித்தர், தனக்கென எதுவும் கேட்காமல் போரும், பொறாமையும் தவிர்த்து உலகம் மாண்புற வாழ்வு பெற வேண்டுமென்றல்லவா அருள் புரியும்படி கேட்கிறார்!

அரைகுறையான சித்திகளைப் பெற்று, அளவுக்கு மீறிய வல்லபமடைந்துள்ளதாகப் பெருமையுடன் முழங்கிய சித்தர்கள் சிலர் உள்ளனர். அதில் பாம்பாட்டிச் சித்தர் பாடலை எப்பொருளில் காண்பது?

எட்டு மலைகளைப் பந்தாய் குடுத்தெறிகுவோம்
ஏழு கடலையுங் குடித்தேப்ப மிடு வோம்
மூண்டெரியும் அக்கினிக்குள் மூழ்கி வருவோம்.
முந்நீருள் இருப்பினும் மூச்சடக்குவோம்.
தாண்டிவரும் வன்புலியைத் தாக்கி விடுவோம்
செப்பரிய மூன்றுலகும் செம்பொன்னாக்கு வோம்.
செங்கதிரைத் தண்கதிராய்ச் செய்துவிடுவோம் !
இப்பெரிய உலகத்தை இல்லாமல் செய்வோம்.
எங்கள் வல்லபங்கண்டு நீயாடுபாம்பே !

இப்பாடலின் நேர்ப்பொருளில் தலைக்கனத்துடன் பாம்பாட்டிச் சித்தர் பாடியிருப்பதாகக் கணக்குப் போட்டால் அது தவறிழைப்பதாகும். எட்டு மலைகளைப் பந்தாய் எடுத்தெறிகுவோம் என்ற முதல் வரியில் வரும் எட்டு, எண் தீமைகளைக் குறிப்பதாகும். (காமம், குரோதம், உலோபம், மதம், மாதச்சரியம், மோகம், டாம்பீகம், அகங்காரம் - ஆகிய எட்டு) ஞானப் பெருநிலையிலிருந்து, தங்களில் மூண்டெழுகின்ற மதவுணர்வுகளை அடக்கியாளுகின்ற வல்லமையைப் பற்றியே இங்கு பேசப்பட்டது. ஞானமார்க்கத்தில் வெற்றியீட்டுவதற்கு இந்த வல்லமை முதற்படியாகும் என்று சித்தர்கள் கூறுகிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

நல்ல தமிழறிஞர்கள் ஞானவழியிலும் சிந்திக்கிற போதுதான் இத்தகைய பாடல்களுக்கெல்லாம் சரியான விளக்கம் சொல்லமுடியும். ஆத்மீகம் கலந்த பொருளியல் வாழ்வுக்கும், ஜனநாயக அரசியல் நன்னெறிகட்கும் இவைகள் தேவையாகும். தமிழாய்வில் இவைகள் இடம்பெற வேண்டும்.

## சித்தர்களின் அறிவியல் பார்வை :

அறிவியலில் ஆக்கப் படைப்புக்கள் வளர, ஞான-விஞ்ஞான மார்க்கத்திலூடே சித்தர்கள் பெருங்கொடையளித்துள்ளார்கள். தகவல் தொடர்பின் முன்னேற்றம்பற்றி இன்று அதிகமாகப் பேசப்படுகிறது. மனஅதிர்வுகள் மூலமாக எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளும் முறையை நமது சித்தர்கள் அறிந்திருந்தார்கள். சித்தர்கள் இதனை தொலை கேட்டல், தூரம் கேட்டல் என்று பல பெயர்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள். திருமூல நாயனார் இதை "செய்தி கேட்டலும் ஆமே" என்று பாடுகிறார். "டெலிபதி" என்ற பெயரில் இந்த ஆய்வு வளர்ந்த நாடுகளில் இன்று முன்னேறி வருகிறது.

யோகத்திலே தேர்ந்த பல சித்தர்கள் வாரக்கணக்கில் மண்ணில் புதையுண்டிருந்தபின் மீண்டும் வெளிவந்து எப்போதும்போல் உலாவியுள்ளார்கள். இதனை "காடலெப்சி" என்ற பெயரில் மேனாட்டு நிபுணர்கள் இன்று ஆராய்ந்து வருகிறார்கள்.

சோவியத் யூனியன் உயிரோடு இருந்த காலத்தில் டாக்டர் மெஸ்சிங் என்ற ஒரு விஞ்ஞானி இமயமலைக்கு வந்து ஒரு சித்தரிடம் "காடலெப்சி"க்கான பயிற்சிபெற்று, தம் அனுபவத்தை எழுதியிருக்கிறார். ஆங்கில நூல்களில் இது ஒரு புகழ்மிக்க வரலாறாகக் கருதப்படுகிறது.

'அனிமேஷன்' என்று அழைக்கப் பெறுகின்ற ஒரு உணர்வற்ற நிலையிலிருந்து சற்று மாறுபட்டு, அதே சமயம் உடல் உணர்வுகள் மட்டும் இல்லாமல், மூச்சு மட்டும் இழைகிற ஒரு மயக்க நிலை சித்தர் இலக்கியங்களில் பேசப்படுகிறது. இந்த ஆற்றலுக்கு 'ஸஜஸ்டீவ் அனீஸ்தீசியா' என்று பெயர். இதனை பல்கேரியா போன்ற நாடுகளில் 'ஸஜெஸ்டாலஜி' என்றும் அழைக்கிறார்கள். இந்த நிலைக்கும் 'ஹிப்னோசிஸ்' என்ற மயக்க நிலைக்கும் ஒரு வேறுபாடு உண்டு. 'ஹிப்னோசிஸ்' என்பது மனம் உடலிலிருந்து வேறுபட்டு வேறொரு மண்டலத்திலிருநது இயங்குகிற நிலை. ஆனால் 'ஸஜெஸ்டாலஜி' நிலையில் மனம் தனது உணர்ச்சிக்குள்ளிருந்து விடுபட்டு, ஓரறையில் சென்று அமர்ந்து விடுகிறது. இதனால் உடலின் நோவுகள் தெரிவதில்லை. இந்த ஆற்றல் வளர்த்துக் கொள்வதால் யோகிகள் உடலின் பசியோ, தூக்கமோ அல்லது பிற வேதனைகளோ தங்களைத் தாக்காதவாறு ஒரு மனத்தோடு தங்கள் தவநிலையிலே இடையீடின்றி



படிப்பகம்

www.padippakam.com

இருந்து விடுகிறார்கள். இந்த ஆற்றலை போகர் பயன்படுத்தி சில அறுவை சிகிச்சைகளை ஆற்றியதாக வரலாறு கூறுகிறது.

தனிமனிதனுடைய உடம்பையும் உள்ளத்தையும் இப்படி ஆராய்ந்த முறைகளைப் போலவே, தனிமனிதனையும், இந்தப் பேரண்டத்தையும் இணைக்கிற வகையில் சில ஆற்றல்களை நமது சித்தர்கள் வளர்த்துள்ளார்கள் என்பதையும் சித்தர் இலக்கியங்களிலே அறிகிறோம். அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்று ஒரு சித்தர் மொழி வழங்குகிறது. புறமும் அகமும் ஒரே அமைப்பில் உள்ளன என்ற அடிப்படை உண்மையை இந்த சித்தர் மொழி கூறுவதோடுகூட, ஓர் அமைப்பின் மாற்றத்தில் மற்றொரு அமைப்பும் தானாக மாறிவிடுகிறது என்ற பேருண்மையையும் இது எடுத்துக்காட்டுகிறது. இந்த உண்மையை மார்க்சீயம் எடுத்துக் காட்டியிருக்கிறது. இதனை 'சிம்பதெடிக் வைப்ரேஷன்' என்று சொல்வார்கள். அண்டத்தையும் பிண்டத்தையும் ஆராய்ந்தறிந்தவர்கள் நமது சித்தர்கள். இந்த அறிவியல் துறைக்கு வெளிநாட்டினர் 'காஸ்மோ பயாலஜி' என்று பெயரிட்டிருக்கிறார்கள். சித்தர்களின் ஜோதிட இயலிலே குறிப்பிட்டுள்ள பல பேருண்மைகளுக்கு இந்தக் 'காஸ்மோ பயாலஜி' என்ற அறிவியல் துறை உறுதியோடு சான்று பகர்கிறது.

வெளிநாடுகளில் மற்றொரு ஆராய்ச்சி 'ஆபரேடீவ் ரெஸ்ட் ஆப் தி மைன்ட்' என்ற மனோதத்துவத் துறையாகும். மனத்தை நீண்ட பயிற்சியின்மூலம் ஒருவகையான உறக்கத்துக்கு உள்ளாக்குவதே இந்த 'ஆபரேடீவ்ரெஸ்ட்' என்பது. அறிதுயில் என்றும் தூங்காமல் தூங்குவது என்றும் சித்தர்களால் இந்த நிலை அழைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிதுயில் மூலம் கல்லாமலே கற்றுக் கொள்வதும், முயலாமலே முயற்சி கைகூடுவதும் நிகழ்கின்றன என்பதை ருஷ்ய நாட்டு ஆய்வு நூல்கள் கண்டு சொல்லியுள்ளன. இதனைத்தான் நமது சித்தர்கள் 'காணாத கண்' என்றும், கேளாத செவியென்றும் மற்றும் பலவிதமாகவும் தங்கள் இலக்கியங்களிலே கூறியுள்ளார்கள். மற்றொரு பெரிய ஆராய்ச்சி, பரு உடம்மைச் சுற்றியுள்ள நுண் உடம்பாகிய ஒளி உடம்பைப் பற்றியதாகும். வெளிநாடுகளிலே இதற்கு 'ஈ தெரிக் டபிள்' என்று அழைக்கிறார்கள்.

உடம்பையும், உள்ளத்தையும், ஆன்மாவையும் ஆராய்கின்ற சித்தர் இலக்கியங்கள் ஒளியுடம்பைப் பற்றிய நுட்பங்களைச் சொல்லியுள்ள முறை அறிவியலுக்கு ஒத்ததாக அமைந்துள்ளது.

இவை பற்றியெல்லாம் ஆராய்ந்து வெளிக்கொணருவதே தமிழாய்வின் நோக்கமாக இருக்கவேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com

# இந்திரா பார்த்தசாரதியின் நாடகங்கள்

- *அ. ராமசாமி, தமிழியல்துறை,*
ம.சு. பல்கலைக் கழகம், திருநெல்வேலி - 607 012

இந்தியாவில் இலக்கியவாதிகளுக்கு வழங்கப்படும் அதிகத்தொகை கொண்ட விருது 'சரஸ்வதி சம்மான்' விருது. தான் எழுதிய 'ராமானுஜர்' நாடகத்திற்காக அந்த விருதினைப் பெற்ற தமிழ் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி. நாடகத்துறை சார்ந்த பரிசுகள், அதிகார மையங்களின் கவனிப்பு / அங்கீகாரம், சொல்லாடல் உருவாக்கம் என அனைத்து நிலையிலும் கவனம் செலுத்துபவர் இ.பா., என்றாலும் தமிழ்வாசிப்பு மனஉலகம் அவருக்குத் தந்துள்ள அடையாளம் 'நாடகாசிரியன்' என்பது அல்ல; புனைகதை ஆசிரிய அடையாளம்தான். இ.பா. எழுதியுள்ள 200க்கும் மேற்பட்ட சிறுகதைகள், 10-க்கும் மேற்பட்ட புதினங்கள், குறும்புதினங்கள், கட்டுரைத் தொகுப்புகள் உண்டாக்கியுள்ள விசாரணைகள் அவர் எழுதியுள்ள 14 நாடகங்களின் விசாரணைகளைவிடக் காத்திரமானவைகளாக இருக்கலாம். புனைகதைகளில் குறிப்பான அடையாளத்தை மையப்படுத்தாத இ.பா., நாடகங்களில் விலகிவிடாத அடையாளங்கொண்ட நாடக ஆசிரியர் என்றாலும் நாடகாசிரியர் அடையாளம் முன்னுரிமை பெறாமல் போவதற்கு இ.பா. மட்டுமே காரணமா? அல்லது தமிழ்வாசிப்பு உலகம் - பத்திரிகை சார்ந்த வாசிப்பு உலகமும், கல்வித்துறை சார்ந்த வாசிப்பு உலகமும் - நாடக இலக்கியத்திற்கு இரண்டாம் நிலை இடத்தைத் தருவது காரணமா? இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழில் நாடக இலக்கியம் போதிய கவனம் பெறாமல் போவதற்கான அகக் காரணிகளும் புறக்காரணிகளும் என்னவாக இருக்கும் ...? அதிலும் நவீனநாடக மேடையேற்றங்களும், அதற்கான பிரதிகளும் வாசகனிடமும் பார்வையாளனிடமும் கவனம் பெறாமல் விலகி விடுவதற்கான காரணங்கள் என்னவாக இருக்க முடியும் ...? இப்படியான கேள்விகளின் பின்னணியில் எழுதப்படும் கட்டுரை இது. இந்திரா பார்த்த சாரதியின் நாடகப் பிரதிகள் இந்தக் கேள்விகளின் பின்னணியிலிருந்தே மதிப்பிடப்படுகின்றன.

இந்திரா பார்த்தசாரதி எழுதி அச்சுவடிவம் பெற்றுள்ள நாடகங்கள் 14. அவற்றுள் பசி, மழை, கால இயந்திரங்கள் என்ற மூன்றும் ஒரு தொகுதியாகவும், ஔரங்கசீப், கோயில், போர்வை போர்த்திய உடல்கள், நந்தன் கதை என்ற நான்கும் ஒரு தொகுதியாகவும், கொங்கைத்தீ, ராமானுஜர், இறுதியாட்டம் ஆகியன தனித்தனி நூலாகவும் வெளிவந்துள்ளன. இன்னும் பெறாமல் நான்கு


படிப்பகம்

www.padippakam.com

பிரதிகள் உள்ளன. இந்தியா டுடே இலக்கிய மலர்களில் வந்துள்ள மூன்று பிரதிகளுடன் அவரது 'அற்றது பற்றெனில்' என்கிற கதை 'வீடு' என்ற நாடகமாக எழுதி மேடையேற்றம் பெற்றுள்ளது.

## இ.பா. நாடகங்களின் பின்னணிகள் :

பெரும்பான்மைத் தமிழ்வாசிப்பு மனஉலகம், வெறும் கருத்து சார்ந்த விவாதங்களை எழுப்பும் எழுத்துப் பிரதிகளைத் தொடர்ந்து நிராகரிக்கும் இயல்புடையதாக இருக்கிறது. பாத்திரம்சார்ந்து இயங்கும் படைப்புகளை உள்வாங்கி விவாதிக்கத் தயாராக இருக்கிறது. இந்தக் கூற்றிற்கு ஆதாரமாகப் புனைகதைகளுக்குக் கிடைக்கும் கவனிப்பு X நிராகரிப்புகளைக்கூட உதாரணங்களாகக் கூறலாம். நடப்பு வாழ்க்கை சார்ந்த சுந்தரராமசாமியின் புளிய மரத்தின் கதை பெற்ற கவனம், கருத்துலகம் சார்ந்த ஜெ.ஜெ. சில குறிப்புகள் பெற்றதில்லை. தன்னுடைய கருத்துக்களின் பிரதிநிதிகளான கதாபாத்திரங்களை உலவவிடும் ஜெயகாந்தனின் பிரதிகள் கவனிக்கப்பட்ட அளவிற்கு பாத்திரங்களுக்கு முக்கியத்துவம் தராமல் கருத்துக்களுக்கு / சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பிரதிகள் (நகுலன், க.நா.சு. அசோகமித்திரன்) போன்றவர்களின் பிரதிகள் கவனிக்கப்பட்டதில்லை. சமீபத்திய உதாரணங்கள் நிறைய உள்ளன.

இந்திரா பார்த்தசாரதியின் எழுத்துகளுக்குள்ளேயே இரண்டுவிதப் பின்னணிகள் உள்ளன. அந்த இரண்டுவிதப் பின்னணிகளும் கொண்ட புனைகதைகளும் உள்ளன. நாடகங்களும் உள்ளன என்றாலும் இ.பா.வின் புனைகதைகள் பெரும்பாலும் கதாபாத்திர மையங்கள் கொண்டன; நாடகங்கள் பெரும்பாலும் கதாபாத்திரங்கள் சாராமல் விவாதப் பொருள் சார்ந்து இயங்கும் தன்மையன எனக் கூறலாம். இதனைக் குறிப்பாகச் சொல்வதானால் புனைகதைகள், நவீனத்துவத்தின் தொடக்கநிலைப் பின்னணிகளைக் கொண்டன எனவும், நாடகங்கள் நவீனத்துவத்தின் பிந்தைய நிலைப் பின்னணிகளை யுடையன எனவும் கூறலாம்.

18-ஆம் நூற்றாண்டில் தொடங்கிய நவீனத்துவ வாழ்க்கைமுறை, சில பல படிநிலைகளைத் தாண்டி, பின்நவீனத்துவ கட்டத்திற்குள் நுழைந்துவிட்டது. நவீனத்துவத்தின் படிநிலைகளும் அதற்கு முரணான பின்நவீனத்துவ மனமும் ஐரோப்பியர்களுக்குரியது; இரண்டு உலகப் போர்களைச் சந்தித்த மனிதர்களுக்குரியது; இந்தியர்களுக்குரியது அல்ல என்று போகிற போக்கில் புறங்கையால் தள்ளிவிட முடியாதபடி மாற்றங்கள் வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன. தகவல்கள் சார்ந்து இயங்கத் தயாராகிவிட்ட தமிழ்மனம், இன்னும்

 படிப்பகம்

www.padippakam.com

நவீனத்துவத்திற்குள்ளேயே நுழையவில்லை என்பதெல்லாம் சுயஏமாற்றம் மூலம் தப்பிக்க நினைப்பதன் விளைவுகள்தான். அதிகார மையங்களில் இடம் பிடிப்பது மட்டுமே காரணங்களாகிவிட்ட தேர்தல் கூட்டணிகளைப் பின்நவீனத்துவ வெளிப்பாடு என்று புரிந்து கொள்ள மறுத்தால், இழப்பு யாருக்கு என்று சொல்ல முடியும் ..?

மதம், வர்க்கம், சாதி, அரசு, குடும்பம் முதலான நிறுவனங்கள் சார்ந்த பாரம்பரிய மதிப்பீடுகள் (Traditional Values) மீது கேள்விகளை முன்வைத்த நவீனத்துவத்தின் தொடக்கம் கேள்விகளை எழுப்பியது. அதன் அடுத்த வளர்ச்சி வினாக்களோடு மாற்றுகளை முன்வைத்த கட்டம். 'இருக்கிற அமைப்பு, பாதிக்கப்படுகிறவர்களின்மீது ஆதிக்கம் / அதிகாரம் செலுத்துவதாக இருக்கிற; அனைவருக்குமானதாக இல்லை' எனக்கூறி, மாற்று அமைப்புகளை - அவ்வமைப்புகள் முன்வைக்கப் போகும் சாராம்சமான மதிப்பீடுகளை - புதிய கலாச்சாரக் கூறுகளை - முன்வைத்தது. நம்பிக்கைகளைப் பதிலீடு செய்ய வந்த அறிவு, 'மனிதாபிமானம், நலிந்தோர் சார்பு, உழைப்பவர்களின் தோழன், ஒடுக்கப்படுவோர் பக்கம், அடிமைப்படும் பெண்களுக்குச் சமத்துவம் என்ற சாராம்ச மதிப்பீடுகளை முன்வைத்தது. நவீனத்துவத்தின் இவ்விரண்டாவது கட்டத்தின் வெளிப்பாட்டு முறையாக யதார்த்தவாதம் இருந்தது. தனக்குள் பல்வேறு வேறுபாடுகள் கொண்டதாக யதார்த்தவாதம் காட்டிக் கொண்டாலும் அதன் சாராம்சமான பொதுஅம்சம் மாற்று (Alternate) ஒன்றை முன்மொழிவது என்பதைக் குறிப்பிடலாம். சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதிய இப்சன், செக்காவ், பிராண்டெல்லோ, யூஜின்ஒநீல், பெர்ட்டோல்ட் ஃபிரக்ட் முதலான நாடகாசிரியர்களின் நாடகங்கள் எல்லாம் அத்தகையன. தமிழில் திராவிட இயக்க நாடகங்களும் இடதுசாரி நாடகக்காரர்களான அறந்தை நாராயணன், கோமல்சுவாமிநாதன் போன்றவர்களின் நாடகங்களும் அத்தகையனவே. அவர்களின் பிரதிகள் மாற்றுகளை முன்வைத்துப் பயணம் செய்யும் பிரதிகளாகவே இருந்தன. இரண்டு உலகப் போர்களையும் கண்ட நவீனத்துவம் மாற்றுக்களைக் குறித்துப் பரிசீலனையில் இறங்கியது. 'இதுதான் மாற்று' என்று இனங்காட்டிவிட முடியாத குழப்பம் நிகழ்கிறது என்று கருதிய நாடகாசிரியர்கள் தனிமனிதனின் இருப்பும், மாற்றங்களாக நினைத்துச் செய்த பயணங்களின் அபத்தமும், நம்பிக்கைகளின் மீதான தகர்வுகளும் குறித்துப் பேசத் தொடங்கினர். மாற்றுகளை - மாற்றங்களைச் சரியாக அடையாளங் காட்டுவது சாத்தியமில்லை என்று உறுதியாகச் சொன்ன பின் நவீனத்துவத்திற்கு முந்திய காலகட்டம் இது. இக்கால கட்டத்து நாடகாசிரியர்களாக - குழப்பங்களையும் இருப்பையும் நம்பிக்கையின்மையும் பேசிய நாடகங்களை - அயனெஸ்கோ, சாமுவேல் பெக்கெட், ஜான்-பவுல்-



படிப்பகம்

www.padippakam.com

சார்த்ரே போன்றோர் எழுதத் தமிழிலும் அவை புதுவரவுகளாகின. இந்திரா பார்த்தசாரதியும் ந. முத்துசாமியும் அப்படி மாறியவர்களே. இ.பா.வின் தொடக்கநிலை நாடகங்களான மழை, பசி, போர்வை போர்த்திய உடல்கள், கோயில், கால எந்திரங்கள் போன்றவற்றிற்கு நவீனத்துவத்தின் பிந்திய காலகட்டத்து மனநிலையே காரணம் எனலாம். அந்நாடகங்களில் மரபின் மீதான கேள்விகளை எழுப்பி, விசாரணை செய்யும் கதாபாத்திரங்கள், புதிய வாழ்க்கை முறைக்குள் நுழைந்துவிடத் தயங்குவதை நாம் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம்.

'ஸ்ரீராமஜெயம்' எழுதுவதில் நம்பிக்கையற்று, 'ஸ்ரீநாய்ஜெயம்' எழுதுவதாக மாறும் அவளும், அவளருகில் இருக்கும் அவனும் வாழ்தலில் சலிப்படைந்தவர்கள் (பசி). தங்களுக்கு ஏற்பட்ட சலிப்பு போலவே ராமனுக்கும் சீதைக்கும்கூடச் சலிப்பு, ஏற்பட்டிருக்கக்கூடும் எனப் பேசிக் கொள்ளும் பசியின் அவனும் அவளும் நாயும் கவனிக்கப்பட வேண்டியவர்கள்.

அவள் : ராமனைப் பார்த்து சீதைக்கு அலுத்துப் போயிருக்கும்.
அவன் : சீதைக்கு சீதையாகவே இருந்து அலுத்துப் போயிருக்கலாமே.
அவள் : ஏய் ... நான் தான் ராமன்.
அவன் : அப்போ ... நாய்க்குட்டியே தேவலை.

என்ற வசனங்கள் தரும். எழுப்பும் பிரச்னைகள் அதுவரைத் தமிழில் சொல்லாடல்கள் ஆகாதவை. விபசாரத் தொழிலில் ஈடுபட்ட வசந்தியின் நிகழ்காலமும் இறந்தகாலமும் அவளுக்கு உண்டாக்கிய குற்ற உணர்வைவிடக் கூடுதலான குற்ற உணர்வுகள் கொண்ட மனிதர்கள்தான் அவளோடு உறவுகொண்ட ராமகிருஷ்ணன், மூர்த்தி, ராஜீ, மாத்ருபூதம், ரமேஷ் என்பதான ஆண்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் சொந்த முகத்தை மூடிக்கொள்ள போர்வைகள் உண்டு என்று பேசும் 'போர்வை போத்திய உடல்களும்', தந்தைமகள் என்கிற மரபான உறவும், (சந்திரசேகரன் - நிர்மலா) நிர்மலா - ஜேம்ஸ் இடையிலான காதலி - காதலன் எனும் புதுவகை உறவும் சுயநலம் சார்ந்ததாகவும் போட்டுக் கொண்ட முகமூடிகளுக்குக் கட்டுப்பட்டதாகவும் மட்டுமே மனிதர்களை இயங்கச் செய்கிறது எனச்சொல்லும் 'மழை' நாடகமும் எழுப்பும் சொல்லாடல்கள் தமிழில் அதற்குமுன் மாதிரிகள் இல்லாத நாடக எழுத்துக்கள். இந்த வகைக்குள் காலயந்திரங்கள், கோயில், தீர்வு முதலான நாடகங்கள் அடங்கும். தனிமனித மனம் சார்ந்து எழுப்பப்படும் விசாரணைகளுக்குப் புறஉலகம் உண்டாக்கி வைத்துள்ள இறுக்கமான மதிப்பீடுகள் உரைகல்லாக இருப்பதை இந்நாடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன.


படிப்பகம்

www.padippakam.com

இ.பா.வின் புகழ்பெற்ற நாடகங்களாகவும் மேடையேற்றங்கள் பல கண்டவைகளாகவும் உள்ள ஔரங்கசீப், நந்தன் கதை, கொங்கைத் தீ, இறுதியாட்டம், ராமானுஜர் முதலான நாடகங்களுக்கு ஒரு பொதுத்தன்மை உண்டு. பழைய கதாபாத்திரமொன்றின் மேல் அல்லது நிகழ்வின் மேல் நம் காலத்துப் புரிதல்களுடன் கூடிய விளக்கம் கொண்டு எழுதிப் பார்ப்பது என்பதுதான் அந்தப் பொது அம்சம். இப்படி எழுதிப் பார்க்கும் படைப்பாளி, இலக்கியப் படைப்பை 'வாழ்ந்த அனுபவம் கொண்டு' கருத்துக்களை உருவாக்கிக்காட்ட முனைவன் அல்ல என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். 'ஒரு கதாபாத்திரம் இப்படி வாழ்ந்தது' என்று விவரித்துக் காட்டி அதன் வழியாகப் பெறப்படும் 'அனுபவம் சார்ந்த கருத்து வெளிப்பாடு' யதார்த்தவாத எழுதின் நோக்கமும்கூட. அவ்வகை எழுத்துக்கள் கதாபாத்திரம் வாழ்ந்த சூழலுக்கு முக்கியத்துவம் கொடுப்பன. இ.பா. வின் நந்தன், ஔரங்கசீப், கண்ணகி, மாதவி, ராமானுஜர் ராஜசிம்மன் (இறுதியாட்டம்) முதலானவர்களுக்குத் தாங்கள் வாழநேர்ந்த சூழலைவிடவும் அவர்களின் கருத்துக்கள் முக்கியம். தாங்கள் வாழ நேர்ந்த சூழலை மாற்றத் தக்க கருத்துக்கள் கொண்டவர்களாக நம்புபவர்கள் அவர்கள். அந்த நம்பிக்கையின் தீவிரத்தோடு பிறமனிதர்களை அணுகி, மாற்ற நினைத்துத் தோற்றவர்களும்கூட. நாடக எல்லைக்குள் சாதி ஏற்றத்தாழ்வு எனும் கெட்டியான நிறுவனம் வென்றிருக்கலாம்; ஆனால் நந்தனும் ராமானுஜனும் கொண்டிருந்த கருத்துக்களும் நம்பிக்கைகளும் அவை சார்ந்த பயணங்களும் வெற்றியடைந்திருக்க வேண்டியவை என்பது நாடகாசிரியர் இ.பா. முன்வைக்கும் விருப்பம். அதேபோல் ஔரங்கசீப், (இறுதியாட்டத்து) ராஜசிம்மனின் கதாபாத்திரங்களின் செயல்பாடுகள் நகைப்புக்குரியனவாக - உலக நடப்புகளோடு ஒத்துப் போகாதவைகளாகத் தோன்றலாம். ஆனால் அவர்கள் உள்நோக்கமின்றி, தங்கள் மனம் சரியெனச் சொன்னதன் பேரில் செயல்பட்டவர்கள் எனக்காட்ட முயல்வது இ.பா.வின் எழுத்து நோக்கம். கொங்கைத்தீயின் கண்ணகியும் மாதவியும்கூட தங்கள் மனம்சார்ந்த விருப்பங்களுக்கேற்பக் கோவலனைப் பயன்படுத்தியவர்கள் என்பதையே இ.பா. காட்ட விரும்புகிறார் என்பதற்கு நாடகப் பிரதிக்குள் ஏராளமான சான்றுகள் கிடைக்கின்றன. கண்ணகிக்கு வேண்டியது 'அருந்ததி நட்சத்திர' அந்தஸ்து. மாதவி விரும்புவது, "காதலனுக்கு நிலாமுற்றத்தில் கலவியும் புலவியும் அளித்தல்". அந்தப் பெண்கள் தங்களுக்கான கதாபாத்திரங்களை தாங்களே தேர்வு செய்துகொண்டவர்கள். அதற்கு உதவியவன் கோவலன்; ஒரு கருவியாக. அக்கருவியை இல்லாமலாக்கிய நெடுஞ்செழியன் மீது அவர்களுக்குக் கோபம் எழும்பியது அவர்கள் சார்ந்த நியாயம்தான் என்பதாக இ.பா. அந்நாடகத்தைப் படைத்துள்ளார் எனலாம்.

www.padippakam.com

பொதுப்புத்தி சாராத நவீன மனிதன், புறக்காரணிகளை ஒதுக்கிவிட்டு, தன் மனம் சார்ந்து - நம்பிக்கை சார்ந்து இயங்குபவன் என நம்பும் இ.பா. வரலாற்றுக்கதாபாத்திரங்களான ஔரங்கசீப், ராமானுஜர், ராஜசிம்மன் போன்றவர்களும், புராண, காப்பிய கதாபாத்திரங்களான நந்தன், கண்ணகி, மாதவி முதலானவர்களும் அவ்வாறு இயங்கியவர்களே எனக் காட்டுகிறார். அவர்களுக்கு நேர்ந்த தோல்விகள் போலவே, இன்றும் சிந்திக்கின்ற நவீனமனிதனுக்கு - வழிகாட்ட முயல்கின்றவனுக்கு தோல்விகள் நேரக்கூடும் என்ற எச்சரிக்கை இந்நாடகங்களின் மறுதலையான நோக்கமாக இருக்கக்கூடும்.

இத்தகைய எச்சரிக்கைகளை முன்வைத்த இ.பா.-வின் நாடகங்கள் தமிழில் முன்மாதிரியில்லாதனதான். ஆனால் ஔரங்கசீப் நாடகத்திற்கு துக்ளக்கும், கொங்கைத்தீயிக்கு நாக மண்டலமும், ராமானுஜருக்கு தலதண்டா (பலிபீடமும்)வும் முன்மாதிரிகளாக இருந்தன என்பது உண்மை. இம்மூன்றுமே கன்னட நாடக ஆசிரியரும் இந்திய நாடகத்தின் கூறுகளை உலகவாசர்களுக்கு எடுத்துச் சென்றவருமான கிரிஷ்கர்னாடின் நாடகங்கள். இ.பா.வின் நந்தன் கதைக்கு விஜய்டெண்டுல்கரின் 'காசிராம் கோட்வாலும்', இறுதியாட்டத்திற்கு 'கரம்வீர் பாரதி'யின் அந்தாயுக் (இருள்யுகம்)கும் முன்மாதிரிகளாகச் சொல்லப்படலாம்.

இப்படிச் சொல்வதன் மூலம் அவைகளின் அசலான பிரதிகள் எனக்கொள்ள வேண்டியதில்லை. வடிவநிலையிலோ, பாத்திர உருவாக்க நிலையிலோ, எழுப்பிய விசாரணைகள் அளவிலோ இந்நாடகங்கள் இ.பா.விற்கு முன்மாதிரிகளாக இருந்திருக்க வாய்ப்புண்டு என்றாலும் தமிழில் இவைதான் முன் முதல் படைப்புக்கள்.

***- 21.03.01 அன்று பாரதியார் பல்கலைக் கழகம், கோவை, நடத்திய 'தமிழ் நாடகம் : நிகழ்வும் போக்கும்' எனும் கருத்தரங்கில் வாசிப்பதற்காக எழுதப்பட்ட கட்டுரை.***

www.padippakam.com

# புது உலகப் பெண்கள்

*- ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்*

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பது முதுமொழி. நான் ஒரு விதத்தில் ஆசிரியை. எதிர்காலச் சந்ததியின் வளர்ச்சியின் பல கட்டங்களைப் பல பரிமாணங்களை எடுத்து விளக்கி எதிர்காலக் குழந்தைகள் ஒரு நல்ல சமுதாயத்தைப் படைக்க வேண்டும், நல்ல மனித நேயத்தை உருவாக்க வேண்டும் என்பது எனது தொழிலின் தாரக மந்திரம்.

எனது தொழில் குழந்தை நல முன்னேற்றத்துக்கு ஆலோசனை சொல்வதாகும். ஆங்கிலத்தில் Health Promotion Advisor for Pre-School Children என்பார்கள். இதை ஒரு தொழிலாக இல்லாமல் ஒரு ஆத்மீகப் பணியாக நினைப்பதில் பெருமைப்படுகிறேன்.

ஒரு மனிதனின் எதிர்காலம் அவனின் முதல் ஐந்து வருடங்களில் அத்திவாரம் போடப்படுகிறது. 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்றும் 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்றும் எங்கள் தமிழ்ச்சமுதாயத்தில் பல பழமொழிகள் உள்ளன. இவை இந்தப் புது உலகத்திற்கும் பொருத்தமானவை. அந்த அதிமுக்கியமான காலகட்டத்தின் வெற்றியும் சிறப்பும் அந்தக் குழந்தையைப் பார்க்கும் தாய் தகப்பனிற் தங்கியிருக்கிறது. ஒரு காலகட்டத்தில் குழந்தைகள் ஒரு சமுதாயத்தின் சொத்தாக இருந்தார்கள். அவர்களின் உடல் உள நலன்கள் அந்தச் சமுதாயத்தின் கடமையாக இருந்தது. பின்னர் சொத்து உரிமை குடும்ப அமைப்புக்கள் விரிவடையத் தொடங்கியதும் குழந்தைகளும் மனைவியும் ஒரு தனிமனிதனின் உடமையாக்கப்பட்டார்கள்.

ஒரு ஆண் தனக்குள்ள உடமைகளில் மனைவியும் அவள் கடமைகளும் முக்கியமானதாகக் கருதப்படுவதற்குப் பெண்களின் பொருளாதாரச் சுதந்திரமின்மையே காரணமாகும். நாடோடிகளாக - கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த காலத்தில் உழைப்புக்குரிய எதிர்காலச் சந்ததியினரைப் படைக்கிறாள் என்ற காரணத்திற்காக பெண் அந்தக் குழுவினரால் மிகவும் மதிக்கப்பட்டாள். அந்தக் கௌரவத்தின் பிரதிபலிப்பு உலகில் எந்த மூலையிலும் பரவியதாய் இருந்தது.

விவசாய உற்பத்தியும் நில உடமையும் முக்கியத்துவம் பெற்றபோது ஆணின் ஆதிக்கம் பரவியது. அவன் ஆதிக்கத்தில் அவன் மனைவியும் குழந்தைகளும் உடமையானார்கள். மனைவியின் கடமை கணவனின் சுக துக்கங்களைப் பேணுவதிலும் அவன் வாரிசான

www.padippakam.com

குழந்தைகளை அதிலும் ஆண் குழந்தைகளைப் பேணுவதிலும் முக்கியத்துவம் பெற்றது.

நில உடமைச் சமுதாயம் வளர்ந்து 'ஆட்சி' முறை பிரபலப் படுத்தப்பட்ட காலத்தில் பெண்கள் ஒரு அரசின் உடமையானார்கள். சிறை பிடிக்கப்பட்ட ஒரு சமுதாயத்தில் பெண்களின் நிலை மிக மோசமாக இருந்தது. இன்று பல காரணங்களால் நாட்டுக்கு நாடு புலம் பெயரும் பெண்களின் நிலையும் பழைய காலக் கொடுமைகளை நினைவுபடுத்துகின்றன. சமுதாயக் கொடுமைகள் பெண்களைப் பகடைக் காய்களாக்குகின்றன.

பெண்களைப் பாவித்து அரசியல் வெற்றிகளை நாடலாம் என்று கண்டவர் மௌரிய காலத்தில் வாழ்ந்த தீர்க்கமான அரசியல்வாதியான சாணக்கியராகும். சாணக்கிய தந்திரத்தில் பெண்கள் உளவு பார்க்கும் வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டார்கள். அந்த வேலையில் அவர்களின் உடம்பு மூலதனமாக்கப்பட்டது. அந்த 'விபச்சார'த் தொழிலில் அகப்பட்டுக் கொண்ட பெண்களுக்கு குடும்ப, சமுதாய அந்தஸ்து ஒழிந்தது.

அதன் வளர்ச்சியாக, அரசியல், மதத் தலைவர்களை மகிழ்விக்க 'தாசிகள்' உருவாக்கப்பட்டுப் பெரிய மனிதர்களின் பொதுச் சொத்தாக்கப்பட்டார்கள்.

கலைகள் காமத்தைத் தூண்டும் ஆடல் பாடல்களுடன் இணைந்து பெண் உடம்பை விலை பேசியது. இன்று உலகமெங்கும் பசி பட்டினியால் வாடும் குழந்தைகளும் பெண்களும் ஆண்கள் என்ற தரகர்களால் நரகத்தில் தள்ளப்படுகிறார்கள். பொருளாதார வசதியற்ற தாய்களின் நிலை மிகப் பரிதாபமானது.

இன்றைய உலகில் தொழில் வளர்ச்சியற்ற நாடுகளில் பெண்கள் உடம்பு மிகவும் சிறந்த மூலதனமாகப் பாவிக்கப்படுகிறது. இதனால் வரும் லாபம் கோடான கோடியாகும். குழந்தைகளுக்குச் சாப்பாடு போட கிழக்கு ஐரோப்பாவிலிருந்து லண்டனை நாடுகிறார்கள் பல தாய்மார்கள். முதலாளித்துவம் வளர்ந்து பெண்களுக்குப் பொருளாதார சுதந்திரம் வந்தால் பெண்கள் தங்கள் உடம்பை மூலதனமாக்கும் முயற்சியை எடுக்கமாட்டார்கள் என்று ஒரு காலத்தில் நம்பினார்கள்.

மேற்கு நாடுகளில் மிகவும் சிறப்பான முறையில் மிகவும் நாகரீகமான முறையில் நடக்கும் வியாபாரத்தில் விபச்சாரமும் ஒன்று. இன்று லண்டனில் உள்ள விபச்சார விடுதிகளை நிரப்புபவர்கள் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பெண்களும் உடை பட்டுப்

www.padippakam.com

போன ரஷ்ய நாட்டைச் சேர்ந்த இளம் பெண்களுமாவர். இவர்களில் பல தாய்களுமுண்டு.

ஒருகாலத்தில் மேற்கு நாட்டார் தங்கள் காம இச்சைகளை நிறைவேற்ற தொழில் வளர்ச்சியற்ற மூன்றாம்தர நாடுகளை நாடினார்கள். இன்று பசி பட்டினியால் வாடும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த போலந்து, ஹங்கேரி, கொசாவா, செக்கோசலவாகியா போன்ற நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான பெண்கள் லண்டனின் பிரகாசமான விளக்குகளை நாடிவரும் விட்டிற் பூச்சிகளாக மாறுகிறார்கள். தனியாக வருவதால் ஆண்களின் (தரகர்களின்) பிடிக்குள் அகப்படுகிறார்கள். 1974-ல் விட்டிற் பூச்சிகள் என்ற சிறுகதை எழுதுவதை என்னிடம் வேலை செய்ய வந்த ஒரு முஸ்லீம் இளம் பெண் - மத்திய தரை நாட்டைச் சேர்ந்தவள் தூண்டினாள். அந்தப் பரிதாபம் இன்னும் தொடர்கிறது. தாய்மை விலை பேசப்படுகிறது.

தாய்மையின் புனிதமான பரிமாணங்கள் சின்னா பின்னமாக்கப்படுகின்றன. இதை எதிர்த்து எழுதுபவர்கள், பிரசாரம் செய்பவர்களின் பலர் முற்போக்கான ஆண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில் பிரகாசமான வாழ்க்கைக்காக, சுதந்திரமான வாழ்க்கைக்காக, அரசியல் பிரச்சினைகளிலிருந்து தப்புவதற்காக ஆங்கிலேய நாட்டில் புகலிடம் பெற்ற குடும்பங்கள் கூடுகள் கலைக்கின்றன. பழைய நம்பிக்கைகள் அடக்குமுறைகள் தறிகெட்டுப் போகின்றன.

எனது தொழிலில் உலகத்தைச் சேர்ந்த பெரும்பாலான இன மக்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு. நான் வேலை செய்யும் பகுதியில் 110 மொழிகளைப் பேசும் மக்கள் இருக்கிறார்கள். எத்தனையோ கலாச்சாரத்திலிருந்து வந்தவர்கள். எத்தனையோ மத நம்பிக்கைகளில் தங்கள் வாழ்க்கைப் பிரயாணத்தை நிர்ணயித்தவர்கள்.

ஆனால் லண்டன் வந்ததும் ஆயிரக்கணக்கான வருடங்களாகப் பேணிவந்த கலாச்சாரப் பின்னல்கள் கிழிகின்றன. மத நம்பிக்கைகள் உடைகின்றன.

மிகவும் பலம் வாய்ந்த ஆங்கிலேயச் சமுதாயத்தின் வாழ்க்கை முறையில் தங்களை புதைத்துக் கொண்டு இரண்டும் கெட்டான் வாழ்க்கை வாழ்ந்து நிம்மதியற்றுத் திரியும் பெண்களை அடிக்கடி சந்திக்கிறேன். பெரும்பாலோனோர் தங்கள் 'சுயமை' தேடுபவர்களாக இருக்கிறார்கள். "கிழக்கு நாடு தந்த ஆத்மீகச் சக்தியோடு மேற்கு நாடு தரும் பொருளாதாரச் சுதந்திரத்தையும் பிணைத்துக் கொண்டு சமுதாய

www.padippakam.com

மேம்பாட்டுக்கு உழைக்கும் உங்களைக் காணச் சந்தோசப்படுகிறேன்" என்று சொன்னார். என்னுடன் பணிபுரியும் ஒரு சோமாலிய நாட்டைச் சேர்ந்த பெண் டாக்டர். நாங்கள் இருவரும் இளம்பெண்கள் அமைப்பில் வேலை செய்பவர்கள். இவர் தன் சமுதாயத்தில் இளம் தலைமுறை தங்களை மேற்கத்திய நாகரீகத்தில் பிணைத்துக் கொண்டு துன்பப்படுவதைத் துயரத்துடன் வெளியிட்டார். ஆனாலும் சமுதாய மாற்றத்தில் இந்தப் பூகம்பம் தவிர்க்கமுடியாதது. ஒரு குழந்தை சராசரியான மனித உணர்வுகளுடன், மனித நேயத்துடன் வளர பக்குவமான தாய்மை பலம் கொடுக்க வேண்டும்.

ஆனால் இன்றோ சில பெண்கள் பொருளாதாரப் பேராசையில் தங்கள் கடமையைச் சரிவரப் புரியாமல் என்னால் முடிந்தவரையும் உழைப்பேன், மற்றவர் மெச்சும்படி வாழ்வேன் என்று அடம் பிடிக்கிறார்கள். அவர்களை அப்படித் தூண்டுபவர்கள் அவர்கள் கணவர்களாக இருக்கிறார்கள்.

பொருளாதார சுதந்திரத்தில் அற்புதமான குழந்தைத்தனம் யாரோ முன்பின் தெரியாத ஆயாவால் (Baby Minders) சிதைக்கப்படுகிறது. அல்லது வேற்றுப்படுத்தப்படுகிறது. இதன் எதிரொலி தெரியாமல் எத்தனையோ பெற்றோர் தங்கள் பொருளாதார ஆசைக்குத் தங்கள் குழந்தையின் நலத்தைப் பணயம் வைக்கிறார்கள். அண்மையில் வெளியான ஒரு அறிக்கையின்படி ஆயாக்களால் அல்லது அன்னியர்களால் வளர்க்கப்படும் குழந்தைகள் பாசம் தெரியாதவர்களாக, பயந்தவர்களாக, படிப்பில் அக்கறை காட்டாதவர்களாக இருப்பதாகக் கூறப்பட்டது. அறிக்கைகளும் ஆராய்ச்சிகளும் எப்போதும் சரியான தகவல்களைத் தருவதில்லை என்றாலும் மேற்கண்ட கண்டுபிடிப்பில் ஓரளவாவது உண்மையிருக்கிறதா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

பெண் உடம்பும் உழைப்பும் காலத்திற்குக் காலம் வேறு வேறு காரணிகளைத் திசைதிருப்பப் பயன்படுகிறது. எப்படிப் பார்த்தாலும் ஆண்களின் சுகத்திற்கு லாபத்திற்கு, சொகுசான வாழ்வுக்கு, சமுதாய அங்கீகாரத்திற்காகத்தான் இதெல்லாம் திரிபுபடுத்தப்படுகிறது என்பது நன்கு சிந்தித்தாற் தெரியும்.

எங்கள் சமுதாயத்தை எடுத்துக் கொண்டால் பெண்களின் உடம்பு எப்போதும் அவர்கள் உடமையாக இருந்ததில்லை. ஆண்களின் தேவைக்கு, குடும்ப விருந்திற்கு, உற்றார் உறவினரைப் பராமரிப்பதற்கு, கலாச்சாரத்தை விளம்பரப்படுத்துவதற்கு சமயக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதற்கு என்றுதான் பாவிக்கப்பட்டது. கல்யாணம், விபச்சாரம் என்பதெல்லாம் பெண்ணின் முழுச் சம்மதத்துடன் நடக்காத விடயங்களில் சந்தர்ப்பங்கள், சுமைகள் என்பவற்றின் பிரதிபலிப்புத்தான் இவையெல்லாம்.

www.padippakam.com

இன்று புதிதாக முளைத்திருக்கும் புது விபச்சாரம் என்னவென்றால் 'மாடலிங்' என்பது. பெண் உடம்பைப் பலர் எடுத்து அந்த இச்சையில் பொருட்களை யாரோ தலையில் கட்டுவது. இதற்குப் பெயர் 'மாடலிங்' பார்ப்பவனின் காம இச்சைக்குத் தீனி போடுவது தான் இந்த மாடலிங்க!

இன்றைய தாய் தகப்பன்களில் 'ஒரு சிலர்' பெண் குழந்தை பிறந்ததும் அதன் அழகை வைத்து எதிர்கால சுபீட்சத்தை நிர்ணயிக்கிறார்கள். என் மகள் சமுதாய உணர்வுள்ள, மனித நேயமுள்ள, சுய சிந்தனையுள்ள, சுதந்திரப் போக்குள்ள பெண்ணாக வளர வேண்டுமென்பதைவிட என் மகளின் புன்சிரிப்பு, என் மகள் சிறு இடை, என் மகளின் நடை எனக்கு ஒரு பெரிய வீட்டைக் கட்ட உதவி செய்யும், பெரிய கார் வாங்க உதவி செய்யும் என்று பூரிப்பில் வாழும், தாய் தகப்பன் தன் குறிக்கோளையடைய 'எப்படியும்' பெண்களைப் பாவிக்கலாம் என்ற சாணக்கியனின் தந்திரத்தின் நவீன பிரதிபலிப்பு! இவர்கள் தாய் தகப்பன்களல்ல, தரகர்கள்.

இப்படிப் பார்க்கும்போது இங்கு வாழும் 'பெரும்பாலான' புலம் பெயர்ந்த பெண்கள் மனித நேயத்துடன் சுதந்திர சிந்தனையுடன் லண்டன் பல்கலைக் கழகங்களை நிறைக்கிறார்கள். அவர்களின் ஆரம்ப வளர்ச்சியின் ஆலோசகராக இருப்பதில் பெருமையடைகிறேன்.

❋❋❋

○ தன்மானம் உடைய தமிழாசிரியர்கள் மற்றும் தமிழ் விரிவுரையாளர்களுக்கு ஓர் வேண்டுகோள் தமிழ் உணர்வை மாணவர் நெஞ்சங்களில் மேம்படுத்தும் கடமையை நீங்கள் மேற்கொண்டிருக்கிறீர்கள். தற்பொழுது அரசை நம்பி தமிழைக் காக்கமுடியாது. தமிழகம் முழுவதிலும் உள்ள தாய்த்தமிழ் பள்ளிகள் அளவற்ற சிரமங்களுக்கு இடையில் தமிழையும், தமிழ் உணர்வையும் குழந்தைகளுக்குத் தருகிறார்கள். கைநிறைய ஊதியம்பெறும் நீங்கள் தாய்த்தமிழ்ப் பள்ளிகளைக் காக்கும் முறையில் ஆண்டுக்கு ரூபாய் ஆயிரமாவது தருவதன் மூலம் தான் உங்கள் தமிழ் உணர்வையும், தன்மானத்தையும் மெய்ப்பிக்க முடியும். அருள்கூர்ந்து இதை உடனடியாகச் செய்யுங்கள்.


படிப்பகம்

www.padippakam.com

# பெண்ணியப் பார்வையில் விவிலியம்

*- சுதாகர்*

தொடக்கவுரை ..

விவிலியத்தை பெண்ணியப் பார்வையில் அணுகும் முறை தற்போது பரவலாகியுள்ளது. வரலாறு நெடுகிலும் விவிலியத்தை ஆண்கள் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். தங்களுக்குச் சாதகமான முறையில் விளக்கமளித்தனர். அவ்விளக்கங்களையே அனைவரும் ஏற்கும்படி செய்தனர். ஆண்களுக்கேற்ற விவிலியம் பெண்களின் வாழ்வியல் சிக்கல்களுக்கு பதிலளிக்கவில்லை. எனவே, புதிய பார்வைகள் தேவைப்படுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுக்கேற்ற வகையில் விவிலியத்தை வாசிப்பதற்கு முழு உரிமை பெற்றுள்ளார்கள்.

•• ஆதாம், ஏவாளில் தொடங்கி ஆண்டவரின் திருக்காட்சி வரை, தொடக்க நூல் முதல் முடிப்புநூல் வரை விவிலியம் ஆணாதிக்க நோக்கில் அணுகப்படுகிறது. விவிலியம் குறித்த ஏராளமான ஆய்வுகளும், சிந்தனைகளும் நம் காலத்தில் பெருகிவருகின்றன. இவற்றில் நூற்றுக்கு தொண்ணூறு விழுக்காடு பகுதி கடவுளை ஆணின் வடிவமாகவே சித்தரிக்கின்றன.

•• இறையியல் என்பது ஆண்களை முன்னிறுத்துவதாகீ உள்ளது. கடவுளையும் ஆணின் வடிவமாய் சித்தரிக்கிறது. குடும்பம், திருமணம், குழந்தை வளர்ப்பு போன்றவற்றை இறைவனின் திட்டங்கள் என்று கூறுகின்றனர். ஆனால், இவற்றினூடே பெண்களின் அவலங்களும் ஆதங்கங்களும் மூடிமறைக்கப்படுகின்றன. அதேபோன்று, ஆண் - கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட உயிர் போன்றும், பெண் - சபிக்கப்பட்டவள் போன்றும் சித்தரிக்கப்படுகின்றனர். (ஆதாம், ஏவாள் வரலாறு)

•• கடவுளுக்கு உருவம் கிடையாது. அவர் ஆணும் கிடையாது, பெண்ணும் கிடையாது. கடவுளை ஒரு நபராக, நம்மைப் போன்ற ஆளாகக் கற்பனை செய்வதில் உண்மை இல்லை. இம்மாபெரும் பிரபஞ்சத்தின் இயங்கியல் ஆற்றலாக விளங்குபவரை ஒரு சிறிய கூட்டிற்குள் அடக்குகிற முயற்சியாகவே கடவுளை ஒரு நபராக சித்தரிக்கிற போக்கு அமைந்துவிடுகிறது.

•• ஆணாதிக்கர்கள் இயேசுவை ஓர் ஆண்மகன் என்று மட்டுமே பார்க்கின்றனர். அவர் ஓர் ஆணாகப் பிறந்தார் என்பது எந்த அளவிற்கு உண்மையோ, அந்த அளவிற்கு இயேசு பெண் விடுதலை


படிப்பகம்

www.padippakam.com

உணர்வோடு விளங்கினார் என்பதும், அவர்களிடம் மிகுந்த கனிவோடு, கரிசனையோடு இருந்தார் என்பதும் உண்மை. தந்தை, மகன், தூய ஆவி என்று கூறும்போது குறைந்தது தூய ஆவியையேனும் பெண்ணின் வடிவாய் சித்தரித்திருக்கலாம். கடவுளை முற்றாக ஆணின் வடிவமாய் பார்ப்பதனால் ஒவ்வொரு கடவுளையும் அவ்வாறே கருதுகிற போக்கு நிலவுகிறது.

•• தமிழ்ச் சமூகம், கடவுளை அம்மை அப்பன் என்றே அழைத்துள்ளது. சமயத்திலும், சமூகத்திலும் பெண்ணுக்கு முதலிடத்தைத் தருவதையே நாகரிகமாய்க் கருதியது. கடவுளை வயது முதிர்ந்த தந்தையாக மட்டுமே கருதி மன்றாட்டுக்களை எழுப்புகிறவர்கள் இதுகுறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இறைவன் என்று அழைப்பதில் உள்ள இன்பம், இறையவி என்று அழைப்பதில் இல்லையா? தந்தையாம் இறைவன் என்று துதிப்போர் தாயுமானவள் என்று அழைப்பதில் தகராறு உள்ளதோ? ஆணென்றும், பெண்ணென்றும் பாகுபாடு பார்ப்பவரா நம் கடவுள்? ஆபிரகாமை மட்டுமா இறைவன் ஆசிர்வதித்தார்? ஆகாயையும் தானே? சமுதாயத்தில் பெண்களுக்கான இடஒதுக்கீடு பெரும் வரவேற்பைப் பெற்று வரும் இன்றையச் சூழலில், சமயத்தளத்தில் மட்டும் இவர்களின் உரிமைகளை மறுப்பது எப்படிச் சரியாகும்? பெண்ணொடுக்கு முறைக்குக் கடவுள் காரணமாகிட முடியாது என்றால் யார் காரணம்? மீட்பின் வரலாறு ஆணின் வரலாறு மட்டும்தானா? இறையியலில் பெண்ணுக்குரிய இடம் பீடத்திற்கு வெளியில்தானா? மேற்கத்திய இறையியல் பெண்மையை ஏன் போற்றவில்லை? வளர்க்கவில்லை? சமய வழிபாடுகளில் தொண்ணூறு விழுக்காட்டினராகவும், உலகில் சரிபாதியினராகவும் இருக்கும் பெண்கள் கேள்வி எழுப்புகின்றனர். சமூகம் விடை தேடவேண்டும் .. இது காலத்தின் தேவை.

•• ஒவ்வொரு சமூகமும் தனது பிரதிபலிப்பாகவே கடவுளைக் காண்கிறது. ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தை சரிசமமாகக் கருதவோ, நடத்தவோ தயக்கம் காட்டி, ஓயாமல் சண்டையிடுவதையே நாட்டுப்பற்று, வீரம் என்றெல்லாம் கருதுமேயானால், அச்சமூகத்தின் கடவுளும் சண்டைப் பிரியராகவே விளங்குவார். தான் சார்ந்துள்ள சமூகத்தைக் காப்பவராகவும், தனக்குப் படையலிடாத சமூகத்தைப் பலி கேட்பவராகவும் அவர் இருப்பார்.

•• ஆணாதிக்கச் சமூகம், ஆணாதிக்கக் கடவுளை ஈன்றெடுத்துள்ளது. முதலாளியச் சமூகம் முதலாளியக் கடவுளை பிறக்கச் செய்துள்ளது. அமெரிக்க டாலரில் ஆண்டவனைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்கள். பண ஆதிக்கம், ஆணாதிக்கம், மேலைநாட்டு முதலாளிய ஆதிக்கம் அனைத்தின் குறியீடாகவே டாலர் விளங்குகிறது.



படிப்பகம்

www.padippakam.com
ஆண்டான் - அடிமைச் சமூகம், கடவுளை ஆண்டவன், ஆள்பவன், ஆட்சி நடத்துபவன் என்றெண்ணுகிறது. ஒரு எருமைமாடு தனது கடவுளாக பெரிய எருமை மாட்டையே கற்பனை செய்துகொள்கிறது. அதுபோன்று மனிதனும் தன்னைவிட ஆற்றல் மிகுந்த ஒரு பெரிய மனிதனாகவே கடவுளை நினைக்கின்றான்.

பணக்காரர்களின் கடவுள் பட்டாடை உடுத்தியிருப்பார் .. தங்கத் தேரில்தான் பவனி வருவார் .. தேரைவிட்டுக் கீழிறங்கி மக்களோடு சேர்ந்து கொள்ளமாட்டார் .. தங்கத்தேரைக் கடவுளா கேட்டார்? தன்னால் படைக்கப்பட்ட கோடிக்கணக்கான மக்கள் குடிக்க நீரின்றி குடியிருக்க வீடின்றி ஆற்றாது அழுத கண்ணீரோடு, வாழ வழியின்றி வாடி வருந்தும்போது, தனக்கு மட்டும் தங்கச் சிம்மாசனம் கேட்பவரா நம் கடவுள்? ஏழைகளின் கடவுள் ஏழையாகத்தான் இருப்பார். பெண்களின் கடவுள் பெண்ணாகத்தான் இருப்பார். ஆண் அரக்கர்களின் தலைகளைக் கொய்திட தயக்கம் காட்டாத கொற்றவையாகவே பெண் கடவுள் விளங்கமுடியும்.

விவிலியத்தைப் பெண்ணிய நோக்கில் வாசிக்க வேண்டியது ஒவ்வொரு பெண்ணின் கடமை. விவிலியத்தில் டெபோரா, ரூத், சாரா, எசுதர் என்று ஏராளமான பெண்களைச் சந்திக்கிறோம். விவிலியம் குறிப்பிடும் பெண்கள் வரலாற்றில் நிலைபெறுவதற்குக் காரணங்கள் உண்டு. மரபுரீதியிலான பெண்களின் வாழ்க்கை முறையிலிருந்து இவர்கள் வேறுபடுகிறார்கள். ஆணாதிக்கச் சமூகம் போட்டு வைத்திருந்த வரையறைகளுக்கு அப்பால் வாழ்க்கை அமைத்தனர். அவர்கள் வாழ்ந்த சமூக - அரசியல் பின்னணியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவர்களாய் வாசிக்கப்படுகிறார்கள்.

விவிலிய வரலாறு பெண்களின் வரலாறு. பெண்களைப் பற்றி குறிப்பிடப்படாத பகுதிகளையும் கூட பெண்ணியப் பார்வையிலேயே நாம் அணுகவேண்டும். விவிலியத்தில் பெண்ணுக்குச் சாதகமான பகுதிகளும் உண்டு. ஆணுக்குச் சாதகமான அம்சங்களும் உண்டு. தொடக்க நூலில் குறிப்பிடப்படுகிற ஆகார் ஓர் அடிமைப்பெண். ஆபிரகாமின் மனைவியான சாராளுக்கு ஆகார் அடிமை. எகிப்திய அடிமை. (தொ. நூல் 21/9 - 20)

ஆகார் பல்முனை ஒடுக்குமுறைக்கு ஆளானவள். வர்க்கரீதியாக அவள் அடிமை வர்க்கத்தைச் சேர்ந்தவள். இன அடிப்படையில் யூதர்களால் தீட்டுப்பட்டவர்களாகக் கருதப்பட்ட எகிப்திய இனத்தைச் சேர்ந்தவள். பால் ரீதியாக பெண்ணாகப் பிறந்தவள்.

ஆகார் ஓர் ஏழைப்பெண். எகிப்திலிருந்து அடிமையாக விலைக்கு வாங்கிவரப்பட்டவள். அன்றைய சமூகத்தில் வாங்கவும், விற்கவுமான ஒரு விற்பனைப் பண்டமாய் அவள் மதிப்பிடப்பட்டாள். சமூகம்


படிப்பகம்

www.padippakam.com

அவளைக் கடைச்சரக்காக்கியது. அவளுக்கென்று உணர்வுகளோ, உரிமைகளோ, உயர்வுகளோ இருக்கக்கூடாது. அவளே அவளுக்கு சொந்தம் கொண்டாடிக்கொள்ள முடியாது. எதுவுமே அவளுக்குச் சொந்தமல்ல. ஏதுமற்ற ஏதிலி. அவளுக்கு சமூகம் விலை வைத்தது. வாங்கும் சக்தி படைத்த எவரும் அவளைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியும். விருப்பமில்லாவிட்டால் வேண்டுவோரிடம் விற்றுத் தலைமுழுக முடியும்.

யூதப் பெண்களைவிட எகிப்திய பெண்கள் அதிக சுதந்திரத்தோடு இருந்தார்கள். எகிப்தில் ஏழைப் பெண்ணாய் இருப்பதைவிட, இசுராயேலில் யூதப்பெண் அதிகம் அவதிப்பட்டாள். ஏனெனில் யூதச் சமூகம் பெண்களைச் சொல்லொண்ணாக் கொடுமைகளுக்கு ஆளாக்கி வந்தது. ஒவ்வொரு யூத ஆணும் தான் பெண்ணாகப் பிறக்காததற்காக கடவுளுக்கு நன்றி சொன்னான் என்றால் எந்த அளவிற்கு அந்தச் சமூகம் பெண்களை இழிவுபடுத்தி வந்ததென்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

ஆகார் எகிப்தில் ஏழைப்பெண். யூத நாட்டிலோ அடிமைப் பெண். ஏழையாயிருப்பதைவிட அடிமையாயிருப்பது கொடுமையானது. சொந்த நாட்டில் சுதந்திரக் காற்றை சுவாசித்து வந்த ஆகாருக்கு அடிமை வாழ்க்கை ஏற்புடையதாக இல்லை. எகிப்து அவளுக்குக் கனவு தேசமாயிற்று.

சாராளின் கட்டளைகளுக்கு ஆகார் அடிபணிய மறுத்தாள். ஒன்றுமே இல்லாத ஆகாருக்குக்கூட விடுதலைதான் பிடித்திருந்தது. அடிமைத்தனம் பிடிக்கவில்லை. எதை இழப்பினும் தனக்குள் ஊற்றெடுத்த சுதந்திர உணர்வுகளை அவள் வற்றடிக்கவில்லை. அடிமையாய் வாழ்வதைவிட, ஆபிரகாம் வீட்டை விட்டு வெளியேறுவதே சிறந்தது என்று கருதினாள். சாராவை சரிகட்டியிருந்தால் அந்தப் பண்ணைவீட்டின் ஓரிடமேனும் அவளுக்காய் ஒதுக்கப்பட்டிருக்கும். நாயும் பிழைக்கும் அந்தப் பிழைப்பு. தனக்குக் கிடைத்த ஓரளவு பாதுகாப்பைக் கூட உதறியெறிந்த ஆகார், கைக்குழந்தையோடு, உத்தரவாதமற்ற உலகிற்குள் அடியெடுத்து வைக்கிறாள் - பாலைவனத்தில் பயணிக்கிறாள்.. சேருமிடம் தெரியாவிட்டாலும், விடியலின் நம்பிக்கைக் கீறல்களை விழிகளில் தேக்கி, மணல்மேடுகளை நடந்து கடக்கிறாள். பாலைவனத்தில், பாதிவழியிலேயே ஆகார் அவலமாய்ச் செத்துப் போவாள் என்றுதான் பலரும் எண்ணினர். ஆகாரும் அப்படித்தான் எண்ணினாள். எனினும், அடிமையாய் வாழ்வதைவிட, சுதந்திரப் பெண்ணாய்ச் சாவதே மேல் எனக் கருதினாள்.

ஆகார், தனது குழந்தையோடு சாவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டு



படிப்பகம்

www.padippakam.com

விட்டாள். அவள் சாவதைப் பற்றி எவருக்கும் கவலையில்லை. யூதர்கள் தங்களின் கால்நடைச் செல்வங்கள் நோயுற்றாலும் கூடக் கவலைப்படுவார்கள். அடிமைகள் மடிவதைப் பொருட்படுத்த மாட்டார்கள்.

ஆபிரகாம் என்கிற ஆணுக்கு மனசாட்சி இல்லை. ஆகார் அடிமையென்றாலும், அவளது வாரிசைப் பெற்றவர். குழந்தை பெறுவது ஆகாரின் விருப்பமும் கிடையாது. ஆபிரகாமுக்காகவே அவ்வள் கருவுற்றாள். பிள்ளை பெற்றாள் .. ஆண்களின் உலகம் எவ்வளவு வஞ்சகமானது, பாதுகாப்பற்றது .. ஆகாரின் அவலக்குரல் கேட்கவேண்டியவர்களுக்குக் கேட்கவில்லை. தங்களுக்காக உழைத்துக் கொடுத்தவளை உதறியெறிந்த சாராளும், ஆபிரகாமும் குற்றவாளிகளே. எனினும், கடவுள் ஆகாரின் பக்கமிருந்தார் .. பாலைவனத்தில் அநாதையாய்க் கைவிடப்பட்ட ஆகாரின் அழுகுரலைக் கடவுள் கேட்டார். கைக்குழந்தையின் கதறல் கடவுளின் இதயத்தை அதிரச்செய்தது. ‘ஆகாரின் குழந்தையிடமிருந்து பெரிய இனமொன்று தோன்றச் செய்வேன்’ என்று வாக்களித்தார். விவிலியமெங்கும் தேடிப்பார்த்தாலும், கடவுள் ஒரு அடிமைப் பெண்ணின் சார்பாகப் பேசுவதைக் கேட்கமுடியாது. அந்த வகையில், ஆகாரின் கதை தனிச்சிறப்பு மிக்கது. கடவுள் என்றாலே, ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு, வானமே பிளவுண்டு போகுமளவு பிதற்றி அலறுகிற அண்ணாவிகள் சிந்திக்க வேண்டும் ..

கடவுள் ஆகாயத்தில் அல்ல, ஆகாரிடம் இருக்கிறார் .. ஆண்டவனை நோக்கி அல்லும் பகலும் மன்றாடிவிட்டு, வீதிகளில், தெருக்களில், ஆலயங்களில், சமூக வழக்கங்களில் பெண்களை ஆகார்களாய் ஆக்குவோர் கடவுளுக்கு வெகு தொலைவிலிருக்கின்றனர். கடவுள் ஏழைகளின் சார்பாகப் பேசுபவர் .. ஏதிலிகளுக்காய் வாதாடுபவர். கொடுமைகளுக்குள்ளாகும் பெண்களுக்காய் குரல் கொடுப்பவர் .. ஒடுக்கப்பட்ட மானுடருக்காய் உரத்த குரல் எழுப்புபவர். விவிலிய விளக்கிகள் நெஞ்சை உறைய வைக்கும் ஆகாரின் கதையை இருட்டடிப்புச் செய்துவிட்டனர். ஒரு பெண்ணின், அதிலும் ஒடுக்கப்பட்ட பெண்ணின் சார்பாகக் கடவுள் பேசக்கூடும் என்பது இவர்களின் கற்பனைக்குக் கூட எட்டவில்லை. சுரண்டும் வர்க்கங்களுக்கு ஒத்திசைந்து போகிற அறிவாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட மக்களோ, அவர்களோடு இணைந்து நிற்கிற கடவுளோ கண்ணுக்குப் புலப்படுவதில்லை. எனவேதான், கண்ணுக்குப் புலனாகாத கடவுளைப் பற்றியே எழுதுகின்றனர் .. பேசுகின்றனர். இறையியல் பாடங்களாக விவிலியப் பேராசிரியர்கள் விதந்துரைக்கின்றனர். இவர்களைப் போலவே, இவர்கள் முன்னிறுத்தும் கடவுளிலும் உயிர்ப்பு இல்லை. விவிலியத்திற்கே விலங்கிட்டு வைத்துள்ள இவர்களிடமிருந்தே, விவிலியத்தின் விடுதலைக் கடவுளை விடுவிக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



## மறுபக்கம்

நீயும், நானும்
கிழக்கும், மேற்கும்தான்
எப்போதும்.

கவிதையில்
என்ன இருக்கிறதென்று
காரசாரமாய் விவாதிப்பாய்.

உன் ஆட்டத்தின் அடவுகள்
யாருக்குப் புரியுமென்று
நானும் விவாதிப்பேன்.

பூக்களின் அழகு
பறித்து வைப்பதில்தான் என்பாய்.
பார்த்து ரசிப்பதில்தான் என்பேன்.

பட்டிமன்றங்களில்
நீயும், நானும்
எப்போதும்
எதிரெதிர் அணிகளில்.

ஆனாலும்
கடைசி நாளின் பிரிவின்போது
அழுது சிவந்த கண்களுடன்
கிழக்கும், மேற்குமாய்ப்
பிரிந்து போனோம்
விவாதங்களற்று.



படிப்பகம்

www.padippakam.com

# எப்படித் தொடர்வது?

என்ன செய்வது
வேறாக இருக்கிற
உனது பாதையும் - எனது பாதையும்.
அடர்த்தியான இருளில்
அடங்கிக் கிடக்கிறது என் பயணம்.
கண்களை கூசச் செய்யும்
வெளிச்சத்தில் தொடர்கிறது உன் பயணம்.

யார் வரவிற்கோ
வெறுமை பூசிக்கொண்ட
என் தோட்டத்து மரங்கள்
வெறும் கிளைகளோடுதான் நிற்கிறது இன்னமும்.
வசந்த காலத்தின் சுவடுகள் தெரிகிறது
உன் தோட்டத்தில்
இலையுதிர் காலத்திலும்கூட.

புதைமணலில் தடைபட்டு, தடைபட்டுத்தான்
தொடர்கிறது என் பயணம்.
வலிகளோடும், கண்ணீரோடும்.
மெல்லிய இதழ்கள்
வழியெங்கும்
உன் பயணத்தை சுகப்படுத்துகிறது.
என்ன செய்வது
வேறாக இருக்கிறது
உனது பாதையும் - எனது பாதையும்
எப்படித் தொடர்வது
நமது பயணத்தை?



படிப்பகம்

www.padippakam.com

# நூல் திறனாய்வுகள் :

## இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு

எழுத்துத் துறையில் தனக்கெனத் தனி முத்திரை பதித்து வருபவர் சிவசங்கரி அவர்கள். இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு என்றும் முதல் தொகுப்பு நூலில் தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம் போன்ற தென்னக உலகின் முன்னணி எழுத்தாளர்களின் படைப்புக்களையும், நேர்காணல்களையும் தொகுத்தளித்துள்ளார். சிவசங்கரியின் சிகரப் படைப்பு என்று இதனைக் குறிப்பிட வேண்டும். வரலாற்றுச் சிறப்புவாய்ந்த இந்த நூலினைத் தயாரிக்கக் கடந்த அய்ந்து ஆண்டுகளாக முயற்சித்து வந்துள்ளார். இலக்கிய முயற்சிகளில் இது ஓர் தன்னிகரற்ற இமாலயச் சாதனை. இன்னும் பல சாதனைகளுக்கு நிச்சயமாய் இது வழிகோலும்.

மலையாள உலகின் இலக்கிய இமயங்களை நம் பார்வைக்குக் கொண்டு வருகிறார். கிராமங்களில் வாழ்ந்து கொண்டே உலக மானுடத்தின் மனசாட்சியை விழித்தெழச் செய்யும் பேராற்றல்களோடு புறப்பட்டுள்ள எம்.டி. வாசுதேவன் நாயர், வைக்கம் பஷீர், தகழி, கமலாதாஸ், பாலசந்திரன் சுள்ளிக்காட், சேது சுகதகுமாரி போன்றோர் வெளிப்படுத்தி வருகின்ற மனிதவாழ்வின் உன்னதங்களை பெருமிதம் பொங்கிட சுட்டிக் காட்டுகிறார். கேரள மக்களின் எளிமை பற்றியும், கலாச்சாரப் பிணைப்பு பற்றியும், தாய்வழிச் சமூகத்தின் எச்சங்களைப் பற்றியும் மறக்காமல் குறிப்பிடுகிறார். அனைவருக்கும் கல்வி கிட்டியுள்ள நிலையைக் கண்டு வியக்கிறார். கேரள எழுத்தாளர்களை எழுத்தச்சனில் தொடங்கி இன்றுள்ளோர் வரையில் பட்டியலிடுகிறார்.

கேரள வர்மா, குமாரன் ஆசான், உள்ளூர் பரமேஸ்வர ஐயர், வள்ளத்தோள் நாராயண மேனன் போன்ற எண்ணற்றோர் மலையாள இலக்கியத்தை உயிர்த்துடிப்பு மிக்கதாக மாற்றியதையும், மக்களுக்கு இவர்களின் மீதுள்ள பாசத்தையும் தெளிவுற விளக்குகிறார்.

டாக்டர் யூ.ஆர். அனந்தமூர்த்தி, டாக்டர் சிவராம் காரந்த், எஸ்.எல். பைரப்பா, தேவநூரு மஹாதேவா, சதுரங்க, எல்.எஸ். சேஷகிரிராவ் போன்றோரின் பெருமைமிகு கன்னடப் படைப்புகள் சமூக மேம்பாட்டிற்கு உதவியுள்ளதை எடுத்துரைக்கிறார். இரண்டே நூற்றாண்டுகளுக்குள் உலகத் தரத்தை எட்டிப் பிடிக்கும் அளவிற்குக் கன்னடப் படைப்பாளிகள் செயல்படுவது நமக்கு வியப்பளிக்கக் கூடியதாக உள்ளது. புதிய பாணி எழுத்துக்களும், நிஜ வாழ்க்கையில்



படிப்பகம்

www.padippakam.com
மக்கள் பேசும் மொழிகளும் படைப்புக்களில் வெளிப்படுகின்றன. கன்னட தலீத் இலக்கியம் தனிமுத்திரை பதித்து வருகிறது. நவ்யா, நவ்யோத்தரா என்று அணியணியாய் இலக்கியத் திறனாய்வு வகைகள் பெருகியுள்ளன.

டாக்டர் ஸி. நாராயண ரெட்டி, வாஸி ரெட்டி சீதாதேவி, ஆருத்ரா, ராவூரி பரத்வாஜா, மாலதி செந்தூர், சேஷேந்த்ர ஷர்மா போன்றோரின் இலக்கியப் படைப்புகள், அவர்களுடனான நேர்காணலுடன் வெளியிடப்பட்டுள்ளன. திகம்பரர்கள், நயாகரா போன்ற கவிதை இயக்கங்கள் ஆஸ்திரத்தில் தோன்றியுள்ளன. நவீன ஆந்திரத்தைத் தனது கனவிலும், செயலிலும் நிறைத்தவர் வீரேசலிங்கம். அவரது காலம் தெலுங்கு இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்புமுனை.

'நாடு என்பது வெறும் நிலப்பரப்பைக் குறிப்பதல்ல. நாடு என்பது அதன் மக்களைக் குறிப்பதாகும்' போன்ற நெஞ்சை நிறைக்கும் உயிர்த் துடிப்பான கவிதைகள் தெலுங்குலகில் வலம் வந்தன. ஆந்திராவின் முற்போக்கு இலக்கிய இயக்கம் சமூகப் பிரச்சினைகளில் தன்னை முற்றாய் கரைத்துக் கொண்டவிதமும் விவரிக்கப்பட்டுள்ள. ஸ்ரீஸ்ரீயின் தலைமையில் தொடங்கப்பெற்ற புரட்சி எழுத்தாளர் சங்கம் சடங்குகளைக் கடுமையாகச் சாடியது சமூகப் புரட்சியை இலக்காகக் கொண்டிருந்தது. இதில் கத்தார் முக்கியமானவர்.

தமிழகப் படைப்பாளிகளில் அப்துல் ரகுமான், இந்திரா பார்த்த சாரதி, ஜெயகாந்தன், ராஜம் கிருஷ்ணன், சு. சமுத்திரம், பிரபஞ்சன், பொன்னீலன், முனைவர் மு. தமிழ்க் குடிமகன் போன்றோரின் படைப்புக்களும், நேர்காணல்களும் இடம்பெற்றுள்ளன.

தமிழிலக்கியம் தொன்மையானது. வளமையானது. தொடர்ந்து பல புதுமைகளைச் சந்தித்து வருவது. இலக்கியம் சமகாலச் சமுதாயத்தைப் பிரதிபலிக்க வேண்டும் என்னும் கருத்து வலியுறுத்தப்படுகிறது. தேக்கமுற்ற சமுதாயத்தில் இலக்கியம் மட்டுமல்ல நாம் அனைவருமே வெகுவாய்ப் பாதிக்கப்பட்டுள்ளோம். பணம் மேலாதிக்கம் செய்து வரும் சூழலில் இலக்கிய நசிவுகள் தவிர்க்க இயலாதவை. நவீனத் தமிழ் இலக்கியம் கடந்து வந்த பாதைகளைவிட, இனி கடந்து செல்லவேண்டிய பாதைகளையே நம் கண்முன் நிறுத்திச் செயல்பட வேண்டும். பாரம்பரியம் மிக்க இனம், தேக்க நிலை அடைந்து வருவதும், அதனை மீறிச் செல்வதும் பரவலாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

கோவில்கள் பற்றிப் பெருமை பொங்கப் பேசுகிறார். அளவுக்கு


படிப்பகம்

www.padippakam.com

மீறிப் பேசுகிறார் என்று கூடச் சொல்லலாம். கட்டிடங்களின் கலைநயத்தை வியக்கிறார். அதன்பின் ஒளிந்து கிடக்கிற அடிமைகளின், பஞ்சைப் பராரிகளின், உழைப்பாளிகளின் வியர்வையை, வேதனையை குருதி சிந்தலைக் காண மறுக்கிறார். அதுமட்டுமல்ல பெரும் கோவில்கள் பேரரசர்களின், பேராதிக்கர்களின் ஒடுக்குமுறைக்கும், சுரண்டலுக்கும், சாதியமைப்பிற்கும் துணைநின்ற வரலாற்றையும் காண மறுக்கிறார். பெரிய இந்துக் கோயில்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். கிராம தெய்வங்களை, மனிதம் காத்திடப் போராடியோர் தெய்வங்களாக்கப்பட்டதைப் பற்றி சொல்லத் தேவையில்லை எனக் கருதுகிறார். இந்து அரசர்கள் கட்டிய இந்துக் கோயில்களில் பெருமிதம் கொள்கிறார். இசுலாமிய, சீக்கிய, புத்த, கிறித்தவக் கோயில்களைப் பற்றிச் சொல்ல மறக்கிறார். 'ஆற்றில் காசை வீசியெறிந்து நாடு நன்றாக இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டேன் என்கிறார். கோயில் வளாகத்தில் கீழே விழுந்து புரள்வதை யோகம் என்கிறார். யோகம் மட்டும்தான் என்றால் இவரும் அதைப் பின்பற்றலாமே? இவர்கள் கடவுளை மன்றாடி பாபர்மசூதி இடிப்பை தடுத்து நிறுத்தியிருக்கலாமே? மசூதி இடிப்பிற்குப் பிறகு எனது தெய்வ நம்பிக்கையே தகர்ந்து போய்விட்டது என்று இவரது நேர்காணலில் ஒரு எழுத்தாளர் பகிர்ந்து கொண்ட நேர்மைத்தனம் இவரிடம் இல்லை.

சிவசங்கரி நேர்காணல்கண்ட ஏறத்தாழ அனைத்து எழுத்தாளர்களுமே அந்தந்தத் தேசிய இனத்தின் மொழியையும், மண்ணையும், மக்களையும் மையப்படுத்துபவர்கள். அவர்களின் இந்த முற்போக்கான இலக்கியப் பங்களிப்பை விட்டு, விட்டு, போலி இந்திய தேசிய மாயைகளுக்குள் தங்களை ஒருபோதும் ஆழ்த்திக் கொள்ள மாட்டார்கள்.

தேசிய இனங்களின் விடுதலையில் அக்கறையும் ஆர்வமும் உடைய ஒரு எழுத்தாளர் இத்தகைய இலக்கியப் பயணத்தைச் செய்திருந்தால், இன்னும் கூடுதலாகப் பல புதிய பரிணாமங்கள் நமக்குக் கிடைத்திருக்கும்.

ஒரு அனைத்திந்திய கட்சிக்காரன், ஒரு மார்வாடி, ஒரு பார்ப்பன - பனியா, ஒரு இந்துத்துவவாதி 'இந்தியர் என்பதில் பெருமை கொள்வோம்' என்றால் அக்கூற்றிலுள்ள உள்நோக்கம் என்னவென்று நமக்குப் புரிகிறது. ஒரு எழுத்தாளர் அதே சொற்களை உதிர்க்கும்போது, அதற்கான உள்நோக்கம் இலக்கியம்தான் என்று நம்மால் கற்பிதம் செய்து கொள்ள முடியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

ஒவ்வொரு தேசிய இனத்தினுடைய முற்போக்கான பாரம்பரியத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியாக ஓர் இலக்கிய இணைப்பு முயற்சி செய்யப்படுவதே இந்தியத் துணைக்கண்டத்தின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமையும்.

இந்திய அளவிலான இலக்கியப் பயணம் என்பது எழுத்தாளர்கள் பலருக்கும் கிடைக்க வாய்ப்பில்லை. சிவசங்கரி தனியொரு மனுசியாய் மேற்கொண்ட பயணம் இது. இவரைப் பின்பற்றிப் பலரும் இலக்கிய உலகில் இத்தகைய புதிய சாதனைகளை நிகழ்த்த முடியும் என்கிற நம்பிக்கையைப் பெறுவர்.

- ***தமிழாகரன்***

நூல் : இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு முதல் தொகுப்பு
ஆசிரியை : சிவசங்கரி விலை : ரூ. 475
வெளியீடு :
திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணா சாலை, தி. நகர், சென்னை - 600 017.

★ ★ ★

## கூளமாதாரி

பெருமாள் முருகன் டிசம்பர் 2000ல் எழுதிய புதினம் கூளமாதாரி. கொங்கு வட்டாரப் புதினம். மொழி நடை மட்டுமல்ல புதினத்தின் உள் கூறுகளும் வட்டாரத்தைப் பிசகில்லாமல் படம் பிடித்துக் காட்டுகின்றன.

திருச்செங்கோட்டுக்கருகில் உள்ள கூட்டப்பள்ளி பெரியகாட்டு மசக்கவுண்டன் தோட்டத்தில் 14 செம்மறி ஆடுகள் மேய்க்கும் இளம் வயதுச் சக்கிலிப் பையன் கூளையன். (சுமார் 60களில் என யூகிக்க முடியும்) அவன் வாழ்வில் சுமார் ஒரு ஆண்டு நடந்த நிகழ்ச்சிகளும் அவன் சாவும் இந்தப் புதினத்தின் உள்ளீடு.

புதினம் 3 பகுதி. (பக்கம் 216) மூன்று பகுதியின் தலைப்புகள் மண்ணில் மாற்றங்களைக் குறிப்பிடும் பெயர்கள். 1) புழுதி, 2) கொழிமண், 3) வறள். புழுதி என்ற பகுதி 8 அத்தியாயங்கள். கொழிமண் 9 முதல் 13 அத்தியாயம். வறள் 14 முதல் 20 அத்தியாயம்.

பருவ மாற்றத்தால் மண்ணில் மாற்றங்கள் நிகழும். அந்த மாற்றங்கள் கூளையன் வாழ்வின் ஓராண்டில் நடக்கும் நிகழ்ச்சிகள், மனநிலைகள், சாவு தொடர்புடைய குறியீடாக வைக்கப்பட்டுள்ளது எனப் புரிந்து கொள்ளவேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com

விவசாயம் மற்றும் அது சார்ந்த தொழில்களிலும் சிறுவர் தொழில் இருக்கிறது என்பதை இவ்வளவு விரிவாக இதுவரை வந்த புதினங்களில் இல்லை.

பெருமாள் முருகனின் 'கூள மாதாரி', கொங்கு நாட்டில் மாதாரி இனம் என்ற தலித் இனச்சிறுவர்கள் சின்னவயதிலேயே அவர்களின் விருப்பத்திற்கு மாறாக ஆடு மாடு மேய்க்கும் தொழிலில் கவுண்டர்களுக்குக் கொத்தடிமை மாதிரி ஆக்கப்பட்டு எவ்வாறு சீரழிகிறார்கள் என்பது பற்றிய அழுத்தமான படைப்பு.

மற்ற மாவட்டத்தில் சிறுவர்கள் மற்ற தொழிலில் ஈடுபடும்போது அவர்களுடைய மனநிலைக்கும் இந்தச் சிறுவர்களின் மனநிலைக்கும் ஒரு தனித்த வேறுபாடு உண்டு.

இந்தத் தொழில் இயற்கையோடும், உயிர்களோடும் மண்ணோடும் தொடர்புடையது. அதனால் இயற்கையையும், உயிர்களையும், மண்ணையும் நேசித்து அவற்றோடு இரண்டறக் கலந்து விடுவதால் இந்தச் சிறுவர்கள் சிறுமிகள் மனம் விசாலப்பட்டுத் தொழிலை நேசிக்கின்ற, அதோடு உறவுடைய மனிதர்களை - தன்னை அடித்தாலும் உதைத்தாலும் - நேசிக்கின்ற ஒரு பக்குவ நிலையை அடைந்து விடுகிறது.

## II

இந்தப் புதினத்தின் கதையோட்டம் எதிர்பாராத திருப்பங்களையோ, திகில்களையோ உள்ளடக்கியதல்ல. செயற்கையான ஓட்டத்தையோ, பரபரப்பான அதி வேகத்தையோ உடையதல்ல. வண்டியில் பூட்டப்பட்ட காளையின் வேகம் கதையில் இல்லை. ஏரில் பூட்டப்பட்ட மாடு அசை போட்டுக் கொண்டே நடக்குமே - அதுபோலப் புதினத்தைப் படிக்கும்போது ஒவ்வொரு அத்தியாயத்தின் நிகழ்ச்சியும் அடுத்த அத்தியாயத்துக்குச் செல்லும்போது அசை போட வைப்பதாக அமைந்துள்ளது.

இந்தப் புதினத்தின் முதற் பகுதியில் கூள மாதாரி மீது ஒரு வாஞ்சை ஏற்படுகிறது. கடைசிவரை அது வளர்கிறது. கடைசி அத்தியாயத்தில் முழு வளர்ச்சி பெற்று நம் இதயத்தில் ஒரு பாறாங்கல்லைத் தூக்கி வைப்பது போலப் பெருங்கனத்தை உண்டாக்கிவிடுகிறது. இறக்கிவைக்க முடியவில்லை.

அது புதினப் படைப்பின் திறனா? அல்லது கூளமாதாரி வாழ்க்கை நிலையா? என்றால் ஒன்றில் ஒன்று (இலையில் நரம்பு போல) பின்னிப் பிணைந்த தன்மை என்று தோன்றுகிறது. அதுதான் இப்புதினத்தின் வெற்றி.


படிப்பகம்

www.padippakam.com

சாதாரண ஆடு மேய்க்கும் பையனாகக் கூளையன் நமக்கு முதலில் தைப் பொங்கலுக்குச் சிலநாள் கழித்து அறிமுகமாகிறான். அடுத்த தைப் பொங்கல் அன்று கிணற்றுக்குள் குதித்து இறந்து விடுகிறான்.

எப்படி ஆடுகளையும், குட்டிகளையும் நாயையும் நேசிக்கிறானோ, அதேபோல அவற்றின் உரிமையாளரான கவுண்டரின் மகளையும் நேசிக்கிறான். கவுண்டர் இவனைக் கொடுமைப்படுத்துகிறார். அதுவும் இவன் பசியின் காரணத்தால் தவறு செய்கிறான் இன்னொரு கவுண்டர் தோட்டத்தில் தேங்காய் திருடிவிடுகிறான். கூளையன் அது போன்று இனிமேல் தவறு செய்யக் கூடாது என்பதற்காகக் கயிற்றில் கட்டி அவனைத் தலைகீழாகத் தொங்க விடுகிறார். அந்தச் செயலைப் புதினத்தில் பெருமாள் முருகன் எழுதியிருப்பதைப் படிக்கும்போது அது உச்சகட்டமான கொடுமையாக மனத்தை அரிக்கும். அதையே அனுபவித்த பிறகும்கூட அவர் மகளையும் அவரையும், அவருடைய ஆடுகளையும் நேசிப்பதிலோ, நேசிப்பை வெளிப்படுத்துவதிலோ வளர்ச்சிதான் உள்ளதேதவிர, குறைவு கிடையாது.

பெருமாள் முருகன் இதற்கென வலிந்து எந்த நிகழ்ச்சியையும் புதினத்தில் சேர்க்கவில்லை. இயல்பாகவும், இயற்கையாகவும் நடக்கும் நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளன.

## III

கூளையன், வவுறி, மொண்டி, செவிடி, நெடும்பன், பொட்டி - ஆகியோர் ஆடுமேய்க்கும் சிறுவர்களாகப் புதினத்தில் படைக்கப்பட்டுள்ளனர். புழுதி என்ற பகுதியில் வவுறி மீது ஓர் அலாதியான நேசம் இருக்கும் கூளையன் மனநிலை படைக்கப்பட்டுள்ளது. அது அப்படியே இறுதிவரை செல்கிறது. அவளுடைய 'அருகிருப்பு' கூளையனுக்குப் பிடித்தமானது.

மொண்டியைக் கண்டால் ஒரு லேசான விலக்கல். நெடும்பனோடும், செவிடியோடும் ஒரு இணக்கமான நட்பு. ஆடுகளுக்குப் பெயர் வைத்துள்ளதும், ஆடுகளை அடையாளம் காண்பதும், திருட்டாட்டை மிரட்டுவதும், ஆடுகளைப் பெயர் சொல்லி அழைப்பதும் கூளையனுடைய தனித்திறமை. ஆடு மேய்ப்பதில் எத்தனை நுணுக்கங்கள் இருக்கின்றன, அதில் எத்தனை செய்திகள் அடங்கியுள்ளன என்பதை முதல்பகுதி சிறப்பாக எடுத்துச் சொல்கிறது. வெள்ளாடா செம்மறி ஆடா என்பது தெளிவாக இல்லை. வெள்ளாடு மேய்ப்பவர்கள் மட்டுமே கையில் சள்ளைக் கத்தி வைத்திருப்பார்கள். மரங்களிலிருந்தும் வேலிகளிலிருந்தும் இலை தழை பிடுங்கிப் போடுவதற்கு. ஊளையாடு போன்ற வார்த்தைகளைக் கூளையன்



படிப்பகம்

www.padippakam.com

கையாள்வதால் செம்மறி ஆடு எனத் தெளிவாகிறது. ஆனால் அட்டைப் படத்தில் வெள்ளாடு மேய்க்கும் படம்தான் உள்ளது. இவ்வளவு கூர்மையான புதினத்தில் இந்தப் படத்தையும் கூர்மையாகக் கவனித்துப் போட்டிருந்தால் இன்னும் சிறப்பு கூடியிருக்கும்.

ஏழ்மையின் காரணமாக, அப்பன் தண்ணி போட்டுச் செலவழிக்கக் காசு தேவைப்படும் காரணமாகச் சிறுவயது மகன்களைக் கவுண்டர்களிடம் ஆடு மேய்க்க, பட்டி வேலை செய்ய அதிகக் கடன் - முன்பணம் - வாங்கிக் கொண்டு விடும் நிலைமை கொங்கு நாட்டில் உள்ளது.

கூள மாதாரி சிந்தனை ஆற்றல் அதிகம் உள்ளவன். மனதிலே தானே ஒரு உலகத்தைப் படைத்துக் கொண்டு அவ்வப்போது வாழ்பவன். பல நிகழ்ச்சிகளை மனதுக்குள் வரிசையாக ஓடவிட்டு அது அதில் அவன் ஒரு பாத்திரமாக மாறிக் கலந்து கொள்ளும் திறம் பெற்றவன் அதுதான் அவன் பலமும் பலவீனமுமே ஆகும்.

- *மா. நடராசன்*

வெளியீடு : தமிழினி, சென்னை-14. ரூ. 90/-

★ ★ ★

## காற்றாய் - புயலாய் - பெண் எழுத்தாளர் சிறுகதைகள்

- *தொகுப்பு : ஞானி*

தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகப் பெண் எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டி நடத்தப் பெற்று தேர்வான கதைகள் தொகுக்கப் பட்டுள்ளன. போட்டிக்கு வந்த எழுபத்து ஏழு கதைகளில் பதினைந்து கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

மேலோட்டமான ஒரு பார்வை என்ற நிலையிலும்கூடப் பெண்ணியம் என்பது பல்வேறு முனைகளுக்கிடையே இயங்குவதாகவே உள்ளது. காலம் மாற மாறச் சிக்கல்களும் புதிது புதிதாக மாறிக் கொண்டேதான் வருகின்றன.

திருமணமாகாமலிருப்பதும் சிக்கலாய் முதிர் கன்னித் துயராய் ..,
திருமணமாகி, கணவன், மாமியார் கொடுமைச் சிக்கலாய் ..,
வேலைக்குப் போகாமல், வீட்டின் சம்பளமில்லா வேலைக்கார அடிமையாய் ..,

படித்து வேலைக்குச் சென்று வீட்டுவேலை, அலுவலக வேலை என இரட்டைச் சுமையையும் சுமக்கும் பாரந்தூக்கியாய் .., என்று



படிப்பகம்

www.padippakam.com

எந்தச் சூழலிலும் நசுங்கப்படுகிறாள் பெண் என்பதற்கு காற்றாய் ... புயலாய் தொகுப்பு சாட்சியாய் உள்ளது.

சிறுகதை என்ற இலக்கிய வடிவத்திற்கு மட்டுமே சாத்தியப்படும் கலை நுணுக்க செய்நேர்த்திகளும், மொழி லாவகங்களும் இத்தொகுப்பின் பெரும்பாலான கதைகளில் காணக் கிடைக்கவில்லை. என்றாலும் இத்தொகுப்பைக் கையிலெடுத்த ஒரே மூச்சில் படித்து முடித்து விட முடியும். இதைச் சாத்தியப்படுத்துவது ஜாலங்களற்ற அந்த எழுத்துக்களில் காணப்படும் சத்தியநிஜத்தின் வலிகளும், வடுக்களும்தான். இத்தொகுப்பிற்கு மட்டுமல்லாது பெண் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கும் இதை இணைத்துப் பார்க்க முடியும். கற்றுக்குட்டியான ஒரு பெண் எழுத்தாளரின் எழுத்துக்களிலும் இந்த ஒப்பனையற்ற நிஜத்தின் ஒளி சாயலடிக்கும். பெண் எழுத்துக்களின் அவலச் சூழலே இதுதான். ஒருபுறம், செய்நேர்த்தி கைகூடாத நேர்மையான எழுத்துக்கள். மறுபுறமோ புகழின் வெளிச்சத்தில், பைக் ஓட்டி முடியைப் பறக்க விடுவதையே புரட்சி செய்வதாய்க் காட்டி எழுதும் பிரபல பெண் எழுத்தாளர்கள் இவற்றிற்கிடையேதான் பெண் மொழி எழுத்தாடல்கள் மூச்சுப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. இத்தொகுப்பின் முன்னுரையில் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், இன்று தமிழ்நாட்டில் பிரபலமாக விளங்கும் பெண் எழுத்தாளர்கள் பலர் வியாபார எழுத்தாளர்கள், உயர் மட்டத்தை, உயர்சாதியை, பெரிய படிப்பைப் படித்தவர்கள் என்று கூறும் கருத்தை சுலபமாகப் புறந்தள்ளி விட முடியாது. புகழின் வெளிச்சம் வந்து சேரச் சேர அவர்களது எழுத்துக்கள் ஒப்பனைகளை, பொருத்தமில்லாத செயற்கை அவலங்களைப் பூசிக் கொள்கின்றன.

இத்தொகுப்பில் வர இயலாத சூழல் ஏற்படும் பட்சத்தில் இதில் எந்தக் கதையாவது ஏதாவதொரு பிரபல பத்திரிக்கையில் வரக்கூடிய வாய்ப்பு உள்ளதா என்பது கேள்விக்குரியதே.

பெண்ணியப் பிரச்சனைகளின் பல்வேறு கோணத்தை இத்தொகுப்பு சுட்டுகிறது. பதினைந்து கதைகளுமே பதினைந்து கோணத்தைக் காட்டுகிறது எனக் கூறமுடியும். பெண்களுக்கெதிராய்க் காலம்காலமாய் ஆண்களின் ஆயுதமாய்த்திகழும் பாலியல் வன்முறை உட்படப் பல்வேறு கோணங்கள் பதிவாகி இருக்கின்றன. மருளவைக்கும் நீதிமன்ற சூழல் 'காற்றாய் புயலாய்' கதையிலும் நகைத் தகராறு 'ஐந்து பவுனும் அரைப்பவுனும்' கதையிலும் கூறப்படுகிறது. இவ்விரு கதையிலும் சமூகம் கணவன் பக்கம் நியாயமிருப்பதாக நம்பும் அளவிற்கு வஞ்சகத்தின் மேல் பசுத்தோல் போர்த்தப்படுகிறது. இதற்கு எதிராகப் போராடத்தான் பெண்கள் மேலும் அதிகமாகத் தன்னைத் தன்னுள்ளிருந்தே திரட்டிக்கொள்ள வேண்டியமையாயுள்ளது. போராட்டக் களத்தில் உள்ள பெண்ணின் நிலையைக் கூறுவதாக முற்றிலும் மாறான இலங்கைக் களத்தில் பூஞ்சோலைப் பூங்குயில்

www.padippakam.com

அமைகிறது. பெண்களின் குணத்தன்மை மாற்றத்தையும், ஆண்களுக்கு ஏற்படும் துயரங்களையும் தேடல்களும் சாஸ்வதங்களும் கதை பேசுகிறது. பெண்கள் தங்களின் உடற்கூறுப் பிரச்சனைகளையும் தாண்டிவர வேண்டியிருப்பதை 'விட்டு விடுதலையாகி' கதை உணர்த்துகிறது. குழந்தை என்பதைத் தனக்கு உடைமைப் பொருளாக, சமூக அந்தஸ்தாக மட்டுமே நோக்கும் தந்தையும், மாறான குணமுடைய தாயும் 'அவள் அவன் அது' கதையில் காட்டப்படுகிறார்கள். 'என் கணவரும் உங்கள் மனைவியும் ஒருவரை ஒருவர் மிகத் தீவிரமாக நேசிப்பதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்' என்று துவக்க உத்தியைச் சிறப்பாக அமைக்கிறார் 'தீர்ப்பு' கதையின் ஆசிரியர். சும்மாதான் இருக்கா, விட்டு விடுதலையாகி இரண்டும் பெண்ணின் மனச்சிக்கலை மற்றோர் கோணத்தில் அணுகுகிறது.

'கற்பு கற்பு என்கிறீர்களே, இதுதான்யா' - என்று 'பொன்னகரம்' கதையில் புதுமைப்பித்தன் சொல்வாரே அந்த எழுத்து நேர்மைக்காகவும், சிறுகதை நேர்த்திக்காகவும், பெண்ணியச் சிறுகதை உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இத்தொகுதி அதை நிறைவு செய்யவில்லை, முயற்சி செய்திருக்கிறது. அடுத்தடுத்து சிறுகதைப் போட்டிகள் அமையும்பொழுது எழுத்தளவிலும், வரலாற்றிலும் சாத்தியப்படுதலை வளர்த்தெடுக்க இயலும்! நம்பிக்கைதானே வாழ்வை நகர்த்துகிறது !

- *மஞ்சுளா தேவி*

வெளியீடு : நிகழ், கோவை - 9. ரூ. 30/-

★★★

## தமிழ் ஆன்மாவைத் தேடி : 'குணாவின் ஆசிய விதம்'

தமிழினத்தின் ஆன்மாவைத் தேடிக் கண்டுபிடிக்கின்ற முயற்சிகளில் பலரும் பலகாலமாக ஈடுபட்டு வந்து இருக்கிறார்கள். அண்மைக் காலமாக, மார்க்சிய ஆய்வாளர்களும் இத்தகு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்ற உண்மையினைக் கிளைஞர் குணாவின் "ஆசிய விதம்" என்ற நூல் சுட்டிக் காட்டுகிறது.

"ஆசிய உற்பத்தி விதம்" பற்றிய கார்ல் மார்க்ஸ் அவர்களின் கருத்துச் சிதறல்களை ஒட்டியும் வெட்டியும் "ஆசிய விதம்" என்ற தலைப்பில் குணா இந்த நூலை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். குணாவின் நூலுக்கு முன்னுரை வரைந்திருப்பவர் கிளைஞர் சத்திய மங்கலம் நாகராஜன்.

இந்திய ஆன்மாவினுள் கிறிஸ்தவ ஆன்மாவினை மிகவும் எளிதாகப் புகுத்திவிட முடியும் என்ற நினைப்பில் இந்தியத் துணைக்

www.padippakam.com

கண்டத்தினுள் நுழைந்த ஐரோப்பியர்களுக்கு அன்று ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. இந்திய ஆன்மா என்பது வெறும் இந்திய ஆன்மா அல்ல, மாறாக, ஆரிய இந்திய ஆன்மா, என்ற உண்மையினை அவர்கள் காண நேர்ந்த அதிர்ச்சி அது.

எனவே கிறிஸ்தவ ஆன்மாவிற்கு எதிர்ப்புக் காட்டி வந்த ஆரிய - இந்திய ஆன்மாவினை அடித்து வீழ்த்திடுகின்ற தீவிரமான முயற்சிகளை அவர்கள் மேற்கொள்ள முற்பட்டனர். அதிர்ச்சிமேல் அதிர்ச்சியாக மற்றுமொரு வியப்பு அவர்களுக்குக் காத்திருந்தது. ஆரிய - இந்திய ஆன்மாவினுள் பல்வேறு மொழியின மக்களின் ஆன்மாக்கள் அடைபட்டுக் கிடந்த உண்மையினை அவர்கள் காண நேர்ந்த வியப்பு அது.

இறுதியில், ஆரிய - இந்திய ஆன்மாவிற்குள் கிறிஸ்தவ ஆன்மாவினைத் திணிக்க முயல்வதைவிட, அடைபட்டுக் கிடந்த ஆன்மாக்களுக்கு அவற்றின் மாயமலத்தில் இருந்து விடுதலை அளித்து, அந்த ஆன்மாக்களினுள் கிறிஸ்தவ ஆன்மாவினை புகுத்தி விடலாம் என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர்.

இத்தகு முயற்சிகள் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட போதுதான், தாழ்ந்து கிடந்த தமிழினம் தனது ஆன்மாவினைத் தானே அடையாளம் காணத் தலைப்பட்டது எனலாம்.

தமிழ்நாட்டில் மதம் பரப்பப்பட்ட ஐரோப்பியர்கள், தமிழினத்தின் ஆன்மா அடிமைப்பட்டுக் கிடந்ததற்கு இரண்டு மாயைகள் காரணமாக இருந்ததைக் கண்டனர். ஒன்று, ஆரியர்கள் உயர்ந்தவர்கள், தமிழர்கள் - திராவிடர்கள் - தாழ்ந்தவர்கள், என்ற சாதிமுறையான ஆரிய மாயை, இரண்டு, சமஸ்கிருதம் தேவமொழி, தமிழ்மொழி நீச மொழி, என்ற பண்பாட்டு முறையான ஆரிய மாயை.

மேல் சாதிக்காரர்களை விட்டு விலகி, கீழ்ச்சாதிக்காரர்கள் நடுவில் ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் பணியாற்றத் தொடங்கியபோது, சாதி - முறையான ஆரியமாயை கிழிபடத் தொடங்கியது. தமிழ் இலக்கியங்கள், குறிப்பாக, தமிழினத்தின் ஆன்மா எனத் தக்க திருக்குறள் போன்ற நூல்கள், வெளிக் கொணரப்பட்டும் மொழிபெயர்க்கப்பட்டும் வந்தபோது சமஸ்கிருதம் தேவமொழி என்ற பண்பாட்டு முறையான ஆரியமாயையும் கிழிபடத் தொடங்கியது. தமிழினம் தனது ஆன்மாவின் சிறப்பினைக் கண்டு தானே வியந்து நின்றது எனலாம்.

பின்னர், தமிழினத்தின் பண்பாட்டு இடிபாடுகள் இடையே அகழ்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழறிஞர்களும் இத்தகு அகழ்வு வேலைகளில் ஆர்வமுடன் ஈடுபடத் தொடங்கினர்.

விளைவாக, ஆரியர்கள் எங்கிருந்தோ வந்து இங்கே குடிபுகுந்து விட்ட நாடோடி மக்கள் என்ற வரலாற்று உண்மை அகழ்ந்து எடுக்கப்பட்டது. தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி என்ற உண்மையும்


படிப்பகம்

www.padippakam.com

நிலைநிறுத்தப்பட்டது. தமிழ்த்தாயின் தோள்கள் புகழாரங்களால் அணி செய்யப்பட்டன.

ஐரோப்பிய வணிகமும் சரக்குப் பொருளாதாரத்தின் பெருக்கமும் அவற்றின் ஆழத்திலும் அகலத்திலும் இத்தகு முயற்சிகளின் வெற்றிக்குப் பருமையான அடிப்படைகளாக விளங்கின என்பது யாரும் மறுத்திட முடியாத ஒரு வரலாற்று உண்மை.

இது பொருளாதாரத் தீர்மானப்பாட்டில் பாற்பட்ட வாதம் இல்லையா? இதை எதிர்த்துத்தானே, நாகராஜனும் குணாவும் முன்னுரையும் முகவுரையும் வரைந்திருக்கிறார்கள்! என்ற கேள்விகள் இங்கே எழலாம்.

ஆனால் எந்தப் பொருளாதாரத் தீர்மானப்பட்டு வாதத்திற்கு எதிராகக் குணா தொடக்கத்தில் சில முணுமுணுப்புகளை எழுப்புகிறாரோ, அதே பொருளாதாரத் தீர்மானப்பாட்டினை முடிவில் அவரே நிலைநிறுத்தியுமிருக்கிறார். இதில் தான் மார்க்சியத்தின் வலிமையே அடங்கிக் கிடக்கிறது.

ஆன்மா என்பது கூட என்ன? பருமை நிலவரங்களில் ஏற்படுகின்ற அயன்மையான வெளிப்பாடுகளின் காரணமாக, உள்வயமாக ஒடுங்கி நுண்மைப்பட்டுப் போகின்ற இயல்புகள் தாமே, ஆன்மாக்கள்! பருமை நிலவரங்களின் வளர்ச்சிக்கு ஏற்ப ஆன்மாக்களும் வளர்ந்து சிறந்து பரமான்மாவாகி, அயன்மைப்பாட்டின் நுண்மைப்பாட்டில் நின்று விடுதலை பெற்று, இறுதியில் மனித இயல்பாகத் திண்மைப்படுகின்றன எனலாம்.

தமிழர் பண்பாட்டின் சிறப்புகளை அகழ்ந்து எடுக்கின்ற பணிகளைத் தொடங்கி வைத்தவர்களில் பெஸ்கி என்ற வீரமாமுனிவர், ஜி.யு. போப், கால்டுவெல் போன்ற ஐரோப்பியர்களை முக்கியமான வர்களாகக் குறிப்பிடலாம்.

வ.உ. சிதம்பரனார், கா.சு. பிள்ளை, மறைமலையடிகள், திரு.வி.க. - யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், கதிரைவேற்பிள்ளை, தாமோதரம்பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர் - நீலகண்ட சாஸ்திரியார், சினிவாசப்பயங்கார், மு. இராகவய்யங்கார், இரா. இராகவய்யங்கார், சூரிய நாராயண சாஸ்திரியார், உ.வே. சாமிநாதய்யர் - மா. இராசமாணிக்கனார், சோமசுந்தர பாரதியார், மயிலை சீனி வேங்கடசாமி, தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், கா. அப்பாத்துரையார் ஆகியோர் தமிழ்ப் பண்பாட்டினுள் ஆய்வுகளை மேற்கொண்ட தமிழறிஞர்களில் முக்கியமானவர்கள்.

தனது ஒப்பிலக்கணத்தின் மூலம் கால்டுவெல் சமஸ்கிருதத்திற்குச் சாவுமணி அடித்தார் என்றால், தேவநேயப்பாவாணர் அதற்குக் கல்லறை கட்டினார் என்று கூறலாம். பெருஞ்சித்திரனார் போன்றவர்கள் அந்தக்

படிப்பகம்

கல்லறையின் மீது இறுதியான மரண வாசகங்களை எழுதிக்கொண்டு வருகிறார்கள்.

இப்படி, வரலாறு, இலக்கியம், சமயம், மொழியியல் எனப் பல்வேறு துறைகளிலும் தமிழ் ஆய்வாளர்கள் ஆய்வுகளை மேற்கொள்ளத் தொடங்கினர். பழந்தமிழ் நூல்கள் அச்சேற்றி வெளிக் கொண்டு வரப்பட்டன.

பழந்தமிழ் ஆய்வாளர்கள் யாரும் தங்களை மார்க்சியர்களாகக் கருதிக் கொண்டதாகத் தெரியவில்லை. மார்க்சியமா? குறளியமா? என்றோ, அல்லது கருத்துவாதமா? பமைவாதமா? கதம்ப வாதமா? என்றோ, இவர்கள் அவ்வளவாகக் கவலைப்பட்டுக் கொள்ளவும் இல்லை. என் கடன் தமிழ்ப்பணி செய்து கிடப்பதே என்ற பாணியில் இவர்கள் அகழ்வு வேலைகளில் ஈடுபட்டு வந்தனர்.

சரக்குப் பொருளாதாரத்தின் வளர்ச்சி, புதின முதலாண்மை உற்பத்தி முறையின் தொடக்கம், ஆகிய பருமை நிலவரங்களினூடே நடைபெற்று வந்த இத்தகு அகழ்வாய்வுகள், தந்தை பெரியாரின் தன்மானப்புரட்சி இயக்கத்தில் சமுதாய அரசியல் வெளிப்பாட்டினைப் பெற்றன எனலாம்.

இந்நிலையில், பழைய இலக்கியங்களுக்கு எதிராகப் போர் முரசங்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கின. அகழ்வு வேலைகள் முற்றுப் பெறாத நிலை ஒரு புறமும் புதிய இலக்கியங்கள் ஆராயப்பட வேண்டும் என்ற தீவிரம் ஒருபுறமாகப் பொதுமை வாத நாத்திகர்கள் தமிழியக்கத்தினுள் நுழைந்தனர். அரைகுறையாகவேனும் வளர்ந்து விட்ட முதலாண்மை சற்றே தள்ளாடத் தொடங்கி விட்டது அல்லவா?

மு. வரதராசனார் போன்றவர்கள் பழமைக்கும் புதுமைக்கும் இடையே நின்று கொண்டு இருந்தார்கள். கைலாசபதி போன்றவர்கள் புதுமை முரசுகளை ஓங்கி முழங்கிட முனைந்தனர்.

இப்படியாக, தமிழினத்தின் ஆன்மாவினைத் தேடுகின்ற முயற்சிகள் ஓரங்கட்டப்பட்டன. ஆன்மாவா? என்ன அது? என்று கேட்பவர்களாயிற்றே இவர்கள்! இனமா? என்ன பிதற்றல்? வருக்கமல்லவா! என்று அல்லவா, இவர்கள் கேட்பார்கள்! ஆக, தமிழாய்வும் உருப்படவில்லை; மார்க்சியச் சிந்தனையும் இயல்பாக வளரவில்லை.

பழந்தமிழறிஞர்களின் ஆய்வுகள் பெரியாரின் தன்மானப்புரட்சி இயக்கத்தில் பெருமைக்குரிய இடங்களைப் பிடித்தன என்றால், புதுத்தமிழர்களின் ஆய்வுகள் தமிழினத்தின் எழுச்சிக்கு வலுவூட்டிட முன்வந்திருக்க வேண்டும். ஆனால் இவர்களோ, ருஷ்யாவிலும் சீனத்திலும் தங்கள் ஆன்மாக்களைத் தேடிக்கொண்டு இருந்தனர். தடைகளைத் தகர்த்து எறிந்து முன்னேறி இருக்க வேண்டிய

www.padippakam.com

முதலாண்மை, தயங்கி நின்ற தேக்கத்தில் இவர்கள் பொதுமைக் கனவுகளைக் காணத் தொடங்கினர் எனலாம்.

சிலர் தியாக வேள்விகள் பற்றிக் கவிதைகளையும் கதைகளையும் எழுதிக் குவித்து அந்தப் "படைப்புக்களின்" மேல் ஏறி நின்று, இந்தியாவின் சிவப்பான்மாவினை எட்டிப்பிடித்திட எண்ணி வானத்தை நோக்கிக் கை நீட்டிக் கொண்டிருந்தார்கள். சிலர் ஆரிய - இந்திய ஆன்மாவினுள் ருஷ்ய ஆன்மாவினை நுழைத்து விடுகின்ற முயற்சிகளில் மூழ்கத் தொடங்கினார்கள். இல்லை, இல்லை, சீன ஆன்மாதான் இந்திய ஆன்மாவுக்குப் பொருத்தமானது என்று வாதிட்டுக் கொண்டிருந்தனர் மற்றும் சிலர்.

இந்தச் சிற்றாள் மாக்களை எல்லாம் எள்ளி நகைத்து வந்த பேரான்மவாதிகளோ, மார்க்சியப் பேரான்மாவில் ஒளிவட்டத்தில் உலகப் பரமான்மாவினை எட்டிபிடித்திட முனைந்து கொண்டிருந்தனர்.

இப்படியாக, சிறிது சிறிதாகச் சிந்தனை வட்டங்கள் எண்ணிக்கையில் பெருகத் தொடங்கின. மார்க்ஸ் வட்டம், ஏங்கெல்ஸ் வட்டம், லெனின் வட்டம், ஸ்தாலின் வட்டம், மாவோ வட்டம், திரோதஸ்கி வட்டம், எனப் பல்வேறு வட்டங்கள்! இவற்றில் கலப்பு வட்டங்களும் உண்டு.

இந்த வட்டங்களை எல்லாம் கடந்து சிந்தனையின் ஆழத்திற்குள் செல்ல முயன்று வந்தவர்கள்கூட, பரவலாக வட்டங்களுக்குள் இழுக்கப்பட்டு இறுதியில் சிறைப்பிடிக்கப்பட்டு விட்டனர்.

இதையும் மீறி சிந்தனையின் ஆழத்திற்குள் இறங்கிப் பார்த்தவர்களும் ஆழத்தின் தனிமை இருட்டுக்கும் வட்டங்களின் ஏளனங்களுக்கும் அஞ்சி மூச்சை அடக்கியபடியே மேலுக்கு வந்து வட்டங்களினுள் தஞ்சம் புகுந்திட முற்பட்டு விட்டனர். அறிவு வட்டம், கலை வட்டம், ஆதை வட்டம், கவிதை வட்டம் என்று பல்வேறு வட்டங்கள் அவர்களுக்காகக் காத்திருந்த பாவனையில் அவர்களை வரவேற்றன. அரைகுறையாக வேனும் ஆழத்தை ஆய்ந்து வந்தவர்களோ, ஒட்டிக்கொள்வதற்கு வட்டங்கள் எதுவும் இல்லாமல் விரட்டி விரட்டி அடிக்கப்பட்டனர்.

ஆனால், ஒரு நாள், தமது திசையைத்தவிர பிற அனைத்துத் திசைகளையும் பார்த்துப் பரவசப்பட்டுக் கொண்டு இருந்த இவர்கள் எல்லாம், அனவிடைப்பட்ட புழுவைப்போல துடிதுடித்துப் போனார்கள். பழக்கப்பட்ட பாசக் குரல்கள் கூக்குரல்களாக எட்டி வந்து இவர்கள் காதுகளைத் துளைத்துக் குடைந்தனர். அய்யகோ! என்று இவர்களின் நெஞ்சம் பதறத் தொடங்கியது.

தமது சொந்தத் திசையை - சொந்த மண்ணை - சொந்த மனிதர்களை - இவர்கள் திரும்பிப் பார்த்தாக வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு ஏற்பட்டது.. திரும்பினார்கள்.

www.padippakam.com

குருதி தானாகக் கொதித்தது; இதயம் தானாகத் துடித்தது; மனம் தானாகப் பதைத்தது; தசை தானாக ஆடியது. பற்றி எரிந்தது தமிழ் ஈழம் ஆயிற்றே! இதோ, எனது இனம், எனது மக்கள், என இவர்கள் தமது சொந்த ஆன்மாவை அடையாளம் கண்டு அரவணைக்க முற்பட்டபோது, அதிர்ச்சியாக, தமிழினத்தின் திராவிட மரபுகளுக்கு உரிமை கொண்டாடி வந்த கூட்டங்கள் எல்லாம் தமிழினத்தின் ஆன்மாவைத் தவிக்க விட்டு விட்டு ஓடிப்போய் இருந்ததைக் கண்டார்கள்.

பழந்தமிழறிஞர்களின் ஈடுபாடுகளுக்கும் இனமானப் புரட்சியாளர்களின் எழுச்சிகளுக்கும் இவர்களுக்கு அர்த்தம் புரியத் தொடங்கியது. தமிழியக்கத்தின் குறுகலான பாதை இவர்கள் முன்னே நீண்டு விரியத் தொடங்கியது.

இந்தப் பின்னணியில் பார்க்கின்ற பொழுதுதான் "ஆசிய விதம்" போன்ற நூல்கள் முக்கியமான ஒரு திருப்பம் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

சிறந்த ஆங்கில நடை, தெளிவான கருத்துக் கோவை, சலிப்பூட்டாத வாதங்கள் முதலியவை இந்த நூலின் சிறப்புகள்.

- *ஜோதிப் பிரகாசம்*

குறிப்பு : சுமார் 20 / 25 ஆண்டுகளுக்கு முன்பு தோழர் குணா "THE ASIATIC MODE" என்ற ஆய்வு நூலை முதலில் தட்டச்சுப் படியிலும், பிறகு அசலான அச்சிலும் வெளியிட்டார். ஆசிய உற்பத்தி முறை என்பது குறித்த ஆய்வு நூல் இது. மார்க்சியத்தில் ஆழ்ந்த படிப்பறிவும், தனித்தமிழ் சார்பும் கொண்ட நண்பர் சோதிப்பிரகாசம் எப்பொழுதோ எழுதிய கட்டுரை ஒன்றை என் பழைய கோப்புகளிலிருந்து இப்பொழுது கண்டெடுத்தேன். தமிழ் ஆன்மாவைத் தேடி என்ற தலைப்பில் இக்கட்டுரை இங்கு வெளியாகிறது.

## மெய்ப்பொருள் காணும் முறை உணர்த்தும் நூல்

சோவியத்திலிருந்து கம்யூனிசப் பூதத்தை விரட்டியடிக்க பனிப்போர் தொடுத்த உலக முதலாளியம் (அதன் தலைமைக் கேந்திரமான அமெரிக்க மேலாதிக்க வாதம்) பல குட்டிப் பூதங்களைத் தூண்டிக் களபவனி வரவிட்டது. மக்களின் அடிப்படை பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணப் - பலவற்றையும் அரசியல் போராட்டமாக்கிய மாக்ஸியரின் ஆயுதத்தையே தனக்கானதாக மாற்றுவதற்கு முதலாளியம் முயற்சித்தது; இது இயற்கையானதுதான், மக்கள் சக்தி கையாளும் போர் ஆயுதத்தை மக்கள் விரோத சக்திகள் பயன்படுத்தி முறியடிப்பதும், புதிய போராட்ட உத்திகளை விடுதலை நாடும் சக்திகள் கண்டு பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்படுவதும் வரலாறு நெடுகத் தொடர்வன. அத்தகைய நெளிவு சுழிவுகளுடன் தான் வரலாற்று இயக்கம்.



படிப்பகம்

www.padippakam.com

ஒடுக்கப்படும் மக்களின் தேசிய உணர்வுகள், மத உணர்வுகள், சாதிய விடுதலை, பெண் விடுதலை என்பன இருபதாம் நூற்றாண்டில் மக்கள் விடுதலைப் போராட்டங்களுக்கு அனுசரணையாக இருந்தவை. அவற்றுக்குள் உலக முதலாளியம் ஊடறுத்துப் பிளவுபடுத்தி மாக்ஸியத்தை எதிர்க்கும் சக்திகளாக அடிப்படைவாதிகள், சாதியச் சங்கங்கள், தேசியவாதிகள், பெண்ணியவாதிகள், இனவாதிகள் எனப்பல கூறுகளை ஏற்படுத்தி அழிவுப் போர்களுக்கு வழிகோலியுள்ளது. இக்கெட்ட போரிடும் நிலை முதலாளியத்தை அமைதியாக வாழவும் ஆளவும் விடவில்லையாயினும் அவர்கள் இவற்றைப் பிச்சைக்காரன் புண்போல வைத்துக்கொண்டு தனியுடைமையை நீடிக்க விரும்புகிறார்கள். அமைதியான வாழ்வுக்காக தமக்கு மட்டும் சுகவாழ்வைத்தரும் தனியுடைமையை இழப்பதைவிடக் காலமெல்லாம் வன்முறைக் கலாச்சாரத்துக்குள் தமது சுகபோகத்தைப் பாதுகாப்பது எப்படி என்பதே அவர்கள் அக்கறை. இந்தக் குட்டிப்பூதங்கள் (அடிப்படைவாதம், தேசியவெறி, சாதிவெறி, குறுகிய பெண்ணியவாதம் ஆகியன) வெறியாட்டு நிகழ்த்தி ரணகளமாக்குவது உழைப்பவர் மண்களில் தாம். சொத்துடையோரின் சொர்க்கபுரிகள் பலமான அரசு யந்திரக் கோட்டைகளால் அரணிடப்பட்டவை.

இத்தகைய சூழலில் குட்டிப் பூதங்களின் அதிதீவிரப் புரட்சிக் கோசங்கள் மாக்ஸியத்தின் விடுதலை மார்க்கத்துக்கு இடையூறு விளைவிப்பது மெய். குட்டிப்பூதங்கள் மக்களை தமக்குள்ளே முட்டிமோதி அழிய வழிகோலுவன. அனைத்து சக்திகளும் அணிதிரண்டு 'ஒரு பொருள் தனியெனும் மனிதரைத்' தகர்த்து, பொதுவுடைமைப் புத்துலகம் படைப்பதால் மட்டுமே மக்களுக்கு விமோசனம் கிட்டமுடியும் என்பது மென்மேலும் வரலாற்று அனுபவங்களாகின்றன. இந்த மார்க்கத்துக்கு மாக்ஸியம் மட்டுமே வழிகாட்ட முடியும். முதலாளித்துவம் உலகின் பெரும் பகுதியை வெற்றிகொண்டு, பாட்டாளி வர்க்கம் விடுதலைப் போர்களைத் தொடுத்த ஆரம்பகட்டத்தில் மாக்ஸியம் பிறந்தது. ஒருநாட்டில் பெரு மூலதனங்கள் ஐக்கியப்பட்டு, ஏகபோக மூலதனமாகி, அது தனது தேச எல்லை கடந்து ஏற்றுமதி செய்யப்பட்ட காதிபத்திய சகாப்தம் ஏற்பட்டு, பாட்டாளி வர்க்கப் புரட்சிகள் வெடித்த சூழலில் லெனினிசம் என்ற வளர்ச்சியை மாக்ஸியம் எட்டியது. அந்த மாக்ஸிய - லெனினியத்தைப் பின்தங்கிய அரைக்காலனி - அரை நிலப்பிரப்புத்துவ நாட்டில் பிரயோகித்துச் சாதித்த மாசேதுங் சிந்தனை இன்னும் வளம் சேர்த்துவிட்டுள்ளது. மாக்ஸியத்திற்கு, வளர்ச்சியடைந்த முதலாளித்துவத்தையுடைய ஐரோப்பிய நாடுகளில் புரட்சி சிந்திக்காத காரணங்கள்ளை ரோசாலுக்சம்பேர்க், கிராம்ஷி, அல்தூசர் போன்ற மாக்ஸிய சிந்தனையாளர்கள் ஆய்ந்து தெளிந்து மாக்ஸிய - லெனினியச் செயல்முறைக்கு மேலும் பொலிவூட்டியுள்ளனர்.


படிப்பகம்

www.padippakam.com

உலக மக்களின் இயக்கப் போக்கின் அனுபவங்களைத் திரட்டி வைத்துள்ள ஆங்கில மொழியிலிருந்து எவை தமிழ்ப்படுத்தப்பட வேண்டும், எப்படி எமது வரலாற்றுச் செல்நெறிக்குப் பொருத்தப்பாடுடையதாய்ப் பிரயோகிக்க வேண்டும் என்ற நுண்மான் நுழைபுலம் இன்றி பல சந்தர்ப்பங்களில் வெறும் சக்கைகளாய் வருவன தமிழின் துரதிர்ஷ்டம். இத்தகைய அவலத்துக்குள்ளே சில நல்ல நூல்கள் வருவது ஒரு ஆறுதல். ஞானி தொகுத்து வெளிவந்துள்ள "மார்க்சியம் - தேடலும் திறனாய்வும்" இந்த வரிசையில் விதந்துரைக்கத்தக்க நல்லதோர் முயற்சி. மாசேதுங், கிறிஸ்டோபர் காட்வெல், எம். கோவிந்தன், மிசேல்ஃபூக்கோ, இவான் இலிச் போன்ற சிந்தனையாளர்கள் புதிய பரிமாணங்களுடன் தமிழுக்கு வரவைக்கப்பட்டுள்ளார்கள். கூடவே இன்றைய சவால்களை முகங்கொள்ளும் பல கட்டுரைகளையும் கொண்டுள்ளது இந்நூல்.

"மார்க்சியம் கற்போம்" என்ற தலைப்பில் நூல் அறிமுகக் கருத்தாகக் கூறும்போது ஞானி இப்படிக் கூறுகிறார் : "நிகழின் இந்தத் தொகுப்புப் போல பத்து அல்லது இருபது தொகுப்புக்கள் தமிழுக்கும் மாக்சியத்திற்கும் தேவை. கட்சி சார்ந்தவர்கள் செய்யாததைத் தனி இயக்கங்களும், தனி நபர்களும் இன்றும் செய்து வருகின்றனர். தெரி ஈகள்டன், ரேமான் வில்லியம்ஸ் முதலியவர்கள் வருகையால் கிருஸ்டோபர் காாடுவெல் பழமைவாதியாக மாறிவிடவில்லை. இதைப் போலத்தான் மார்க்சியர் என்று அறியப்படும் நூற்றுக்கணக்கான அறிஞர்கள் முதலியவர்களைத் தமிழுக்கு நாம் தரவேண்டும்." (ப. 14)

இந்த நோக்கு மிகுந்த முக்கியத்துவமுடையது. மாக்ஸியத்தின் பன்மைப் பரிமாணத்தை முதன்மைப்படுத்தத்தவறி, புரட்சி எழுச்சிக்கு அறைகூவவும், நட்பு சக்திகளை மறந்து புரட்சிகர சக்திகள் மத்தியில் (மட்டும்) வேலை செய்வதும், பாட்டாளிவர்க்க அரசைப்பற்றி மட்டுமே கற்பதும் அதை வென்றெடுக்க மார்க்கம் தேடுவதும் என்று பல கம்யூனிஸ்ட் கட்சிகள் செயற்பட்டு வந்துள்ளன. இது ஒருவகையில் தவிர்க்கவியலாதது என்பதை ஏற்கும் அதேவேளை இன்றைய பின்னடைவையும் கவனித்தல் அவசியம். சுரண்டலைத் தகர்த்து சமத்துவத்தை நிலைநிறுத்துவதற்கு முனைப்பாகச் செயற்பட்ட பலநூறு போராளிகள் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தமையைக் குறைத்து மதிப்பிடாமலே கட்சி மாக்ஸியரிடம் தோன்றிய ஒற்றைப் பரிமாண நோக்கை அலசவேண்டும். அவர்கள் வெற்றியீட்டித்தரும் மாக்ஸிய படைப்புகளுக்கே அதிக முக்கியத்துவம் தருவது தவிர்க்கமுடியாமல் நேர்ந்த வரலாற்று விபத்து. இன்று தோல்விகளுக்கான காரணங்களைத் தேடும்போது கட்சி மாக்ஸியர்கள் காண (முக்கியப்படுத்தத்) தவறிய வேறு மாக்ஸியர்கள், காணாமல் விடப்பட்ட கோணங்களைக் காட்டியவர்கள் என்ற வகையில் கவனிக்கப்படுவதும் அதேவகை வரலாற்று நிர்ப்பந்தம்தான்.


படிப்பகம்

www.padippakam.com

மாக்ஸியச் சிந்தனையாளர்களின் படைப்புகளை 'வெற்றியடைந்த - தோல்விக்காரண' சிந்தனைகள் என வேறு பிரிப்பது சில தெளிவுகளைக் கண்டறிவதற்காக மட்டுமே; மாக்ஸியச் சிந்தனையாளர்களைத் தர வேறுபாடு செய்யும் நோக்கத்துடனல்ல. சில நாடுகளில் புரட்சி வெற்றி பெற்றன, அங்கே பெற்ற அனுபவங்களின் திரட்சி ஒருவகையின; புரட்சியெழுச்சி வடிந்தபோதிலும் விடாமல் மாக்ஸியத்தைப் பிரயோகிக்க முயன்ற சிந்தனையாளர்கள் தத்தமது சமூகத்தைப் பகுப்பாய்வு செய்யும்போது புதிய ஒளிகளைப் பாய்ச்சியுள்ளனர். அவை இன்னொரு வகையின. இந்தப் பங்களிப்புகளில் ஒன்றை மதித்து மற்றதை நிராகரித்தால் இனிச் செயற்பட வேண்டிய பாதைக்குப் பெருங்கேடு என்பதை உணர்தல் அவசியம். "மாவோ நெறிக்கு வசப்படாத நண்பர்கள்தான், மார்க்சியத்தை விட்டு வெளிச் செல்வதும், பிறகு உள்வருவதுமாக இருக்கின்றனர்" என ஞானி காட்டும் (ப. 13) சூழல் கவனிப்புக்குரியது. இத்தகைய சில நண்பர்கள் பல சந்தர்ப்பங்களில் நவ மாக்ஸியம் என்ற பெயரில் 'மாற்று' சிந்தனையாளர்களை முன்னிறுத்தி மாக்ஸியத்துக்கு கேடு விளைக்கும் நோக்குடன் முனைந்ததை எண்ணும்போது 'வெற்றிபெற்ற - தோல்வி காரண' சிந்தனைகளைப் பற்றிப் பேசவேண்டியுள்ளது. இன்று சோஷலிஸம் பின்னடைந்தது ஏன் என்பதற்கான காரணிகளை எந்த ஒரு தனிச் சிந்தனையாளரும் விளக்கிவிடவில்லை. கூட்டான தேடல் தொடரப்பட வேண்டும்.

அதற்கு முயலும் இந்த நூல் வழங்கும் தேடலைக் கூறும்போது "நான் கற்றது மார்க்சியத்திலும் கைமண் அளவுக்குத்தான். மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், மாவோ முதலியர்களுக்குள் திரும்பத் திரும்ப செல்லும்பொழுது தான் அற்புதங்கள் சேகரிக்க முடியும்" (ப. 13) என ஞானி கூறுவது கவனிப்புக்குரியது. மாக்ஸியத்தை மறுகட்டமைப்பு செய்ய முயல்வதற்கு முன்னர் மாக்ஸியத்தைக் கிரகிக்க வேண்டும். பின்னர் மாற்று அல்லது புதிய சிந்தனையாளர்களைப் படிக்கவேண்டும். மீண்டும் மாக்ஸிய அடிப்படைகளிடம் வரவேண்டும். இவற்றோடு, நடைமுறைப் பிரயோகத்தைத் தொடரவேண்டும். மாக்ஸியத்தை நூல்களின் வழிக் கற்பது பத்துவீதம் எனில் தொண்ணூறு வீதம் நடைமுறைப் பிரயோகத்தின் வாயிலாகவே கற்கமுடியும். மாக்ஸியம் வெறும் வியாக்கியானம் புரிய உதவும் தத்துவமல்ல, செயலுக்கு வழிகாட்டும் உலக நோக்குச் சார்ந்தது என்பதால் நடைமுறையைப் பிரிந்து மாக்ஸியத்தைத் தெளிந்து விடமுடியாது.

*- ந. இரவீந்திரன்*

| | | |
|---|---|---|
| நூல் | : | மார்க்சியம் - தேடலும் திறனாய்வு (நிகழ் கட்டுரைகள்) |
| தொகுப்பு | : | ஞானி (கி. பழனிச்சாமி) |
| பதிப்பு | : | புதுமலர் படைப்பகம், கோயமுத்தூர் - 641 045.<br>டிசம்பர் 2001 (வள்ளுவராண்டு 2031) |
| விலை | : | ரூ. 80/- |

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவில் தத்துவம் கலாச்சாரம்

இந்தியச் சமூக சாரத்தைக் கண்டறியும் மறுவாசிப்புப் பண்புடன் வெளிவந்துள்ள நூல், "இந்தியாவில் தத்துவம் கலாச்சாரம்"; 'நிகழ்' சஞ்சிகைகளில் வெளிவந்த கட்டுரைகளிலிருந்து ஒரு குறித்த ஒத்திசைவுடன் ஞானி அவர்களால் தொகுக்கப்பட்டு, காவ்யா வெளியீடாகக் கிடைத்திருக்கிறது. இந்த நூலினுள் பிரவேசிக்கையில் இந்தியத் தத்துவ ஞான வரலாற்றுடன் எமது வாசிப்பைத் தொடங்குவோம். இந்தியச் சமூகம் வந்தடைந்த விஞ்ஞான - கல்வியியல் - பொருளியல் - அரசியல் - நீதியியல் - சமூகவியல் ஆகியவற்றிலான அறிவுவளர்ச்சியும் பிரயோக முறைமையும் குறித்த வியத்தகு உண்மைகளைக் கண்டு பிரமிப்போம். 'இந்து நெறியின்' விசேடித்த பண்பு குறித்த விழிப்பை வந்தடைவோம். ஐரோப்பியப் பகுத்தறிவுவாதம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தாக்குறவு கொண்டு உருப்பெற்ற லோகாயத மறுபிறப்பைக் காண்போம். நவீன நீதியியல் ஏற்படுத்திய மாற்றங்கள் திகைப்பூட்டும். இந்துத்துவா ஏற்படுத்தும் அவலத்திலிருந்து மாறுபட்டதாய் விடுதலை நெறிசார்புடைய இந்து சமயப் பக்கம் தெரியவரும். மேலைச் சமூகத்திலிருந்து வேறுபடும் தன்மைகள், வர்ணாசிரமத்தின் உண்மை அர்த்தம், தலித் எழுச்சி என்பன கவனத்தை ஈர்க்கும். அம்பேத்கார், காந்தியிலிருந்து குன்றக்குடி அடிகளார் வரையான பார்வை ஒன்று கிடைக்கும் (கட்டுரைகள் தர்க்கிப்பன எமக்குள் ஏற்படுத்தும் தாக்கத்தினூடாக எமக்கேயெமக்கான 'ஒரு பார்வை'!). ஆணாதிக்கச் சமூகம் தொடக்கிய 'புருசசூக்தம்' பற்றிய அடிப்படை கிளர்த்தப்படும். முடிவில் சமூக மாற்றத்துக்கான அவசியப் பணிகள் குறித்த தூண்டலுடன் புத்தகத்தை மூடலாம், எமது அகம் அகலித்துப் பயணத்தை நாமே மேலும் தொடர ஒரு உத்வேகம் பெற்றிருப்போம்.

இந்தப் பயணத்தில் ஒரு வாசிப்பு தனக்குள்ளே கொண்ட தர்க்கங்கள் இங்கே ஊடறுக்கும். இந்த வாசிப்பு மேலும் பல சாத்தியங்களைத் தேடுவதற்கு தூண்டுவதாய் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் ஏற்கனவே நிலைபேறடைந்திருந்த சிந்தனை முறையைத் தகர்த்து, எதையும் தேர்ந்து தெளிந்து காமஞ்செப்பாது கண்டது மொழியும் திண்ணிய மனங்களைப் படைக்கும் கட்டுரைகள் என்ற வகையில் இங்கே எழுப்பப்படும் சில ஐயங்கள் படைப்பின் நோக்கத்துக்கு வலு சேர்ப்பனவாகவே அமையும்.

*- ந. இரவீந்திரன்*

நூல் வெளியீடு : காவ்யா - பெங்களூர்

தொகுப்பு : ஞானி (கி. பழனிச்சாமி) விலை : ரூ. 65/-

படிப்பகம்

www.padippakam.com

## இருபது நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை - இருபதாம் நூற்றாண்டுப் பார்வை

### ஞானியின் நூல் : இரு பார்வைகள்

தங்கள் "இருபதாம் நூற்றாண்டு . . . . . . பார்வை" நூல் பெற்றேன். படித்து முடித்தேன். தெளிந்த எண்ணங்கள். பன்முகப் பார்வையுடன் எழுதியுள்ளீர்கள். தமிழரின் விடுதலை என்பது எவ்வளவு செய்திகளை உள்ளடக்கியதாக இருக்கின்றது என்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. அத்தகையோர் புரிந்து கொள்ளுமாறு எல்லாவற்றையும் விளக்கியுள்ளீர்கள்.

20 ஆம் நூற்றாண்டிலேயே நாம் விழிப்படைந்தோம் என்பது உண்மையே ... வழிவழியான மடமைகளை நீக்கி அறிவு பெற்றது இக்காலத்திலேயே.

ஆரிய நாகரிகம் வாழ்வியலை ஒதுக்கி விட்டுப் போலி ஆன்மீகம் பேசியது என்ற கருத்தும் மிக மிகச் சரியானதே.

மாந்தநேயம் சமதர்மத்தினின்று ஊற்றெடுக்கின்றது என்பதும் உண்மை.

தமிழியக்கத்தின் கருப்பொருள் காலத்துக்குக் காலம் வேறுபடுவதை நன்கு சுட்டிக் காட்டியுள்ளீர்கள்.

காட்சி, படிமம் ஆகியவை இக்காலப் பாடல்கட்கு அவ்வளவு இன்றியமையாதவை என்பதையும் சுட்டியுள்ளீர்கள்.

பின் நவீனத்துவம் என்ற தொடர் Post Modernism என்ற தொடரின் தமிழாக்கம் என அறிகின்றேன். புதுக்காலத்துக்கு நவீனத்துக்குப் பின் - அல்லது புதுக்காலத்துக்கு அடுத்து என்று இதைத் தமிழாக்கியிருக்கலாம்.

இத்தகைய பார்வை இலக்கியத்தைப் புதிய காலத்துக்கேற்பப் புரிந்து கொள்ளவும், வழக்கத்துக்கு அடிமைப்பட்டு போகாமல், இருக்கும் குறையை உணர்த்தவும் பயன்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் நீங்கள் ஒரே படியாய்ப் புதிய இப்பார்வைக்குள் மூழ்கிவிடவும் இல்லை. அதன் குறையையும் சுட்டுகிறீர்கள்.

மார்க்சியமும் தமிழலக்கியமும் பற்றிக் குறிப்பிடுகையிலும் தங்கள் நடுவுநிலையே புலப்படுகின்றது. தமிழ் மறுமலர்ச்சியாளர்களின் குறுகிய பார்வையினையும் மார்க்சியவாணரின் தமிழன்பில்லாப் போலி முற்போக்கையும் சுட்டிக் காட்டியுள்ளீர்கள்.

படிப்பகம்

www.padippakam.com

தமிழ் மறுமலர்ச்சி நிலைக்குப் பாரதியோடு பாரதிதாசனும் காரணம் என்பதை இருட்டடிப்புச் செய்பவர்கள் நடுவில், பாரதிதாசனின் எண்ணங்களையும் மெய்மை நோக்கிற் பார்த்து அவருக்குக் கிடைக்க வேண்டிய பங்கு கிடைக்கச் செய்திருக்கின்றீர்கள்.

புராணங்கள் பல மடமைக் கருத்துகட்குச் சப்பைக்கட்டுக் கட்டினாலும், அவற்றை நாம் புதிய விளக்கங்கட்கு உட்படுத்திப் பயன்பெறலாம் என்பது விடுதலையான உள்ளத்தின் பார்வையே ஆகும். பக்தி உணர்வை வெறும் வழிபாட்டுணர்வாகப் பாராமல் காதலாகவும் பார்க்கலாம் என்பது ஒரு புதிய கோணத்திலிருந்து பார்ப்பதேயாகும்.

தமிழிலக்கியத்தில் அறம் சமதருமத்திலிருந்து எழுந்தது. ஆதிக்க உணர்வைக் கடிந்து மாந்தனை மேல் கொணர்கின்றது.

சிறந்த பாவலன் தனை அறியாமலேயே பன்முகப் பொருள் தருமாறு தன் படைப்புகளை உருவாக்குகின்றான் என்ற உண்மையையும் எடுத்துக் காட்டியுள்ளீர்கள்.

பேச்சு மொழியிலுள்ள பாடற் கூறுகளை நாம் போற்றுதல் வேண்டும் என்று கூறியிருப்பதும் நன்றே.

அகத்திணைப் பாடல்களின் சிறப்பைப் போலி முற்போக்காளர் மறுக்கமுடியாதவாறு அவற்றின் உயிர்ப்பினை எடுத்துக் காட்டியுள்ளீர்கள்.

பக்தி இலக்கியத்திலும் பதர்களிடையே மணிகள் இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளீர்கள்.

வெறுந் தமிழ்ப்புலவனாக நின்று இலக்கியத்தைப் பார்ப்பது பிழை. இருபதாம் நூற்றாண்டின் விடுதலை பெற்ற ஆனால் வேரறுந்து போகாத் தமிழனாக நின்று பார்த்தல் எவ்வளவு இன்றியமையாதது என்பதற்கு நீங்களே எடுத்துக்காட்டாக நிற்கின்றீர்கள்.

நடுநிலையான நெஞ்சத்தோடும் விரிந்த பார்வையோடும் தமிழிலக்கியத்தைப் பார்ப்பவர்கள் மிகமிகக் குறைவு. அத்தகையோருள் நீங்கள் முதல் நிற்கின்றீர்கள் எனலாம்.

- *ம.இலெ. தங்கப்பா,* புதுவை

●

இந்நூலில் 11 சிறு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட காலமாக இருந்து வரும் - வளர்ந்து வரும் தமிழ் இலக்கியத்தை இந்த நூற்றாண்டு மனிதன் எவ்வாறு பொருள் கொள்கிறான் என எண்ணிப் பார்க்கப்பட்டுள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

கட்டுரைகள் தனித்தனியானவை - தொடர்பில்லாதவை - போன்று தோன்றினாலும் - இவற்றுக்கிடையில் இவை எல்லாவற்றையும் இணைக்கின்ற மூலச் சரடு ஒன்று இருக்கின்றது; அது மிக அழுத்தமாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கட்டுரைகளில் ஆங்காங்கு முன்வைக்கப்பட்டிருக்கும் கருத்துகளில் எனக்கும் உடன்பாடே; பெரும்பாலும் நம் இருவர் பார்வையும் ஒத்திருப்பதுபோல் தோன்றுகின்றது. ஒரே ஒரு அடிப்படையான வேறுபாட்டை மட்டும் என்னால் சுட்டாமல் இருக்க முடியவில்லை. கட்டுரைகளின் ஆசிரியராகிய தாங்கள் தமிழ் இலக்கியங்களிலும் மார்க்சியச் சிந்தனைகளிலும் ஊறித் திளைத்து வாழ்ந்து அனுபவம் பெற்றவர்கள்! நானோ எல்லாவற்றிற்கும் வெளியிலிருந்து இலக்கியங்களைச் சுவைத்தவன்; படித்தவன்; படிப்பித்தவன். குடும்பப் பின்னணி காரணமாகவோ வேறு ஏதோ ஒன்றின் காரணமாகவோ - என்னால் அதனை உறுதியாகக் கூற முடியவில்லை - ஆன்மீகத்தில் ஆழ்ந்த நாட்டம் கொண்டவன்; தங்களைப் போன்று இறைத் தத்துவத்தைக் கேள்விக்குறி ஆக்காதவன் - நம்பிக்கையோடு வாழ்பவன். இப்படித் தங்களோடு மாறுபட்ட ஒரு வாழ்வியல் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டிருக்கின்ற நான், தங்கள் கருதுகோள்கள் பெரும்பாலானவற்றோடு இசைந்து செல்வது வியப்புக்குரியதாகச் சிலர் கருதலாம்; நான் அப்படிக் கருதவில்லை.

காரணம் உண்மையான நாத்திகனுக்கும் உண்மையான ஆத்திகனுக்கும் அடிப்படையில் வேறுபாடுகள் இல்லை. உண்மையான ஆத்திகன், கண்ணன் கீதையில் குறிப்பிட்டிருப்பது போன்று, இந்த உலகத்தையே வாசுதேவனின் குடும்பமாகப் பார்க்கின்றான். அவனுக்குத் தின்னும் சோறும் பருகும் நீரும் உண்ணும் வெற்றிலையும் எல்லாம் வாசுதேவனே! கூத்தர்கள் குடமெடுத்தாடில், கோவிந்தன் என்று அவன் கூவுவான்; நல்ல மழையைக் கண்டால், நாரணன் வந்தான் என்று கருதி, மழையில் நனைவான் என்கிறார் நம்மாழ்வார். ஆக, எல்லாம் ஒன்றே; வேறுபாடுகள் நம் அறியாமையால். ஆணவத்தால் ஏற்படுவனவே.

எத்தனை கோடி இன்பம் படைத்தாய், இறைவா! இறைவா! என்று எக்காளமிடுகிறான் பாரதி. ஆனால், எல்லார்க்கும் அந்த இன்பங்கள் கிட்டவில்லையே என்று எண்ணும்போது, நம் அமைப்புகள் மீதுதான் நமக்குக் கோபம் வருகின்றது. குறிப்பாக நாம் வருணாச்சிர அமைப்பின் மீது கோபம் கொள்கிறோம். ஆப்பிரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வருணாச்சிர அமைப்புகள் இல்லையென்றாலும், சியாராலயோனிலும் அங்கோலாவிலும் பால்கன் நாடுகளிலும் செசன்யாவிலும் ஆப்கானித்தாலும் செரேயாவோவிலும்

www.padippakam.com

இன்னும் எத்தனையோ நாடுகளிலும் மக்கள் அரசியல் கட்சிகளின் பெயரால் - சன நாயகத்தின் பெயரால் - சமயங்களின் பெயரால் - கொடுமைகளுக்கு ஆளாகின்றனரே! நான் சுட்டிக் காட்ட விரும்புவது, உலகம் முழுவதும் தன்னலமும் கயமையும் பெருகி வருகின்றன; எந்த மதமும் மனிதர்களைப் பிளவுபடுத்தும்படி கூறவில்லை. குறிப்பாக, இந்து சமயம் அவ்வாறு சொல்லவில்லை. தன் மதம் தான் உயர்ந்தது என்று எந்த உண்மையான இந்துவும் கருதமாட்டான். அவனுக்கு உலகம் முழுவதும் கடவுள்: "ஏகம் ஸத்; விப்ரா பஹுதோ வதந்தி". கடவுள் ஒருவரே, அவரை கற்றவர்கள் பலரும் பலவாறு அழைப்பார்கள் என்ற உபநிடத வாக்கியம் என்னும் நினைவில் இருக்கும். இதனையே நம்மாழ்வாரும் அழகாக அருளுகின்றார் :

அவரவர் தமதம அறிவறி வகைவகை,
அவவரர் இறையவர் எனஅடி அடைவர்கள்;
அவரவர் இறையவர் குறைவிலர்; இறையவர்;
அவரவர் விதிவழி அடையநின் றனரே (திருவாய் : 1:1:5)

எனவே, நான் வற்புறுத்த விரும்புவது "போம்பழியெல்லாம் அமணன் தலையோட" என்று இடைக்காலத்தில் நடந்துகொண்டது போல, இந்த நூற்றாண்டிலும் எல்லாவற்றுக்கும் சமயங்களையும் சாத்திரங்களையும் மட்டும் பழித்துக் கொண்டிருக்கவேண்டாம் என்பதே. சாக்ரடீஸ் சொன்னது போன்று ஒவ்வொரு வரும் (Know thyself) தன்னைத்தானே ஆத்ம பரிசோதனை செய்து கொண்டால், மக்கள் நலம் பெறுவர் என்று நம்புகின்றேன்.

இனி, சில குறிப்பிட்ட கருத்துகள் பற்றி என் எண்ணங்களைப் பதிவு செய்கின்றேன்.

1. 20-ம் நூற்றாண்டில் பக். 9 இல் சில இலக்கியங்கள் ஏன் முன்னுக்கு வந்தன; சில இலக்கியங்கள் ஏன் புறக்கணிக்கப்பட்டன என்று வினா எழுப்பியுள்ளீர்கள். நல்ல கேள்வி. அரசியல் ஆதரவையும் பரிந்துரையும் பெற்று ஒரு காலத்தில் ஓகோ என்று புகழப்பட்ட இலக்கியங்கள் - அந்த வரலாற்றில் பின்னணி அடிபட்டுப் போன பிறகு, ஒதுக்கப்பட்டு விடுகின்றன. ஒட்டக்கூத்தர் பாடிய உலாக்களைப் பார்த்தால், இப்படித்தான். திரிபுவன சக்கரவர்த்திகளின் ஆதரவில் கஹாட்சசன் என்றும் கவிசார்துபௌமர் என்றும் கவிச்சக்கரவர்த்தி என்றும் தன்னை விளம்பரப்படுத்திக் கொண்ட ஒட்டக்கூத்தரின் நூல்கள் உண்மையான கவித்துவம் இல்லாததால் பிற்காலத்தில் புறக்கணிக்கப்பட்டன. மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதுவோ என்று கேள்வி எழுப்பிய கம்பனின் காவியம் நிலைபேறு பெற்றது. காரணம், அவன் தெய்வப் புலமை அல்லவா?

www.padippakam.com

2. பக். 10. நிகழ்காலம் மற்றும் எதிர்காலத் தேவைகள்தான் பழங்கால வரலாறு, மற்றும் இலக்கியப் பார்வையைத் தீர்மானிக்கின்றன. உண்மைதான், தமிழின் எழுச்சிக் காலத்தில் சேரன் செங்குட்டுவனின் வடநாட்டுப் படையெடுப்பு எவ்வளவு பெருமிதத்தை நம்மிடம் ஊட்டியது? சுதந்திரப் போராட்ட காலத்தில் வீரபாண்டியக் கட்டபொம்மன் எவ்வளவு புகழ் பெற்றான். செங்குட்டுவனையும் கட்டபொம்மனையும், நிகழ்காலத்தில் அர்த்தப்படுத்திக் கொண்டதால்தான், அவர்கள் பெரும்புகழ் பெற முடிந்தது. சங்கப் பாடல்கள் தொகுக்கப்பட்டிருக்கும். தொகுத்த காலத்தில் அந்தப் பழம்பாடலுக்கு ஓர் அர்த்தம் இருந்ததுதான் காரணம். ஏன்? தேவாரத் திருமுறைகளுக்கும் ஆழ்வார்களின் பாசுரங்களுக்கும் சோழர் பேரரசுக் காலத்தில் ஓர் அர்த்தமும் புதிய தேவையும் ஏற்பட்டதால்தான், அவை தொகுக்கப்பட்டன.

3. பக். 21. தொல்காப்பியருக்குப் பிறகு அவரது நெறியில் இலக்கிய ஆய்வுகள் தொடரவில்லை, தொடர்ந்திருந்தால் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களிலும் முற்காலக் கோவை நூல்களிலும் இடம்பெறும் பிறர்மனை நோக்காத பேராண்மை போன்றன புரிந்து கொள்ளப்பட்டிருக்கும். பதினெண்கீழ்க் கணக்கில் இடம் பெறும் அகப்பொருள் நூல்களும் பிற்காலக் கோவை நூல்களும் மக்களின் வாழ்க்கைப் போக்கிலிருந்து விலகி - வெறும் இலக்கிய மரபாக வளர்ந்து விட்ட உண்மையைக் கண்டிருக்க முடியும்.

4. பக். 36. சோழர்களின் இலங்கைப் படையெடுப்பை நியாயப்படுத்தும் போக்காகக் கம்பராமாயணம் பாடப்பட்டது என்னும் கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. (முத்தையா அவர்களின் நூலைப் படிக்கவில்லை; அது எப்போது, யாரால் வெளியிடப்பட்டது என்று தெரிவித்தால் நன்றி உடையவனாக இருப்பேன்) கம்பன் கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன்; நிச்சயமாக அவன் 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் அல்லன் என்று என் உள்ளுணர்வு உரைக்கின்றது; என்னால் இன்னும் நிறுவ முடியவில்லை.

5. பக். 26. அதுபோன்றே வஞ்சிக் காண்டமும் இளங்கோ அடிகள் எழுதியது அன்று என்பதனையும் ஏற்க இயலாது. சிலப்பதிகாரம் பலர் கருதுவது போன்று கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது அன்று. பல்லவர் காலத்துக்கு முன்பும் சங்க காலத்துக்குப் பிறகும் (கி.பி. 250 - 600) எழுதப்பட்டிருக்கலாம். மூன்று உண்மைகளை விளக்குவதற்காகச் சிலப்பதிகாரம் எழுதப்பட்டதாக, பதிகம் கூறினாலும், உண்மையில் அது பத்தினி வழிபாட்டை வற்புறுத்தும் காவியம். வஞ்சிக் காண்டம்

படிப்பகம்

www.padippakam.com

இல்லாவிட்டால் கண்ணகி தெய்வம் ஆவது எப்படி? "தென்னவன் தீதிலன் . . . யான் அவன் தன் மகள்" என்று அவள் கூறியதால் அல்லவா, கடல்சூழ் இலங்கைக் கயவாடு முதல் இந்திய நாட்டு மன்னர்கள் எல்லோரும் அவளைத் தம் தெய்வமாக ஏற்றிப் போற்றுகின்றனர்.

6. பக். 56. தமிழ் இலக்கியத்தில் காணும் பன்முகப் போக்குகளை ஒருமுகப்படுத்திக் காண்பது சாத்தியம் தானா? என்று வினா எழுப்பி உள்ளீர்கள். சாத்தியம் தான் என்று நான் கருதுகிறேன்.

உதாரணமாக, பாண்டியர்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள்; தொகை நூல்களாகப் பழம்பாடல்களைத் தொகுத்தார்கள். பழங்காலத்தில் தமிழ்ப் பண்பாட்டின் மையமாக மதுரை இருந்தது. சோழர்கள் காலத்தில் நிலைமை மாறுகிறது. தேவாரத் தொகுப்புப் பணி, திவ்வியப் பிரபந்தத் தொகுப்புப்பணி சோழ நாட்டில் சோழர்களின் ஆதரவில் நடைபெறுகின்றன; அவர்களின் ஆதரவில் புத்தமித்திரம், பவணந்தி முனிவர், அமிதசாகரர் போன்றோர் தமிழுக்குப் புதிய இலக்கணங்கள் எழுதுகின்றனர். ஆகவே, தமிழை வளர்த்தவர்கள் யார் என்ற கேள்வி உரையாசிரியர்கள் காலத்தில் (சோழர்களுக்குப் பிறகு) எழுகின்றது. செந்தமிழ் நாடு என்பதில் உரையாசிரியர்களுக்கு இருக்கும் கருத்து வேறுபாடு எல்லாருக்கும் தெரிந்ததே. தமிழுக்கும் சைவத்துக்கும் பெருந்தொண்டாற்றிய சோழ மன்னர்கள் தங்களைச் சிவ பக்தர்களாக - சிவபாத சேகரன், திருநீற்றுச் சோழன் - என்று பாராட்டிக் கொண்டனர்.

இரண்டாம் பாண்டியப் பேரரசு உருவானபோது (கி.பி. 13 ஆம் நூற்) நிலைமை மாறுகிறது. சோழர்கள் சிவனடியார்கள் என்றால், பாண்டியர்கள் சிவனாகவே மாற்றம் பெறுகின்றனர். சிவபெருமான் வழித்தோன்றல்களே பாண்டிய மன்னர், என மதுரைத் தல புராணங்கள் கதை புனைகின்றன. மதுரையில் சிவபெருமான் 64 திருவிளையாடல்களை நிகழ்த்துகிறான். சோழர்களின் ஆதரவில் எழுதப்பட்ட பெரிய புராணம் 63 அடியார்களின் வரலாற்றைக் கூறுவதை இங்கு எம்மால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. 63 லிருந்து 64 என வளர்கின்றது. மதுரை சிவராசதானி ஆகின்றது.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் தனித்தனி நிகழ்ச்சிகளாக எம்மால் கருத முடியவில்லை. ஒன்றின் தொடர்ச்சியே மற்றொன்று. இப்படி தமிழ் தொடர்ந்து வளர்ந்து வருகின்றது; அந்த அந்தக் காலத்தின் அரசியல், வரலாறு, சமூகச் சூழல்களின் தாக்கங்களை உள்வாங்கிக் கொண்டு வளருகின்றது.

படிப்பகம்

www.padippakam.com

7. பக். 66. திருவிளையாடல் புராணம், கந்தபுராணம் பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள். திருவிளையாடல் புராணம் பற்றி மேலே சுட்டப்பட்டுள்ளது. கந்த புராணம் எம்மைப் பொறுத்தவரை இரண்டாம் பக்தி யுகத்தின் வெளிப்பாடு. இசுலாமியர்களின் ஆட்சியால் அல்லலுற்ற மக்கள் அதுவரையில் தங்களைச் சைவர் என்றும் வைணவர் என்றும் பிரித்துக்கொண்டு வாழ்ந்த நிலையைக் கைவிட்டுவிட்டு, தங்களை ஒரே சமயத்தின் பிரதிநிதியாகக் கருதுகின்றார்கள். இந்துக்கள் என்று அவர்கள் தங்களைக் கூறிக்கொள்ளாவிடினும் முதலாம் பக்தி இயக்கத்தில் காணப்பட்ட எதிர்மறைச் சாடல்கள் இப்போது இல்லை. பலரும் கருதுவதுபோன்று அருணகிரிநாதரின் திருப்புகழை முருகன் பற்றிய பாமாலையாக மட்டும் எம்மால் கருத முடியவில்லை. முருகனைப் பற்றிப் பாடும் பாக்களில் (பெரும்பாலானவற்றுள்) அவர் திருமாலைப் பற்றியும் பாடியுள்ளார். பெரும்பாலும் இரு கடவுளரின் வீரச்செயல்கள் மட்டுமே - குறிப்பாக இராமபிரானின் வீரச்செயல்கள் - பாராட்டப்படுகின்றன. வில்லிபாரதம் கண்ணன் புகழ்பாடும் காவியம் என்றாலும், சிவபெருமானின் பெருமையும் சிறப்பாகப் பேணப்பட்டுள்ளது. கந்தபுராணத்தில் கந்தனின் காதலியாக வரும் வள்ளி நாச்சியார் திருமாலின் மகளாகவே போற்றப்படுவதையும் காணும்போது, முந்தைய பக்தி இயக்கத்திலிருந்து இரண்டாவது பக்தி யுகம் ஒரு பரிணாம வளர்ச்சி பெற்றிருப்பதைக் காண முடிகின்றது.

மொத்தத்தில், தங்கள் நூல் வரவேற்கத்தக்க சிறந்த நூல்; மேலும் இது போன்ற நூல்களின் தேவை என்னால் உணரப்படுகின்றது.

- ***பேராசிரியர் அ. பாண்டுரங்கன்,***
புதுவை.

வெளியீடு : தமிழ்நேயம், கோவை - 9 ரூ. 20/-

## "பிணத்தின் முகங்கள்" (நாவல்)

- ***சுப்ரபாரதிமணியன்***

அந்நிய நிறுவனங்களின் ஆதிக்கம் நமது நாட்டிலும், மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தும் நாசங்கள் குறித்து நாம் இப்பொழுது பெரிதும் கவலைப்படுகிறோம். ஆண்டுக்கு ரூபாய் 2000 கோடி அந்நியச் செலாவணியை நமக்குப் பெற்றுத் தருகிறது என்று திருப்பூர் நகரத்தின் பின்னலாடைத் தொழிலை நம் தலைவர்கள் பாராட்டுவதில் குறை

www.padippakam.com

வைத்துக் கொள்வது இல்லை. "ஒகல்கத்தா" என்று எழுதப்பட்ட நூல் போல இன்று திருப்பூர் நகரம் அழிந்து கொண்டிருக்கிறது. 12/16 மணிநேரம் தொழிலாளர்களிடம் வேலை வாங்கப்படுகிறது. 25000 க்கு மேற்பட்ட சிறுவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு தம் குழந்தமையை இழக்கிறார்கள். தம் ஆளுமை வளர்ச்சிக்கு வழி இன்றி சிறு வயதிலேயே அழிந்து கொண்டிருக்கிறார்கள். பின்னல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பெண்களும் பலவகைகளிலும் நாசமாகிறார்கள். சிலர் மனநோய்க்கு ஆட்படுகிறார்கள். சிலர் சோரம் போகிறார்கள். நொய்யல் நதி சாக்கடையாக மாறி வருகிறது. நீர்வளங்களும், நில வளங்களும் அழிகின்றன. அதிகாரம் செய்யும் முதலாளிகள் மட்டுமல்லாமல், தொழிலாளிகளும் தமக்குள் சிதைந்து கொண்டிருக்கிறார்கள். எந்த விலை கொடுத்தாலும் இந்த நாசத்திற்கு ஈடு செய்ய முடியாது.

இந்தப் பெருங்கதையின் ஒரு குறுக்கு வெட்டுத் தோற்றத்தை இந்த நாவலில் பதிவு செய்திருக்கிறார் சுப்ரபாரதிமணியன். சின்ன வயதில் துள்ளி விளையாடிய கனகு என்ற சிறுவன் கல்விக்கு வாய்ப்பில்லாமல், பின்னலாடைத் தொழிலில் சேர்க்கப்படுகிறான். எந்நேரமும் கிளியோடு அலைந்த சிறுவன், இரவுத் தூக்கமும் இல்லாமல் தனக்குள் முடங்கிப் போகிறான். நாளடைவில் இவனுக்கு என்ன நேருகிறது. எதிலும் இவனுக்கு ஆர்வம் இல்லை. இவனது முகம் பிணத்தின் முகம் ஆகிறது. எத்தனை பேர்களின் முகங்களில் இந்தச் சவக்களை படிகிறது. 150 பக்கங்களில் இந்தச் சிறுவனைச் சுற்றி இயங்கும் நாவல் இறுதி 50 பக்கங்களில் தன் எல்லையை விரிவுபடுத்திக் கொள்கிறது.

பவானி தூக்கில் தொங்குகிறாள். தன் காதலன் கண்ணப்பன் தந்த டீ - சர்ட்டை அணிந்து கொண்டு தொங்குகிறாள். ஒரு பெரிய தொழில் அதிபரின் வாழ்க்கைச் சூழல் தனக்கு வாய்த்த பொழுதிலும் மனநோய்க்கு ஆட்பட்டு தவிக்கிறாள் மீனாட்சி. அதிபர் மாளிகைகளிலும் மனிதர்கள் அழிந்து கொண்டுதான் இருக்கிறார்கள். பூரணி தப்பிவிடக்கூடும். ஒரு கிழவனிடம் தேவகி தன்னை இழக்கிறாள். இவளுக்கு எத்தகைய மண வாழ்க்கை வாய்க்கக்கூடும். அன்றாட வாழ்வுக்குள் தங்களை இழந்துவிடுகின்ற இந்த மனிதர்களுக்கு என்ன எதிர்காலம் இருக்க முடியும்.

அறிவியல் தொழில் நுட்பம் என்றும், நவநாகரிகத்தின் வளர்ச்சி என்றும், முதலாளியம் இல்லாமல் நமக்கு வாழ்வில்லை என்றும், சிலவற்றை இழந்து தான் சிலவற்றைப் பெறமுடியும் என்றும், அரசியலும் தத்துவமும் பேசுகிற கட்சிகளும், தலைவர்களும் நம்மை

www.padippakam.com

என்ன செய்யப் போகிறார்கள். ஏராளமான சித்தரிப்புக்களோடு நடைபெறுகிறது இந்த நாவல். பின்-நவீனத்துவப் பாணியில் அங்கங்கே சில புராணக் கதைகள் மற்றும் மேற்கத்திய கதைகள். நாவலைப் படித்து முடிக்கும்பொழுது நம் நெஞ்சம் கணக்கிறது. சுப்ரபாரதி மணியனுக்கு நாம் நன்றி சொல்வோம். கூவத்திலிருந்து ஒரு கையளவுக்கு அள்ளி நம்மை முகர்ந்து பார்க்கச் சொல்லுகிறார் ஆசிரியர். இது பொறுப்பதற்கு இல்லை நாம் என்ன செய்யப் போகிறோம்?

திருப்பூர் என்பது கூட இப்பொழுது ஒரு குறியீடு மட்டுமே. நாடு முழுவதும் நடைபெறும் இந்தப் பேரழிவைச் சொல்வதற்கு எத்தனை பெரிய நாவல்கள் தேவைப்படும். எத்தனை பேர் இந்தப் பெருங்கதையை எழுத்தில் வடிக்கப் போகிறார்கள்.

- *சமரன்*

வெளியீடு : கனவு, திருப்பூர் ரூ. 80/-

●●●

○ தமிழ்ப் படைப்பாளிகள், தமிழ் அறிஞர்கள் மற்றும் திறனாய்வாளர்களுக்குத் தமிழ் நேயத்தின் அன்பான வேண்டுகோள்.

தமிழகம் எங்கும் பல்கலைக் கழகம் முதலிய அரங்குகளில் தொடர்ந்து கருத்தரங்குகள் நடைபெறுகின்றன. அசலானத் தமிழ் ஆய்வுகள் தற்பொழுது குறைந்து வருகின்றன. முனைவர் பட்டத்திற்கான ஆய்வேடுகள் குறித்து சிறப்பாகச் சொல்ல முடியாது. மாணவர்கள் மத்தியில் தமிழ் உணர்வு தாழ்ந்து வருகிறது. தமிழ் அறிஞர்கள் முதலியவர்கள் தீவிரமான முனைப்போடு செயல்பட்டால் ஒழிய தமிழ் மரபு, தமிழ் வரலாறு, தமிழ் இலக்கியத்தைக் காக்க முடியாது. "தமிழ்நேயம்" அசலானத் தமிழ் ஆய்வுகளை ஊக்குவிக்க விரும்புகிறது. தரமான கட்டுரைகள் நீங்கள் அனுப்பி வையுங்கள். கை நிறையக் காசு கொடுக்கும் வாய்ப்பு நமக்கு இல்லை. மரியாதை கருதி தமிழ்நேயத்தை தொடர்ந்து அனுப்பித் தரவும் இயலாது. தமிழின் ஆக்கத்திற்கு உங்கள் பங்களிப்பையும் நீங்கள் உணரமுடியும். கடுமையான வாசகங்களுக்கு நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். தமிழ்நேயத்திற்கு ஒத்துழையுங்கள். ஆதரவுகளை திரட்டிக் கொடுங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நேயம் - அகமும் புறமும்

- ஞானி

1. தமிழ்நேயம் முதல் இதழில் வெளிவந்த ஈழத் தமிழ் தேசியம் குறித்த நண்பர் இராவணனின் கட்டுரை குறித்துப் பாராட்டுக்களும் விமர்சனங்களும் வந்திருக்கின்றன. கட்டுரை நடுநிலையோடு எழுதப்பட்டுள்ளதைப் பலர் பாராட்டுகின்றனர். போர்ச்சூழலில் மக்கள் நாயக உணர்வுகளை விடுதலைப் புலிகள் பொருட்படுத்த இயலாது என்பதை நண்பர் ஒப்புக் கொள்கின்றனர். விடுதலை இயக்கத்தினருக்கு எதிராக இந்தக் கட்டுரை எழுதப்படவில்லை என்பதையும் ஒப்புக் கொள்கின்றனர். இவற்றுக்கு மேலாக தமிழகச் சூழலில் விடுதலைப் புலிகளை முழு அளவில் ஏற்றுக் கொள்ளும் நண்பர்களின் சிந்தனைக்குத் தான் இந்தக் கட்டுரை முதன்மையான தேவை என்று தமிழாகரன் எழுதினார். ஈழத் தமிழக விடுதலையை ஏற்றுக் கொள்வதில் நமக்குத் தயக்கம் இல்லை. சிங்கள மக்களோடு அரசு அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான விடுதலை இயக்கத்தினரின் முயற்சிகளையும் நாம் மதிக்கிறோம். மார்க்சியர் எப்பொழுதுமே விடுதலை இயக்கத்தை குறை சொல்வதையே கொள்கையாகக் கொண்டிருக்கின்றனர் என்ற கருத்தை நம்மால் ஏற்க முடியவில்லை. சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தாயகம் என்னும் இலக்குகள் என்றும் மரியாதைக்குரியவை. இராவணன் தொடர்ந்து எழுதுவார் என்பது எம் நம்பிக்கை.

2. நர்மதை ஆற்றின் குறுக்கே அணை கட்டுதலை உயர்த்துவதன் மூலம் பல இலட்சம் பழங்குடி மக்களின் வாழ்வைச் சிதைப்பதோடு, இயற்கை வளங்களைத் திட்டமிட்டு அரசும், முதலாளிகளும், அரசியல் வாதிகளும் அழிக்க முனைந்திருக்கிறார்கள். இந்நிலையில் அரசு அதிகாரத்தை எதிர்ப்பதோடு, உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் கடுமையான திறனாய்வுக்கு உட்படுத்துகிறார் மேதா பட்கர்.

அவ்வையாரின் மெய்யியல் சிந்தனைகளையும், அநீதிக்கு எதிராக ஆவேசத்தோடு கிளம்பிய கண்ணகியின் புரட்சிகர உணர்வையும், மணிமேகலையின் தவநெறியையும் மேதா பட்கர் என்ற அற்புதப் பெண்ணிடம் நாம் காண முடியும். இம்முறையில் ஓர் அசலான தமிழ்ப்பெண் என்று நாம் கொண்டாட முடியும்.

3. 3 ஆண்டுகளுக்கு முன்பு காலமான கவிஞர் தேவமகள் அவர்களின் நினைவாக, ஒவ்வொரு நினைவு நாளையும் கவிதை விழாவாகக் கொண்டாடுகிறார், தேவமகள் அவர்களின் கணவரும் கவிஞருமாகிய திரு. நித்திலன் அவர்கள் இந்த ஆண்டு சிறந்த கவிஞர்


படிப்பகம்

www.padippakam.com

என்ற முறையில் கலாப்பிரியா அவர்களுக்கு போய் 10,000 பரிசும், பாராட்டும் வழங்கப்பட்டன. விழாவுக்குத் தலைமை வகித்தவர் தமிழ் அறிஞர் துணை வேந்தர் பேராசிரியர் க.ப. அறவாணன் அவர்கள்.

தலைமை உரை ஆற்றும் பொழுது இரண்டு கருத்துக்களை வெளியிட்டார். ஒன்று 1983-ல் ஈழத்தமிழ் மக்களுக்காக இங்கு எத்தனை ஆரவாரங்கள் எழுந்தன. இன்று இவை அறவே ஓய்ந்து விட்டதற்கு என்ன காரணம். ஈழத்தமிழ் மக்களின் அற்புதமான போராட்டம் குறித்து இங்கு ஒரு காவியம் உண்டா? புதினம் உண்டா? கதைகள் உண்டா? தமிழ் படைப்பாளிகளுக்குள் இந்த முடக்கம் ஏன் நேர்ந்தது? எப்படி நேர்ந்தது?

இரண்டு தற்பொழுது தமிழில் ஒரு குழுவைத் தாக்கி இன்னொரு குழுவினர் கடுமையான விமர்சனம் என்ற முறையில் அழித்தொழிப்பை நடத்தி வருகின்றனர். இந்தப் போக்கு அறவே அடுத்த 25 ஆண்டுகளுக்கேனும் கூடாது. குணம் நாடுவது தற்போதைய தேவை, குற்றம் நாடுவது அன்று.

4. ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் கோவை கணபதியில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தினர் திட்டமிட்டு இரண்டு நாட்கள் நடத்திய மறுகாலனி ஆதிக்க எதிர்ப்பு மாநாடு பற்றி நம்மால் சிறப்பாகக் குறிப்பிட முடியும். 5000க்கு மேற்பட்ட மக்களை மாநாட்டுப் பந்தலில் திரட்டினார்கள். குறைந்த விலையில் தேநீர், உணவு முதலியவற்றைத் தந்தார்கள். கோத்தகிரி தேயிலைத் தொழிலாளிகளின் போராட்டத்தை குறும்படமாக வெளியிட்டார்கள். கேரளத் தோழர்கள் மக்கள் பயன்படுத்தும் சோப், 2 ரூபாய் அடக்கத்தில் தயாரிக்க முடியுமென செய்து காட்டினார்கள். ஏராளமான விவரங்களோடும், தெளிவான அரசியல் உணர்வோடும், உறுதியோடும் ம.க.இ.க. தலைவர்கள் உரையாற்றினார்கள். இன்றைய சூழலில் இவர்கள்தான் மார்க்சியத்தைப் பெரும் நம்பிக்கையோடு மக்களைத் திரட்டி நடைமுறைக்கு கொண்டு வரக்கூடியவர்கள் என்பதில் ஐயமில்லை. கோவையில் தொழிலாளர்களோ, தொழிற்சங்கத் தலைவர்களோ, படைப்பாளிகளோ மாநாட்டின் பக்கம் எட்டிப் பார்க்கவில்லை.

5. சென்னையில் அஷ்வகோஷ், பா. செயப்பிரகாசம், கவிஞர் இன்குலாப் ஆகியவர்களின் முன்முயற்சியோடு தமிழ் படைப்பாளிகள் முன்னணி என்ற ஓர் அமைப்பு உருவாகியுள்ளது. இதன் கொள்கை அறிக்கையை முன்வைத்து கோவையில் ஓர் திறனாய்வுக்கு நண்பர் குறிஞ்சி ஏற்பாடு செய்திருந்தார். அறிக்கையில் கண்டபடி இந்திய தேசியத்தையும், இந்துத்துவத்தையும் சமப்படுத்துவதை சிலர்

www.padippakam.com

கேள்விக்குட்படுத்தினார்கள். தமிழ் அடையாளம், தமிழ் மரபு என்பதன் ஆழ்ந்த பொருள் குறித்த ஆய்வுகளை இன்னும் வளர்த்தெடுக்க வேண்டும். அறிக்கையில் அரசியல் முக்கியத்துவத்தை இலக்கியம் / படைப்பு / திறனாய்வு பெறவில்லை. கொள்கை அறிக்கையை நகல் அறிக்கையாக வைத்துக் கொண்டால் மட்டுமே மாநில அளவில் படைப்பாளிகளை ஓர் அமைப்பினுள் திரட்ட முடியும். இப்படி ஓர் அமைப்பின் தேவையை இன்றைய சூழலில் நாம் கூடுதலாக உணர்கிறோம்.

6. "ஈராக்குக்கு எதிரான போரில் குவைத் நாட்டு இசுலாமிய பெண்கள் அமைப்பினர் தம் ஆதரவைத் தெரிவிப்பதற்கு முன் நிபந்தனையாக போருக்குப் பிறகு பெண்களின் உரிமைகளை அரசு ஏற்க வேண்டும் என்று விதித்தனர். சவுதி அரேபியாவில் பெண்கள் கார் ஓட்டக் கூடாது என்று அரசு தடைவிதித்த போதிலும் காரைச் செலுத்தி அரசின் தண்டனைகளை பெண்கள் ஏற்கின்றனர்.

வங்காள தேசத்தில் மனைவியை ஒதுக்கி வைக்க மூன்று முறை ஆண்கள் தலாக் சொல்வதை நீதிமன்றம் மறுத்துள்ளது. ஒத்துழைக்கும் மௌலவிகள் தண்டனைக்கு உரியவர்கள். பாகிஸ்தானின் இஸ்லாமியப் பெண்களின் இயக்கம் தீவிரமாகவே செயல்படுகிறது ஈரானிலும் இப்படி. உடைமையாளர்கள் தம் வசதி வாய்ப்புகளை உழைக்கும் மக்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று குரான் கூறுகிறது".

- கோத்தகிரியில் அஸ்கர் அலி என்ஜினியர்.

7. தேர்தல் முடிவுகள் நமக்கு அதிர்ச்சி தருகின்றன. அடித்தள மக்களின் மாபெரும் எழுச்சி என்று இந்தத் தேர்தலை இப்பொழுதேனும் படித்தவர்களாகிய நாம் புரிந்து கொள்ள முடியும். அடித்தள மக்கள் மீது மைய அரசும், மாநில அரசும் ஏற்றி வைத்த சுமைகளுக்கும், துயரங்களுக்கும் அளவில்லை. மைய அரசு நாளுக்கு நாள் தீவிரமாகத் திணித்து வந்த உலகமயமாதலை எதிர்த்து கலைஞர் ஒரு சொல் கூட சொல்லவில்லை. உலகமயமாதலை வைத்து நல்ல "விளைச்சலை" செய்து கொள்வதில் அக்கறையோடு இவர்கள் இருந்தார்கள். ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளாய் இப்பொழுது தாக்கி இருக்கிறது. நல்லவேளை வாரிசு அரசுரிமைக்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. புதிய அரசு எந்தத் தொழிற்சாலையைத் திறக்கமுடியும்? விலைவாசியை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? சமூகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஊடுருவி இருக்கிற ஊழலை ஒழிக்க முடியுமா? மைய அரசு தன்மீது

www.padippakam.com

குற்றம் இல்லை என்று கைகழுவிக் கொள்ள முடியாது. தமிழ் கல்விக்கு இனி என்ன வாய்ப்பிருக்க முடியும். தமிழ் மக்கள் தன்னுரிமைக்காக இயக்கம் நடத்துவது எப்படித் தீவிரவாதமாகும். நகரத்தவர், படித்தவர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் என்ற முறையில் வசதி வாய்ப்புக்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் அடித்தள மக்களை இனியாவது மரியாதையோடு புரிந்து கொள்வது நல்லது.

ஆட்சி அமைப்பில், அதிகாரத்தில் இனி எவ்வளவோ நடைபெறலாம். மக்களின் வாழ்க்கை மேம்படுவதற்கு வழி சிறிதும் இல்லை. மக்களின் ஏக்கப் பெருமூச்சு இனி என்னவெல்லாம் செய்யும். மதவாதம் மற்றும் சாதிமோதல் இல்லாமல் இந்த அரசியல்வாதிகள் வாழத்தான் முடியுமா? நெஞ்சு பொறுக்கவில்லை. எனினும் அடித்தள மக்களை நாம் பாராட்டுகிறோம்.

*- 14.5.2001*

## நண்பரின் மடல்

### *1. திரு. அலெக்சாண்டர் துபியான்ஸ்கி சந்திப்பு :*

தமிழ்நாட்டில் தமிழால் வாழ்க்கை நடத்தும் தமிழாசிரியர்கள் யாவரும் ஆங்கிலம் கலவாமல் தமிழ்ப் பேசுவதில்லை. அவர் அப்படி பேசினாலும் இச்சமூகம் அவருக்கு உரிய மரியாதையையும் அளிப்பதில்லை. இந்நிலையில் ஒருமணி நேர உரையாடலில் திரு. அலெக்சாண்டர் துபியான்ஸ்கி தமிழால் பிறமொழி கலவாமல் பேசினார் என்பதை படித்ததும் நான் வெட்கித் தலைகுனிந்தேன். சோவியத் யூனியன் தகர்ப்பிற்கு அவர் கூறிய காரணம் கண்டு வேதனையும் அடைந்தேன். மார்க்ஸை மண்ணுக்குள் புதைத்துவிட்டு முதலாளித்துவத்தை வளர்க்கின்றார்கள்; மேலும் சொந்த நாட்டு மக்கள் சோற்றுக்கு அலையும்போது ஆயுத உற்பத்தியில் அதிகப்பெருளை இழப்பதையும், ஆப்கானிஸ்தான் போர் செலவையும் அவர் சுட்டத் தவறவில்லை.

### *2. பேராசிரியர் இராஜநாயகம் சந்திப்பு :*

சாமிக்கண்ணு நாவலில் - மார்க்சியமும் தலித்தியமும், பின் நவீனத்துவமும் ஒரே மையத்தில் இணைந்திருப்பதாகக் கூறியுள்ளீர்கள். பின் நவீனத்துவம் எழுப்பும் தத்துவப் பிரச்சனைகள் பல மார்க்சியத்தாலும் எழுப்பப்பட்டவையே. அறிவுக்கும் உண்மைக்கும் இடையிலான உறவு நேர்கோடானதல்ல என்பார் மார்க்ஸ். பின்

www.padippakam.com

நவீனத்துவம் போலவே மார்க்சியமும் தனிமனித மையம், ஒட்டு மொத்த மானுட மையம் ஆகியவற்றை தவிர்த்தே வந்துள்ளது. இதைத்தான் புதுவை ஞானம் தனிமனிதர் என்ற முறையில் எவர் ஒருவர் வாழ்விலும் நிகழும் துயரங்கள் மார்க்சிய ஆய்வில் இல்லை என்கின்றார்.

குஜராத்தின் கோரம் பற்றி அனைத்து தொலைகாட்சிகளும் மற்றும் நாளிதழ், வார இதழ், மாத இதழ் போன்ற பத்திரிக்கைகளும் பக்கம் பக்கமாக படங்களுடன் விளக்கியதால் இந்திய மக்களின் ஒட்டுமொத்த கவனமும் அங்கு திருமபியது. தாங்கள் (ஞானி) கூறுவதுபோல் நாம் அனைவரும் அதிர்வுகளுக்குள்தான் வாழ்வைத் தேடுகின்றோம். சதிசெய்யும் நிதிநிலை அறிக்கையை நன்கு உடைத்துக் காட்டியுள்ளீர்கள். இராணுவத்திற்கு 62,000 கோடியல்ல 79,000 கோடி ஒதுக்கியுள்ளார்கள். தமிழ்த் தேசியம், காவிரிக்கான இயக்கம், முல்லை பெரியாறு பேச்சு, சுற்றுச்சூழல் மாசு, தாமிரப்பரணி படுகொலை, இறால் பண்ணைகளை எதிர்க்கும் பெரியவர் செகநாதன் மீது 20-க்கும் மேற்பட்ட குற்றவியல் பிரிவுகளில் சிறைவாசம், இவற்றை எல்லாம் எந்தத் தமிழ் இதழும் எழுதவில்லை. நடிகைகளின் திருமணத்தையும் கிசுகிசுகளையும் எழுதி தமிழனை வெறியர்களாக மாற்றுகின்றன.

பாரதி, பாரதிதாசன், ஜீவா, மார்க்ஸ், பாப்லோ நெருடா இவர்கள்தான் எனது இலக்கிய ஆசான் என்றும் இறுதிமூச்சு நிற்கும்வரை இந்த கொள்கையில் இருந்து தடம் புரள மாட்டேன் என்றும் வாழும் தி.க.சி.யை இன்னும் மனம்திறந்து தாங்கள் பாராட்டலாம். தமிழ் ஈழம் கட்டுரையில் (இராவணா) ஈழத் தமிழனின் இதயத்தைப் பார்த்துப் புல்லரித்துப் போனேன். சொல்லாட்சியும் கருத்தாழமும் துவண்டு போனவர்களையும் தூக்கி நிறுத்தக்கூடிய கட்டுரையது. ம.ரா.போ. குருசாமியின் சொந்த நாட்டு அன்னியர்கள் கட்டுரையை இரண்டு முறைபடித்தேன். ஆங்கிலப் பள்ளிகள் முளைத்ததற்கு அரசியல்வாதிகள் மட்டும் காரணமில்லை. ஆசிரியர்களுக்கும் அதில் பெரும் பங்குண்டு. இன்று எந்த ஆசிரியரும் தமிழ்வழிக் கல்வியில் தன் குழந்தைகளை படிக்க வைப்பதில்லை. ஆங்கில வழிப்பள்ளிகளில் (மெட்ரிக் பள்ளிகள்) இலக்கியமன்ற ஆண்டுவிழா என்று கூறிக்கொண்டு ஆபாசதிரை நடனங்களை அரங்கேற்றுகின்றனர்.

இராஜேஸ்வரி பாலசுப்ரமணியனின் "மனிதனும் மொழியும்" கட்டுரையில் தமிழ்நாட்டில் வாழும் படித்தவர்களின் பண்பற்ற செயலை படம் பிடித்துள்ளார். வள்ளலாரின் சமுதாயப் பணியை முனைவர் கி. சுப்ரமணியம் அவர்கள் பளிச்சென பறைசாற்றுகின்றார்.

படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்து அவரை எழுதச் சொல்லுங்கள். ம.இலெ. தங்கப்பாவின் கவிதை வரிகள் உண்மையாகச் சொல்லவேண்டுமேயானால் அனைத்து வரிகளும் அசல் தங்கம். ஷிபாவின் "தொலைந்துபோன குழந்தைகள் உலகம்" கட்டுரை சற்று நெருடலாக உள்ளது. "இளமையில் கல்வி சிலைமேல் எழுத்து" இளம் பருவத்தில் கல்விக் கண்ணைத் திறக்காது போனால், அவர்கள் நச்சு வித்துக்களாக மாறி விடுவார்கள். எனவே செதுக்கவேண்டியதை செதுக்கினால்தான் அழகிய சிலை கிடைக்கும். துரை அவர்களின் தமிழிலக்கிய ஆய்வை வைத்துக் கொண்டு முனைவர் க. பஞ்சாங்கம் அனைத்து ஆய்வாளர்களையும் சாடுவது சற்று பொறுக்கமுடியவில்லை. "பட்டத்திற்காகப் பக்கங்களை நிரப்பி வைக்கும் ஆய்வேடுகள் ஆராய்ச்சி (72ஆம் பக்கம் 22-வது வரி) என்றவரி இளம் ஆய்வாளர்களை முளையிலேயே கிள்ளுவதாகும். மொத்தத்தில் 88 பக்கங்களும் தமிழனின் நாடி நரம்புகளை சுண்டி விடுவதுபோல் உள்ளது. தமிழ்நேயம் தொடர வாழ்த்தும் அன்பன் ...."

- ***ஜெ. இராமதாஸ்***, அன்னூர்

***

மீண்டும் தமிழ்நேயம் வருவது பற்றி மிக்க மகிழ்ச்சி.

தமிழ்த்தேசியம் என்ற அரசியலை பேசுபவர்கள் ஒற்றை பரிமாணத்தில் மட்டுமே பேசுகின்றனர். நீங்கள் மட்டும்தான் தமிழ் தேசத்தின் பொருளியல் என்றும், இயற்கை வேளாண்மை என்றும், தமிழ்க்கல்வி என்றும், மருத்துவம் என்றும், வரலாறு என்றும் பலபடியாக பேசுகின்றீர்கள். உலக மயமாதல் தமிழ் மக்களுக்கு என்னவெல்லாம் கேடுகள் செய்யும் என்பதை உரத்துச் சொல்கிறீர்கள். உழவர்கள், கைவினைஞர்கள், பெண்கள், தலித் மக்கள் ஆகியவர்களின் வாழ்க்கை உலகமயமாதலின் விளைவாக என்னென்ன கேடுகளுக்கு உள்ளாகும் என்பதை நீங்கள் சொல்லும்பொழுது மிகுந்த வேதனை ஏற்படுகிறது. தமிழ் மட்டும் அல்ல காவிரி நமக்கு வேண்டும். முல்லை பெரியாறு அணை நமக்கு வேண்டும். சமத்துவமும் சமதர்மமும் இல்லாமல் நமக்கு முடியாது. பெரியாரோடு மார்க்சும் நமக்கு வேண்டும். இத்தனை அக்கறைகளோடு தமிழின் நெடுங்கால இலக்கியத்தின் மீதும் உங்கள் பார்வையைச் செலுத்துகிறீர்கள். தமிழ்நேயம் தொடர்ந்துவர எங்கள் ஒத்துழைப்பு பெரிதும் உண்டு.

- ***மு. குமரவேல், மு. பாலசுப்பிரமணியம்***
உலக அறவி, கோவில்பட்டி

படிப்பகம்

www.padippakam.com

# ஞானி / தமிழ்நேயம் / நிகழ் நூல்கள்

1. தமிழில் படைப்பியக்கம் (கட்டுரைத் தொகுப்பு)
   வெளியீடு : காவ்யா, விலை : ரூ. 75/-
2. அறிவியல், அதிகாரம், ஆன்மீகம்
   நிகழ் கட்டுரைத் தொகுப்பு - காவ்யா, விலை : ரூ. 60/-
3. இந்தியாவில் தத்துவம், கலாச்சாரம்
   நிகழ் கட்டுரைகள் - காவ்யா, விலை : ரூ. 65/-
4. மார்க்சியம் - தேடலும், திறனாய்வும்
   நிகழ் கட்டுரைகள் - புதுமலர் பதிப்பகம், விலை : ரூ. 80/-
5. மார்க்சியத்தின் எதிர்காலம் - கட்டுரைத் தொகுப்பு
   விலை : ரூ. 30/-
6. மார்க்சியத்தின் புதிய பரிமாணங்கள்
   பரிமாணம் கட்டுரைகள் - புதுமலர் பதிப்பகம்
   விலை : ரூ. 70/-
7. தமிழன் வாழ்வும் வரலாறும் - ஞானி விலை : ரூ. 25/-
8. விடுதலை இறையியல்
   நிகழ் கட்டுரைகள், விலை : ரூ. 25/-
9. புதிய தலைமுறை - அ. தமிழரசி விலை : ரூ. 25
10. இருபது நூற்றாண்டு தமிழ்
    இருபதாம் நூற்றாண்டுப் பார்வை - ஞானி, விலை : ரூ. 20/-
11. கவிதையிலிருந்து மெய்யியலுக்கு - ஞானி, விலை : ரூ. 20/-
12. முத்துப்பொருநன் கவிதைகள் விலை : ரூ. 20/-
13. உடலே சவப்பெட்டியாக (பெண் எழுத்தாளர் சிறுகதைகள்)
    விலை : ரூ. 30/-
14. காற்றாய் புயலாய் (பெண் எழுத்தாளர் சிறுகதைகள்)
    விலை : ரூ. 30/-
15. மார்க்சியத்தின் அழகியல் (அச்சில்)


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்நேயம் 2 இன் உள்ளடக்கம் என்ன? கோர முகத்தோடு உலகமயம் நம் தேசத்தையும், மக்களையும் அழிக்க முனைகிறது. இதை எதிர்த்து முறியடிக்க நமக்குள் உள்ள ஆற்றல்களை எப்படித் திரட்டிக் கொள்ளப் போகிறோம்.

20-ஆம் நூற்றாண்டுச் சூழலில் தான் மதங்களுக்கு எதிரான சமத்துவம், சமதர்மம் ஆகியவற்றை வரலாற்று அனுபவங்களிலிருந்து நாம் கற்றுக் கொண்டோம். தமிழ் மரபினுள் இவற்றை நம்மால் அடையாளம் கண்டு தொகுத்து வலுப்படுத்துவதன்மூலம் தமிழ்மக்களை ஒன்றுபடுத்த நம்மால் முடியும்.

தமிழ் ஆன்மாவை தேடும் முறையில் சித்தர் இலக்கியத்தை நாம் மையப்படுத்துகிறோம். சமத்துவம், சமதர்மம் ஆகிய கருத்தாக்கங்களின் வழியே தலித் மற்றும் பெண்களை உள்ளடக்கிய தமிழ் மக்களின் விடுதலை குறித்து நம்மால் பேசமுடியும்.

தமிழ்த் தேசியம் என்பதை அரசியல் என்ற ஒற்றைப் பரிமாணத்தில் நம்மால் ஒடுக்கமுடியாது. இலக்கியம், மெய்யியல், இயற்கை வேளாண்மை, தாய்த்தமிழ் பள்ளி என்று பலமுனைகளில் தமிழியத்தை நாம் தொகுக்க முனைந்திருக்கிறோம். நண்பர்களின் ஒத்துழைப்பை வேண்டுகிறோம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் :
**கி.பழனிச்சாமி (ஞானி)**
123, காளீசுவரர் நகர், கோயமுத்தூர் 641 009 தொலைபேசி : 235040

அச்சாக்கம் :
**விஷ்ணு அச்சகம்,**
10வது வீதி, காந்திபுரம், கோயமுத்தூர் - 641 012 தொலைபேசி : 493093

படிப்பகம்